# உதயன்




28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 285 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 21 வியாழக்கிழமை (06/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

www.onlineuthayan.com


# கிழக்கில் நீதியான தேர்தலை உடனடியாக உறுதிப்படுத்துக

## அரசின் வன்முறை குறித்து சம்பந்தன் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, செப்ரெம்பர் 6

நீதியானதும், நியாயமானதுமான தேர்தலொன்றை கிழக்கு மாகாணத்தில் நடத்துவதற்கும், சட்டவிரோதமான வகையில் தேர்தல் முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**இத்தகைய சூழ்நிலை ஒரு நாட்டுக்கு உகந்ததல்ல. சர்வதேச கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கும் ஒரு நாட்டின் மீதான அழுத்தத்தையும் இது இறுக்கப்படுத்த ஏதுவாகிவிடும்.**



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பின்னணியில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்களைப் பட்டியலிட்டு ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள சம்பந்தன், நாட்டின் தலைவர் என்ற ரீதியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியிலும் இந்த விடயங்களைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பார்க்க பக்கம் 4

**2** தமிழகத்தின் சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலையில் வெடி விபத்தில் 46 பேர் உடல் சிதறிச் சாவு

**5** வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் நியமன இழுபறிக்குத் தீர்வு காணுமாறு இந்து மகா சபை அறிக்கை

**8** இந்தியாவின் மிக நீளமான சொகுசு பஸ் பெங்களூர் - மைசூர் இடையே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**9** 2100 நளிகளை தலையில் ஏற்றி கனேடியத் தமிழர் ஒருவர் கனடாவில் சாதனை நிலைநாட்டியுள்ளார்.

## கிழக்கில் வெற்றி நிச்சயம்

### சரவணபவன் எம்.பி. உறுதி

கொழும்பு,செப் 6

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடும் ஒரு தமிழரைக்கூட கிழக்கு மக்கள் ஆதரிக்கக்கூடாது. அவர்களை முற்றாகத் தோற்கடிக்க வேண்டும். முள்ளிவாய்க்காலில் எம் உறவுகள் தங்கள் உயிரை ஈகம் செய்தனர். அதன் மூலம் போர்க்குற்ற அறிக்கை என்ற ஆயுதத்தை அவர்கள் எம்மிடம் விட்டுச் சென்றுள்ளார்கள். எனவே, நாம் அனைவரும் ஒன்றுபட்டு இத் தேர்தலில் வீட்டுச்சின்னத்திற்கு வாக்களிப்பதே எமது உறவுகளுக்குச் செலுத்தும் நன்றிக்கடனாகும்.

- இவ்வாறு அழைப்பு விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு

பார்க்க பக்கம் 4

## மாவை எம்.பி. தங்கியிருந்த அலுவலகம் மீது தாக்குதல்

### கல்முனையில் நேற்று அதிகாலை சம்பவம்

அம்பாறை, செப்.6

கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாண்டிருப்பு நற்பிட்டிமுனை வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட அலுவலகம் மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ள இந்தக் கல்லெறித் தாக்குதலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அந்த அலுவலகத்தில் தங்கியிருந்துள்ளார்.

பார்க்க பக்கம் 4

## பல்கலைகள் அனைத்தும் இன்று திறப்பு

கொழும்பு,செப் 6

நாட்டில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இன்று வியாழக்கிழமை மீண்டும் திறக்கப்படும் என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## இலங்கையர் மீதான தாக்குதல் இந்திய அரசின் கவனத்துக்கு

கொழும்பு,செப் 6

இலங்கைப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு பயணம் செய்கின்றபோது தாக்குதலுக்கு உள்ளாவதால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசை இலங்கை கோரவுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

''இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நல்லதொரு உறவு நிலவுகிறது. அதேபோல் வெளிவிவகார அமைச்சுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்துக்

பார்க்க பக்கம் 4

## கற்பிட்டியில் மர்மப் பொருள் வெடித்து இருவர் சாவு; 6 பேர் காயம்

கொழும்பு,செப் 6

கற்பிட்டி கண்டல்குழி சிவில் பாதுகாப்புப் படை முகாமுக்கு அருகிலுள்ள கடற்கரையில் நேற்று மர்மப் பொருள் ஒன்று வெடித்ததால் இளைஞர்கள் இருவர் உயிரிழந்ததாகவும் நான்கு சிறார்கள் உட்பட 6 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மர்மப்பொருள் ஒன்றைக் கண்டெடுத்து அதை அழுத்தியபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

காயமடைந்தவர்கள் கற்பிட்டி வைத்தியசாலை

பார்க்க பக்கம் 4

## யாழில் 8 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர வேண்டி உள்ளன

### மாவட்ட செயலக அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், செப். 6

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் யாழ். மாவட்டத்தில் 8 ஆயிரத்து 295 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 116 பேர் இன்னமும் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக வேறு இடங்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் உள்ளனர் என யாழ். மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 31 ஆம் திகதி வரையான யாழ். மாவட்ட மீள்குடியமர்வு பற்றிய யாழ். செயலக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில பகுதிகள் தொடர்ந்தும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளன. இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் புதிதாக எந்தவொரு இடத்திலும் மக்கள் மீளக்குடியமர அனு

பார்க்க பக்கம் 4

## அமைச்சர் ரிஷாத்தின் ஆட்சேபங்களை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்று

கொழும்பு, செப் 6

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், அமைச்சரின் ஆட்சேபனைகளை மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்து இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி 13 ஆம் திகதிக்கு நேற்று ஒத்திவைத்துள்ளது.

நீதியரசர்கள் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, தீபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிவாதியான ரிஷாத் பதியுதீன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, மூன்று முதனிலை ஆட்சேபங்களைத் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## 2000 படையினர் பங்கேற்கும் இராணுவ ஒத்திகை கிழக்கில்

மட்டக்களப்பு,செப் 6

சுமார் 2 ஆயிரம் இலங்கைப் படையினர் பங்கேற்கும் கூட்டு இராணுவ ஒத்திகை, அடுத்தவாரம் மட்டக்களப்பு, வாகரையில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையின் முப்படையினர் மற்றும் வெளிநாட்டுப் படையினர் இந்தப் போர்ப்பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.

நீர்க்காகம் III 2012 என்ற பெயரில் இந்தப் போர்ப் பயிற்சியை இலங்கை இராணு

பார்க்க பக்கம் 4

## தேர்தல் பிரசார நடவடிக்கை இன்றுடன் முடிவு

கொழும்பு,செப் 6

நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ள கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களுக்கான

பார்க்க பக்கம் 4

## தமிழகம் உட்பட பல மாநிலங்களில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சி

### இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

புதுடில்லி,செப் 6

இலங்கைப் படையினருக்கு தமிழகம் உட்பட வெவ்வேறு மாநிலங்களில் பயிற்சிகள் வழங்கப்படுவதாக இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

''ஆம் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளின் பாதுகாப்புப் படையினருக்குப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. தமிழ் நாட்டில் வெலிங்டன் பாதுகாப்புச் சேவை உத்தியோகஸ்தர்கள் கல்லூரியில் இலங்கையர் இருவருக்கு பயிற்சியளிக்கப்படுகிறது'' எனக் கேள்வியொன்றுக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.

தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி எழுப்பிய கேள்வியொன்றுக்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு மாதங்களில் மட்டும் 24 டெங்கு நோயாளர்கள்

## பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவில்

வடமராட்சி,செப்.6

வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த இரு மாதங்களில் 24 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 22 பேருக்கும், இம் (செப்ரெம்பர்) மாதம் 2 பேருக்கும் டெங்கு நோய் பீடித்து இருப்பதை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் கண்டுபிடித்து அந்த நோயாளர்களின் விதிவிடச் சுற்றாடலில் டெங்கு நோய்த் தடுப்பை தீவிரப்படுத்தி புகையூட்டல்களையும் மேற்கொண்டனர்.

**இந்த நோயாளர்கள் அனைவரும் கொழும்பில் சிலகாலம் வசித்து வந்துள்ளார்கள். அங்கேயே இவர்களுக்கு டெங்குநோய் வைரஸ் பீடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இந்த நோயாளர்கள் அனைவரும் கொழும்பில் சிலகாலம் வசித்து வந்துள்ளார்கள். அங்கேயே இவர்களுக்கு டெங்குநோய் வைரஸ் பீடித்துள்ளதாகவும், இப்பிரதேசத்தில் டெங்கு நோயால் எவரும் பாதிக்கப்படவில்லை எனவும் டெங்குநோய்ப் பரம்பலைத் தடுக்க இறுக்கமான சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. (த-8)

### கப்பலில் இந்தோனேஷிய பிரஜை மரணம்

கொழும்பு,செப் 6

கப்பல் ஒன்றில் இந்தோனேஷியப் பிரஜை ஒருவர் மின்சார தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

மின் கோளாறு ஒன்றைத் திருத்தும் சமயத்தில் இவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இந்தோனேஷியப் பிரஜை ஒரு தொழிநுட்பவியலாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மோதரை பொலிஸார் மேற்கொண்டனர்.

பிரேத பரிசோதனை முடிவடைந்துள்ள நிலையில், மின்தாக்குதலின் காரணமாகவே இந்தோனேஷியப் பிரஜை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

### தங்காலை பிரதேசத்தில் தீ

பதுளை மாவட்டம், ஹப்புத்தளை, தங்காலை பிரதேசத்தில் வனப் பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

ஹப்புத்தள்ளை தொடக்கம் இதல்ஹஸ்ஸின்ன வரையான ரயில் பாதை நிலையம் இரண்டுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பிலேயே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பாதையில் போக்குவரத்தில் ஈடுபடும் ரயில்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருவதாகப் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (த)

### காரைநகரில் கரையொதுங்கும் பெரும்தொகை கலவாய் மீன்கள்

#### கடலில் ஏதாவது மாற்றம் நிகழுமா என்று அச்சம்

*யாழ்ப்பாணம், செப். 6*

*காரைநகர் வடக்கு கடற்பரப்பில் வழமைக்கு மாறாக மீன்கள் கரையொதுங்கியுள்ளன. இதனால் மீனவர்களும் கடற்கரையை அண்டி உள்ளவர்களும் பெரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளனர் என காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.ராஜசந்திரன் தெரிவித்தார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*காரைநகர் வடக்கு கடற்பரப்பில் பெரும் தொகையான கலவாய் மீன்கள் திடீரெனக் கரையொதுங்கியுள்ளன. இந்த மீன்கள் ஒவ்வொன்றும் 3 தொடக்கம் 4 கிலோ எடை கொண்டவையாக உள்ளன. இவை கரையொதுங்கியவேளை மயக்கமுற்று அரை உயிரில் காணப்படுகின்றன.*

*கடலில் பயணிக்கும் கப்பல்களில் ஏற்படும் எண்ணெய்க் கசிவினால் இவை இவ்வாறு கரையொதுங்கி இருக்கலாம் அல்லது கடலில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான முன் எச்சரிக்கை, கடற் சூழலில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளனவா என்றும் எண்ணத் தோன்றுகிறது.*

*மீன்கள் இவ்வாறு கரையொதுங்கியுள்ளமையால் அப்பகுதி மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்து காணப்படுகின்றனர். இந்த நிலை கடந்த 3 தினங்களாகத் தொடர்ந்து வருகின்றது என்றார்.*

*மேலும் இந்த நிலை தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*(த-13)*

### வைத்தியசாலை ஊழியர் மீது தாக்குதல்

#### நாடளாவிய ரீதியில் நேற்று எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப்.6

அரச வைத்தியசாலை ஊழியர் சங்கமான சிக்கன கடனுதவிச் சங்க உறுப்பினர்கள் நால்வர் பொலநறுவையில் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் ஊழியர்கள் நேற்றுமதியம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்களும் நேற்று மதியம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வைத்தியசாலை ஊழியர்களின் பிள்ளைகளில் கடந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பொலநறுவையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் புகுந்த அரச தரப்பைச் சேர்ந்த தம்மன் கடுவை பிரதேசசபைத் தலைவர் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட தாக்குதலிலேயே நால்வரும் படுகாயமடைந்தனர் என்று வைத்தியசாலை ஊழியர் சங்கமான ஸ்ரீலங்கா ஜனரய சௌத்திய சேவைச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

படுகாயமடைந்த நால்வரும் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கிலே நேற்று ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-4)

**பழைய விலைக்கே பால்மா விற்பனை**

### வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

கொழும்பு, செப்.6

நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு குழந்தைகளுக்கான பால்மாவை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையில் சுற்றிவளைப்புக் குழுக்கள் ஈடுபட்டன என்று அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் தெரிவித்தார்.


அரசு குழந்தைகளுக்கான ஏழு பால்மா வகைகளின் விலைகளை சில மாதங்களுக்கு முன்னர் குறைத்திருந்தது.

எனினும், ஒருசில நிறுவனங்கள் அந்த விலைக் குறைப்பை கவனத்திற்கொள்ளாது முன்னைய விலைக்கே தமது உற்பத்திகளை சந்தைக்கு விநியோகித்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அவர் கூறினார்.

நிர்ணய விலையை விடக் கூடுதல் விலைக்கு குழந்தைகளுக்கான பால்மாவை விநியோகிக்கும் மற்றும் விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

# சிவகாசி பட்டாசு ஆலையில் பயங்கரத் தீ

## 46 பேர் உடல் கருகிச் சாவு! பலர் படுகாயம்







சென்னை, செப் 6

சிவகாசியில் முதலிப் பட்டி என்ற பகுதியில் இருந்த ஓம்சக்தி பட்டாசு ஆலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் சிக்கி பலியானவர்களில் 46 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த விபத்தில் இன்னும் பலர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். காயமடைந்து மருத்துவனையில் சேர்க்கப்பட்டவர்களில் சிலர் மரணமடைந்ததை அடுத்து சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

சிவகாசி அருகில் உள்ள முதலிப் பட்டியில் ஓம் சக்தி பட்டாசு ஆலையில் ஆலை வாயிலில் உள்ள அலுமினியம் கலவை செய்யும் ஓர் அறையில்தான் முதலில் வெடி விபத்து நேர்ந்தது என்றும் அந்த அறை பயங்கரமாக வெடித்துச் சிதறியதும், பலர் ஓடத் தொடங்கினர் என்றும் தெரிகிறது. இதை அடுத்து, வெடி விபத்து நிகழ்ந்த இடத்தை வேடிக்கை பார்க்க பலர் கூடியுள்ளனர்.

இந்நிலையில், வெடி பொருள்கள் தீப்பிடித்து, மேலும் பல அறைகளுக்குப் பரவியுள்ளது. இதனால், வேடிக்கை பார்க்க வந்தவர்கள் மீது பட்டாசுகள் பட்டு தீக்காயம் அதிகமாகியுள்ளது.

வெடி விபத்து பட்டாசு ஆலையின் முகப்பில் நிகழ்ந்ததால், அங்கே எழுந்த புகை மூட்டத்தில் உள்ளே இருந்தவர்களில் பலர் வெளியே தப்பித்து வர இயலவில்லை.

வெளியே வேடிக்கை பார்த்த பலர் வெடி விபத்துக்கு பலியாகியுள்ளனர். உள்ளே சிக்கிக் கொண்டிருப்பவர்கள் குறித்து உடனடித் தகவல் இல்லை.

தீயை அணைக்கவும், சிதறிய கட்டடங்களில் இருந்து மீட்கவும் தீயணைப்பு வாகனங்கள், ஜே.பி.சி. இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன. இந்தப் பட்டாசு ஆலையில், வேடிக்கை பார்க்கவும், பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும் வந்த பொதுமக்கள் பலரும் இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பட்டாசு தயாரிக்க ரசாயனங்களை கலந்தபோது ஏற்பட்ட உராய்வில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், ஆலை முழுவதும் பட்டாசுகளும், ரசாயனங்களும் நிறைந்து இருந்ததால் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இந்த விபத்தில் பட்டாசு ஆலை முழுவதும் எரிந்து தீக்கிரையானது. பட்டாசு வெடிபொருள்கள் வெடித்துச் சிதறியதில் சுமார் 40 அறைகளும் இடிந்து விழுந்து தரைமட்டமாகியுள்ளன. இந்த ஆலையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் வேலை செய்து வந்ததால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

பல தனியார் மருத்துவமனைகள் தாங்களாக முன்வந்து அம்புலன்ஸ் வாகனங்களையும், மருத்துவ உதவிக் குழுக்களையும், விபத்து நடந்த பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளன. அருகில் உள்ள ஊர்களில் இருந்தும் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. இப்போதும் சில அறைகளில் பட்டாசுகள் வெடித்த வண்ணம் உள்ளன. இதனால் அப்பகுதியை நெருங்கவே முடியாமல் தீயணைப்பு வீரர்கள் கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேம்படி அதிபர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுங்கள்

## பழைய மாணவிகள் போராட்டம்; யாழ். அரச அதிபரிடம் மனு





*யாழ்ப்பாணம், செப்.6*

*யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்குமாறு வலியுறுத்தி கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தினரும் பெற்றோரும் கல்லூரி முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்லூரி அதிபர் யார் என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வலியுறுத்துமாறு கோரி யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் மனு ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.*

"வேம்படிக்கு வேண்டும் நிரந்தர அதிபர்", "கல்விப் புலமே, குழப்ப நிலையை நியாயமாகத் தீர்த்து வை", "பொதுச் சேவை ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்ட அதிபரிடம் பொறுப்புக்களை கையளி" ஆகிய சுலோகங்களைப் பொறித்த 'பனர்களை' தாங்கிய வண்ணம் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த போராட்டத்தின் இறுதியில் தமது கோரிக்கை அடங்கிய மனுவை யாழ். அரச அதிபரிடம் கையளித்தனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஜீ.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சை நடைபெறவுள்ள நிலையில் இந்தப் பிரச்சினை மாணவர்களின் கல்விப் புலத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வழி அமைத்துவிடும். இது கல்லூரிக்கு ஆரோக்கியமான நிலையாக அமையாது.

யாழ். கல்வி வலயம் மாகாணத் திணைக்களம், மாகாண அமைச்சு என்பன விடுமுறைக் காலத்தில் கூட நடவடிக்கை எடுக்காததைச் சுட்டிக்காட்டி கடந்த 3 ஆம் திகதி கடிதம் வழங்கியும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

கல்வி அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை யாழ்ப்பாணத்தின் கல்வித் தராதரத்தை வீழ்ச்சிக்கும் பாடசாலை நிர்வாக ஒழுங்கீனத்துக்கும் அடிகோலும்.

அதிபர் பிரச்சினையால் மாணவர் கல்வி, கல்லூரியின் புகழ் பாதிக்கப்படுகிறது.

கடந்த தவணைப் பரீட்சை விடைத்தாளைப் பார்வையிட பெற்றோர் அழைக்கப்படவில்லை. பாடசாலையில் நிறுவுநர் தினம், பரிசளிப்பு விழா உட்பட பல வருடாந்த நிகழ்வுகள் நடத்தப்படவில்லை.

கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நிர்வாகச் சீர்கேடும் உள்ளது. முறையான இடமாற்றம் இருக்கும்போது இடமாற்றம் பெற்ற பிரதி அதிபர், அதிபர் என்ற ரீதியில் கையொப்பமிடும் ஆவணங்கள் செல்லுபடியற்றதாகும் நிலை உள்ளது. இதற்குக் கல்வி அதிகாரிகளும் துணை போகின்றனர்.

கடந்த ஜூலை மாதம் கல்லூரி அதிபராக திருமதி வேணுகா சண்முகரட்ணம் நியமனம் செய்யப்பட்டும் பொறுப்புக்கள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம், பொதுச் சேவை ஆணைக்குழு, கல்வி அமைச்சரின் பிரத்தியேக செயலர், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோரிடமிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை அதிபர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் யாரென்பதை கல்வி அமைச்சு அல்லது கல்வித் திணைக்களம் வெளிப்படையாக அறிவிக்க யாழ். அரச அதிபர் வலியுறுத்த வேண்டும் என்று அரச அதிபருக்கு வழங்கியுள்ள மனுவில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் போராட்டம் தொடரும் என்று பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-4)

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டால் சிரமத்தில் கரையோர மக்கள்

யாழ்ப்பாணம், செப்.6

தற்போது தொடர்ச்சியாக நிலவும் வறட்சியான கால நிலையால் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ். கரையோர மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், பாஷையூர், சுண்டுக்குளி, அரியாலை, மணியந்தோட்டம், நாவலடி, பூம்புகார் போன்ற இடங்களில் கிணறுகளில் தண்ணீர் மட்டம் மிகவும் அடிநிலைக்குச் சென்றுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள குளங்கள் வற்றிப் போனமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

**இந்தப் பகுதிகளில் உள்ள குளங்கள் வற்றிப் போனமையே இதற்குக் காரணம்.**

இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான நிலைமை ஏற்படாது இருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுத்து குளங்களைப் புனரமைக்க முன்வரவேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ம-17)

# பனாட்டு உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.6

பனை அபிவிருத்திச் சபை இந்த முறை பனாட்டு உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டியுள்ளது என்று சபையின் தலைவர் ப.சீவரெத்தினம் தெரிவித்தார்.

தற்போது பனம்பழ சீசன் ஆரம்பித்துள்ள நிலையில் பெருமளவில் அவற்றைச் சேகரித்துப் பனாட்டு உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு பனம் பழத்தில் இருந்து இயந்திரம் மூலம் அரை லீற்றர் வரை கழி பெறப்படுகிறது.

இந்தப் பனங்கழி ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பனாட்டு உற்பத்திக்கு வழங்கப்படுகிறது.

இதேவேளை கடந்த போகத்தில் பனாட்டு உற்பத்தியில் பனை அபிவிருத்திச் சபை அதிக அக்கறை காட்டவில்லை.

இதனால் பனாட்டுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவி வந்ததுடன் அதன் ஏற்றுமதியிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுக் காணப்பட்டது.

இந்தத் தட்டுப்பாட்டால் கிலோ ஆயிரம் ரூபா தொடக்கம் ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது- என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

# பருத்தித்துறை – மன்னாருக்கு இ.போ.சவின் சேவை தேவை

வடமராட்சி, செப் 06

பருத்தித்துறையிலிருந்து மன்னாருக்கு புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை ஆளும் தரப்பு உறுப்பினர் ந.நிரஞ்சன் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்களில் வடமராட்சியைச் சேர்ந்த பலர் பணியாற்றி வருகின்றார்கள்.

இங்குள்ளோரின் உறவுகளும் மன்னார் மாவட்டத்தில் வசித்து வருகின்றனர். இவற்றை கருத்தில் கொண்டு பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரி, பூநகரி ஊடாக மன்னாருக்கு புதிய சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென அந்தக் க்கோரிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ அதிகாரி, புதிய பஸ் சேவையை ஆரம்பிக்க போதிய பஸ்கள் இல்லை. இருப்பினும் இது தொடர்பாக மேலிடத்துக்கு எடுத்துக்கூறி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவண செய்வோம் எனக் கூறினார். (ம-8)

# 'என்றிப்' திட்ட வேலைகள் வலி. வடக்கில் முடியவில்லை

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம, செப்.6

வலி.வடக்கு பிரதேசத்தில் 'என்றிப்'திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன.

21.4 மில்லியன் ரூபா நிதி 5 வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு இந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் முடிவுறுத்துமாறு அறிவிக்கப்பட்ட போது இதுவரையில் வேலைத் திட்டங்கள் முடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த வருடம் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வலி.வடக்குப் பிரதேசத்துக்கான 'என்றிப்' வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கீரிமலையில் பஸ் நிலையம் அமைப்பதற்கு 1.27 மில்லியன் ரூபாவும், தெல்லிப்பழை பஸ் நிலையம் அமைப்பதற்கு 1.27 மில்லியன் ரூபாவும் வலி. வடக்குப் பிரதேச சபையின் உப அலுவலகம் கொல்லன்கலட்டியில் அமைப்பதற்கு 5.92 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பழை வியாபார நிலையம் அமைப்பதற்கு 6.47 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பழை பொது நூலகம் அமைப்பதற்கு 6.47 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வேலைகள் யாவும் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டபோது இதுவரையில் அந்த வேலைகள் முடிக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைகளைப் பொறுப்பெடுத்த நிறுவனத்தின் இயக்குநராக வலி. வடக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி (ஈ.பி.டி.பி) உறுப்பினர் ஒருவரே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

# கைதடியில் பனை எழில் நகர் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

## உல்லாசப் பயணிகளை கவரும் திட்டம்

யாழ்ப்பாணம், செப்.6

பனை உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிக்கும் முகமாக கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு முன்பாக 'பனை எழில் நகர்' எனும் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவிக்கையில்:

பனை சார்ந்த கண்காட்சி நிலையம், பனை உற்பத்திப் பொருள்களை தயாரிக்கும் நிலையம், அவற்றைச் சந்தைப்படுத்தும் வசதிகள் மற்றும் உணவு பரிமாறும் பகுதிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையவுள்ள இந்தப் பனை எழில் நகர் மூலம் பனை உற்பத்திப் பொருள்களின் சந்தைப்படுத்தல்களை ஊக்குவிக்க முடியும் என நம்பப்படுகின்றது. இதற்கு என சுமார் 8 பரப்புக் காணி பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

**5 மில்லியன் நிதி கட்டடப் பணிகளுக்கு ஒதுக்கப்படவுள்ளது.**

[illegible] இந்தத் திட்டத்தின் மூலம் தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு எமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த வாய்ப்பாக அமையும் என நம்பப்படுகிறது - என்றார்.

இந்தக் கட்டடம் சுமார் ஐந்து மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதுடன் இதற்கான நிதி கிடைக்கப்பெற்றதும் இந்தக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பனை எழில் நகரின் மூலம் சுற்றுலாப் பயணிகள் தமக்கு விரும்பிய பனை உற்பத்திப் பொருள்களைப் பார்வையிட்டும் அவை உற்பத்தியாகும் விதம் தொடர்பிலான விளக்கங்களை நேரில் அறிந்து கொள்ளக் கூடியதாக இதன் கட்டுமானம் [illegible] பெறவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (16-13)

# நிகழ்வுகள் இன்று

**நடமாடும் சேவை**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை காலை 9 மணிக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. கடந்த மாதம் 21, 22 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் ஆவணங்களைச் சமர்ப்பித்தவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கூறியுள்ளார். (ம-100)

**இசை நாடக ஆற்றுகை**

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பொருமாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு தொல்புரம் கலாலய நாடக மன்றத்தினர் நடத்தும் 'இரணியன் செல்வன்' எனும் இசை நாடக ஆற்றுகை நிகழ்வு இரவு முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்லையா உதயச்சந்திரனின் நெறியாள்கையில் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. (ம-14)

**அதிபர்கள் கூட்டம்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் முற்பகல் 10 மணிக்கு வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து..
மதிக்கப்படவில்லை. கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி யாழ். மாவட்டத்துக்கு வந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெல்லிப்பழை யில் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தார். இருப்பினும் இந்தப் பகுதியில் இதுவரை மக்களை முற்றாக மீள்குடியமர்த்த முடியவில்லை.

யாழ். மாவட்ட செயலகத்தின் கடந்த வருட அறிக்கையில் 10 ஆயிரத்து 152 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 840 பேரை மீளக் குடியமர்த்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறிப்பிடத்தக்க குடும்பங்களை மட்டுமே இதுவரை மீள் குடியமர்த்த முடிந்துள்ளது. இந்த நிலையில் இன்னமும் 8 ஆயிரத்து 295 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 116 பேர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக தொடர்ந்தும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வெளியிடங்களில் தங்கியுள்ளனர் என்று மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (10-5)

## தேர்தல்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

பிரசார நடவடிக்கைகளின் இறுதி நாள்களில் அரசியல் கட்சிகள் பலவும் தமது வெற்றியை மையமாகக் கொண்டு மக்கள் சந்திப்புக்கள் பலவற்றை ஏற்பாடு செய்திருந்தன.

கட்சித் தலைவர்கள் தங்களது வேட்பாளர்கள், ஆதரவாளர்களது நடவடிக்கை தொடர்பில் அவதானம் செலுத்த வெண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண கெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

## தமிழகம்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெங்களூர், கன்னூர், பெல்குவாம் உட்பட இந்தியாவின் பல இடங்களில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் 450 பேருக்கும் அதிகமானோருக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதாக இந்திய பாது காப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

வெலிங்டன் பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சிபெறும் இலங்கையர்கள் இருவரையும் வெளியேற்றுமாறு இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

## இலங்கையர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து..
கும் இடையிலான உறவும் வலுவாக உள்ளது. ராஜதந்திர மட்டத்திலல்லாமல் தொலைபேசி வாயிலாக இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவுடன் இந்த விடயம் தொடர்பில் உரையாடக்கூடிய நெருக்கம் நமக்கிருக்கிறது. ஆகையினால் இந்த விடயத்தினை அவர்களுக்கு நாங்கள் இலகுவாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.' என்று பிரதியமைச்சர் கூறினார்.

'தென்னிந்தியாவுக்கு பயணம் செய்கின்ற பயணிகளின் பாதுகாப்புத் தொடர்பில் கேள்வி நிலவுகின்ற நிலையில், அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இந்திய மத்திய அரசைக் கோரவுள்ளோம்' என்றும் அமைச்சர் நியோமல் பெரேரா மேலும் தெரிவித்தார். (த)

## கற்பிட்டி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆபத்தான நிலையிலுள்ள இருவர் புத்தளத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்படக் கூடும் எனப் புத்தளம் வைத்திய சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (த)

## 2000...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வம் ஏற்பாடு செய்துள்ளது. 16 நாள்கள் நடைபெற வுள்ள இந்தப் போர்ப்பயிற்சி எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. மாலைதீவு, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவ அதிகாரிகள் இந்தப் போர்ப்பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.இந்தியா இரண்டு பார்வையாளர்களை இதற்கு அனுப்பவுள்ளது.(த)

## அமைச்சர்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
பிரதிவாதி மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு ஆதாரம் எதுவுமில்லை என்பது முதலாவது ஆட்சேபமாகும். குற்றச்சாட்டுகள் தெளிவாக இல்லை எனவே, பிரதிவாதி மீது குற்றம் சுமத்தப்பட முடியாது என்பது இரண்டாவது ஆட்சேபமாகும். மனுதாரர்களே இந்த வழக்கை நடத்துவதை ஏற்க முடியாது என்பது மூன்றாவது ஆட்சேமாகும். இந்த ஆட்சேபங்களை நீதிமன்றம் நிராகரித்தது.

மன்னார் நீதவான் பொலிஸில் செய்துள்ள முறைப்பாடு, நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளரின் சத்தியக்கடதாசி என்பன பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப் போதுமானவை என நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த அடிப்படையில் ஆரம்ப நிலை ஆட்சேபங்கள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன. பிரதிவாதியான அமைச்சர் ரிஷாத்திடம் அவர் குற்றவாளியா இல்லையா எனக் கேட்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டபோது, பிரதிவாதி தனக்கு ஆங்கிலம் தெரியாது எனவும் குற்றச்சாட்டுகளின் தமிழ் மொழிபெயர்ப்புத் தேவை எனவும் கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரான நீதியரசர் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா குற்றச்சாட்டுகளை மொழிபெயர்த்தபோது, பிரதிவாதி தான் குற்றவாளி அல்ல எனக் கூறினார். (த)

## மாவை..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ள இந்தக் கல்லெறித் தாக்குதலில் அலுவலக ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமேற்பட்டுள்ளதுடன் அலுவலக வளவில் நிறுத்தப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் வாகனத்திற்கும் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

கல்லெறித் தாக்குதல் இடம்பெற்ற வேளை மிகத் துரிதமாக செயற்பட்ட மாவை சேனாதிராசாவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மதுபோதையில் ஸ்தலத்திலேயே காணப்பட்ட இரு இளைஞர்களைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த செவ்வாய் இரவு கல்முனையில் இடம்பெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துவிட்டு தானும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சரவணபவன் ஆகியோரும் குறித்த அலுவலகத்துக்கு வந்து அதிகாலை ஒரு மணியளவில் உணவு உண்டதாகவும், அதன் பின்னர் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்ற பின் தான் அலுவலக அறையில் உறங்கச் சென்றதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அதன் பின்னரே குறித்த கல்லெறித் தாக்குதல் இடம்பெற்றதாகவும் இதன்போது தமக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விநாயகபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசார மேடைக்கு நேர் எதிரே, அரச தரப்பில் வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவரது பிரசாரப் படங்கள் ஒட்டப்பட்ட வாகனத்தில் மதுபோதையுடன் காணப்பட்ட நபர்கள் ஒலிபெருக்கியைச் சத்தமாக இயக்கி தமது கூட்டத்தை குழப்ப முயற்சித்ததாகவும்,

இதன் தொடர்ச்சியாகவே குறித்த மாவட்ட அலுவலகம் மீதான கல்லெறித் தாக்குதலும் இடம் பெற்றிருக்குமெனத் தான் நம்புவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறினார்.

இது அரசியல் ரீதியான தாக்குதல் சம்பவமாதலால் தேர்தல் ஆணையாருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் முறையிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் முருகேசு இராஜஸ்வரனுக்குச் சொந்தான வீட்டிலேயே மேற்படி மாவட்ட அலுவலகம் இயங்கி வருகின்றது.

கட்சி நடவடிக்கைகளுக்காக அடிக்கடி அம்பாறை மாவட்டத்துக்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அண்மைக்காலமாக இந்த அலுவலகத்திலேயே தங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

கல்முனைப் பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-30)

## கிழக்கில் வெற்றி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
மன்ற உறுப்பினர் சரவணபவன்.

அம்பாறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியவை வருமாறு -

நாம் தொடங்கிய அறவழிப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்தது. மாற்றமடைய வைத்தது இந்த அரசுதான்.

நாம் இப்போது ஆயுதவழியை விட்டு விலகி இராஜதந்திர வழியில் பயணிக்கத் தொடங்கியுள் ளோம். இந்த வழியில் வெற்றி நிச்சயம்.

இந்த இராஜதந்திர வழியில் நாம் எப்படி வந்தோம் என்பதை நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். கடைசியாக முள்ளிவாய்க்காலில் போராளிகளும் மக்களுமாக பல பத்தாயிரம் பேர் உயிரிழந்தனர். எமக்காக அவர்கள் தங்களை மாய்த்துக்கொண்டனர்.

அநியாயமாக இந்த அரசு அவர்களைக் கொலை செய்தது. இது தொடர்பாக சர்வதேசம் போர்க்குற்ற அறிக்கை ஒன்றைத் தயாரித்தது. இந்த அறிக்கையை இல்லாமல் செய்வதற்காக அரசும் அரசில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளும் முயன்றனர். சர்வதேசம் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

எமது இனம் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கியுள்ளது. அது எமக்காக எடுக்கவேண்டிய அத்தனை நடவடிக்கைகளையும் சர்வதேச சட்டப்படி எடுத்துக்கொண்டிருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் எம் உறவுகள் தங்கள் உயிரை ஈகம் செய்தும் போர்க்குற்ற அறிக்கை என்ற ஆயுதத்தை எம்மிடம் விட்டுச் சென்றுள்ளார்கள். எனவே, நாம் அனைவரும் ஒன்றுபட்டு இத் தேர்தலில் வீட்டுச்சின்னத்திற்கு வாக்களிப்பதே எமது உறவுகளுக்குச் செலுத்தும் நன்றிக்கட னாகும்.

இன்று சர்வதேசம் எமது நிலைப்பாட்டைப் பார்த்து எமக்குச் செய்யவேண்டியதைச் செய்யும்.

சர்வதேசத்திற்குத் தமது நிலைப்பாட்டைக் காட்டுவதற்காக அரசு கிழக்கு மாகாணசபைத் தேர்தலைக் கொண்டுவந்திருக்கிறது. இத் தேர்தலில் அரசு நிச்சயம் மண் கவ்வும்.

அரசால் எதையும் சாதிக்க முடியாது. அறவழியில் முன்னெடுக்கப்படும் எமது போராட்டத்தைக்கூட அரசு நசுக்கப்பார்க்கிறது.

இந்த மாகாணசபை என்பது எமக்குக் கிடைத்த பூமாலை போன்றது. இந்த மாகாணத்திற்குத் தேர்தலை வைத்தார்கள். போகக்கூடாதவர்களின் கைகளுக்கு இந்தப் பூமாலை சென்றது. அது குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போன்று ஆனது.

மீண்டும் அவர்களிடம் இந்த சபையைக் கொடுத்தால் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியும். கடந்த காலங்களில் நடந்தவையும் உங்களுக்குத் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுவார்கள். அவர்கள் பதவிக்காக - சலுகைக்காக அடிபணியமாட்டார்கள்.

அம்பாறையில் மூன்று ஆசனங்களும், மட்டக்களப்பில் எட்டு ஆசனங்களும், திருகோணமலையில் ஐந்து ஆசனங்களும் எமக்குக் கிடைக்கும்.

அந்த 16 ஆசனங்களுடன் இரண்டு போனஸ் ஆசனங்களைச் சேர்த்தால் 18 ஆசனங்களாகும். நாம் விரும்பினால் சுயேச்சைக் குழுவை அல்லது வேறு கட்சியை இணைத்துக் கொண்டு ஆட்சியை அமைக்கலாம். இந்த நிலைமையை மக்கள் உருவாக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தேடியே ஏனைய கட்சிகள் வரவேண்டும். கூட்டமைப்பு எந்தக் கட்சியையும் தேடிப்போகக் கூடாது. அந்த நிலைமையை மக்களாகிய நீங்கள் உருவாக்க வேண்டும்.

இந்தத் தடவை எமக்குள்ள சந்தர்ப்பம் அடுத்த தடவை மாறப்படலாம். ஆகவே, இச்சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

ஆயுதப் போராட்டம் முடிந்ததன் பின்னர் சர்வதேச சமூகம் எமக்காகப் போராடுகிறது. அதனிடம் சென்று ஜனநாயக வழியில் எமக்கு வேண்டிய அனைத்தையும் நாம் பெறவேண்டும். அதற்காக நாம் இத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்.

வடக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு பணத்தை வாரி இறைத்தது. வன்னி மக்கள் அதைப் பெற்றனர். 65 சதவீதமான மக்கள் எமக்கே வாக்களித்து சபைகளை எம்மிடம் ஒப்படைத்தனர்.

உரிமைக்காகப் போராடும் தமிழர்கள் எதற்கும் விலைபோக மாட்டார்கள் என்பதை அவர்கள் நிரூபித்துவிட்டனர். அதனைவிடவும் அதிகமாக கிழக்கு மக்கள் அரசுக்குப் புரியவைக்க வேண்டும்.(த-சி)

## கிழக்கில்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

(அ) ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிரான அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் தாக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பயணித்த வாகனங்களும் தாக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை எதிர்க்கும் அரசியல் கட்சிகளுக்காகத் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர், தம்மைப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் என அறிமுகப்படுத்திக்கொண்ட குறிப்பிட்ட சிலரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, தேர்தல்களுக்குப் பின்னர் மோசமான பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் இவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

(இ) 'நீலப்படையினர்' என அடையாளம் காணப்பட்டுள்ள குறிப்பிட்ட சிலர் வாக்காளர்களின் அடையாள அட்டைகளைக் கேட்டுப் பெற்றுள்ளனர்; அவற்றைப் பரிசீலனை செய்துள்ளனர். பின்னர் ஆளுங்கட்சிக்கு ஆதரவளிக்காவிட்டால் பாரதூரமான பின்விளைவுகளைச் சந்திக்கநேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

(ஈ) ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பட்டியலில் இடம்பெற்று பல்வேறு மாவட்டங்களில் பலர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். குறிப்பிட்ட இந்த மாவட்டங்களிலேயே பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அல்லது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இல்லையேல் செயற்படத் தொடங்கியுள்ளன.

(உ) தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச அலுவலக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். சிலவேளைகளில் அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் கூட அவர்களின் சுதந்திரமான சம்மதமின்றி தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய நடவடிக்கைகள், சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்கள் இடம்பெறுமா என்ற விடயத்தில் கடூரமான கேள்விகளை எழுப்பியுள்ளன.

அறிந்த விடயங்கள் வருமாறு:-

(i) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிக்க முன்வருவோரின் மனோதிடத்தைக் குழப்பியடித்து திசைமாறச் செய்வதற்கான காரியங்கள் நடைபெறலாம்.

(ii) வாக்குப் பதிவு மாற்றியமைக்கப்படலாம்.

(iii) கணக்கெடுப்பு மாற்றியமைக்கப்படலாம்.

அரசமைப்பின் 17ஆவது திருத்தம், (அ) தேர்தல் ஆணையம், (ஆ) அரச சேவைகள் ஆணைக்குழு, (இ) பொலிஸ் சேவை ஆணைக்குழு ஆகியவை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தொடர்ந்து செய்யப்படும் என்பதற்கு குந்தகமாகவே உள்ளது.

இந்த அமைப்புகள் நேர்மையான ஜனநாயக முன்னெடுப்புகளை தடம் புரளச் செய்யவும், சட்டபூர்வமான தேர்தல் தீர்ப்பை திரிபுபடுத்துவதற்கும் பயன்படுத்தப்படக்கூடும் என்ற அச்சமும் தலைதூக்கியுள்ளது.

இத்தகைய சூழ்நிலை ஒரு நாட்டுக்கு உகந்ததல்ல. சர்வதேச கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கும் ஒரு நாட்டின் மீதான அழுத்தத்தையும் இது இறுக்கப்படுத்த ஏதுவாகிவிடும்.

அத்துடன், ஜனநாயக முன்னெடுப்புகளில் ஒரு நாடு கொண்டுள்ள நம்பிக்கையையும் ஈடுகட்ட முடியாதவாறு சிதைத்துவிடும்.

இத்தகைய சூழ்நிலையில், இந்நாட்டின் தலைமையையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையையும் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் வலியுறுத்துகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் நேர்மையானதும் நியாயமானதுமான தேர்தல்களே நடைபெறவேண்டும். இது இத்தலைமையின் கடமை என்பதை இத்தருணத்தில் குறிப்பிடுகின்றேன் - என்றுள்ளது.(த-சி)

## பல்கலைகள்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடத்தி வரும் தொடர் போராட்டத்தினால் சகல பல்கலைக்கழகங்களும் கால வரையறையின்றி மூடப்படுவதாக உயர்கல்வி அமைச்சு கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவை இன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மக்களின் பற்றுறுதி தேர்தலில் வெளிப்படும்

## மாவை.எம்.பி. நம்பிக்கை

அம்பாறை,செப்.6

**வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்ட பின்னரும் கூட கிழக்கு மக்கள் வடக்கு மக்களை விடவும் கூடுதலாக வீட்டுச்சின்னத்துக்கே வாக்களித்து வருகின்றனர். கிழக்கு மக்களது பற்றுறுதி இந்தத் தேர்தலில் நிச்சயம் மேலோங்கி நிற்கும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை. சேனாதிராசா நம்பிக்கை வெளியிட்டார்.**



கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பிரசாரக் கூட்டம் சேனைக்குடியிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டாலும் கூட ஒன்றாகவே வாழ்வோம், ஒன்றாகவே ஆள்வோம் என்ற திடமான உறுதியைக் கிழக்கு மக்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் தம் ஜனநாயகத் தீர்ப்பின் மூலம் வெளிப்படுத்தி வந்துள்ளனர். அதுபோல் இம்முறை நடைபெறும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணிதிரண்டு வருவது மகிழ்வைத் தருகின்றது.

**மௌனப் புரட்சி**

உலகை ஏமாற்றும் நோக்குடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வந்ததும், முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து அந்தத் தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்தது.

அரசின் அமைச்சுப் பதவியைப் பெற்றிருந்த நிலையிலும் கூட அரசுடன் சேர்ந்து போட்டியிடக்கூடாது என்ற மௌனப் புரட்சி முஸ்லிம் காங்கிரஸுக்குள்ளும், அதே எழுச்சி உணர்வுபூர்வமாக முஸ்லிம் மக்களிடையேயும் ஏற்பட்டன. இதனால் ஜனாதிபதியின் கனவு தகர்க்கப்பட்டு முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் நிலையேற்பட்டது.

ஆனால் முஸ்லிம் மக்களிடம் ஏற்பட்ட இந்த உணர்வுகூட முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் போன்றவர்களுக்கு இல்லையே என நம் மக்கள் கிளர்ந்தெழாதது தான் நாம் விட்டதவறாகும். எனினும் இத்தகையவர்களுக்கு மக்கள் நாளை மறுதினம் தக்க பாடத்தைப் புகட்டத்தான் போகின்றனர்.

**சர்வதேசம்**

இன்று ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கு இழைக்கும் அதே அநீதிகளைத் தான் முஸ்லிம் மக்களுக்கும் இழைத்து வருகின்றது.

முஸ்லிம்களின் இன்றைய ராஜபக்ஷ அரசுக்கு எதிரான எழுச்சியும், தொடர்ச்சியான தமிழ் மக்களின் திட சங்கற்பம், ஜனநாயகத் தீர்ப்புகள் உலகத்தைக் கண் விழிக்கச் செய்திருக்கின்றது. முஸ்லிம் மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ள விழிப்புணர்வையும் சர்வதேசம் மதிப்பிட்டு வருகின்றது.

இந்த நிலையில் எம் உரிமைகளுக்காக முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றுபட்டிருப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாத பேரினவாதசக்திகள், பேரினவாத பௌத்த சக்திகள் துவேச அடிப்படையில் பிதற்றத் தொடங்கியுள்ளன.

**இது இனவாதமா?**

எம் நிலத்தை அபகரிக்காதே, எம்மத சுதந்திரங்களில் கைவைக்காதே, அநீதி செய்யாதே, எம்மை மீள்குடியேற்ற அனுமதி, வடக்கு, கிழக்கை இராணுவ மயமாக்கி பௌத்த குடியேற்றங்களைச் செய்யாதே, பள்ளிவாசல்களை, இந்துக் கோயில்களை இடிக்காதே என நாம் குரலெழுப்பினால் அது இனவாதமாகுமா?

பொறுப்பு வாய்ந்தவர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் இனவாதத்தை விதைக்கும் வகையில் பிரசாரம் செய்வதாகக் கூறுவது அறியாமை, பித்தலாட்டமாகும்.

இன்று பரவலாக அரசும் அதன் அடிவருடிகளும் அபிவிருத்தி பற்றி தம்பட்டமடிக்கின்றனர். மக்களின் வரிப் பணத்தில் என்ன அபிவிருத்தியை இவர்கள் செய்துள்ளனர். வெளிநாட்டு நன்கொடையும் வெளிநாட்டு கடனும் தான் இவர்களது அபிவிருத்திச் சாதனை. இந்த அரசு இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன என்ற நிலைமையேயுள்ளது.

**தமிழர் நிர்வாகம்**

தமிழர் நிர்வாகம் இந்த மண்ணில் ஏற்படுமானால், தமிழர் தம் நிலத்தில் ஆள்பவர்களாகவிருந்தால் மிகக் குறுகிய காலத்தில் அபிவிருத்திகளை ஏற்படுத்தலாம். எனவே இதற்கான வாய்ப்பை நம்மக்கள் கிழக்கில் ஏற்படுத்தித் தர வேண்டும் - என்றார்.

(ச-30)

## மண்முனைப் பாலத்துக்கு அடிக்கல்

மட்டக்களப்பு,செப்.6

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரையையும், எழுவான்கரையையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்துப் பாதையான மண்முனை ஆற்றுக்கு மேலாக அமைக்கப்படவுள்ள பாலத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பட்டிப்பளை பிரதேச பதில் பிரதேச செயலாளர் வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.




நற்பிட்டிமுனையில் உள்ள அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு விஷமிகளின் கல்லெறித் தாக்குதலுக்கு உள்ளாகியது. இந்தத் தாக்குதலில் அலுவலக ஜன்னல் உடைந்துள்ளதையும், சம்பவத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் பார்வையிடுவதைக் காணலாம். (30)

## வெற்றிலைக்கு அளிக்கும் வாக்குகள் தமிழரின் தலைவிதியை மாற்றிவிடும்

### இதற்கு நாம் துணைபோகக்கூடாது என்கிறார் கூட்டமைப்பின் வேட்பாளர்

அம்பாறை,செப்.6

கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ் மக்கள் வெற்றிலைச் சின்னத்துக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழனின் தலைவிதியையே மாற்றிவிடும். அந்த நிலைக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் துணைபோகக் கூடாது. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து இந்த அரசின் அராஜகப் போக்கைத் தடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் த.கலையரசன் தெரிவித்தார்.



கல்முனை பிரதேசத்தில் தமது கட்சி பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் மத்தியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்கு பல்வேறுபட்ட அநீதிகள் இழைக்கப்பட்டுவந்த நிலையில் - தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பெற தமிழ்த் தலைமைகள் அஹிம்சை வழியிலான போராட்டத்தை முன்னெடுத்தபோது சிங்களப் பேரினவாதம் நியாயமான தீர்வை வழங்க முன்வராத நிலையில் உரிமைக்காக எமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆயுதப் போராட்டம் இன்று மௌனித்த நிலையில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களை இந்த அரசு அராஜகமாக மேற்கொண்டு வருகின்றது. திட்டமிட்ட குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு, புத்தர் சிலைகளை நிறுவி பௌத்த மயமாக்கும் நடவடிக்கை, கலாசாரச் சீரழிப்பு என அரசின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன.

இந்தநிலையிலேயே கிழக்கு மாகாணசபைத் தேர்தல் எம்மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் ஊடாக அரசுக்குத் தகுந்த பாடம் புகட்டவேண்டும், தமிழ் மக்களுக்குரிய தீர்வை உடன் வழங்கவேண்டும் என்னும் செய்தியை இந்த அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழ் மக்கள் தெரிவிக்கவேண்டும். - என்றார்.

(ச)

## தமிழருக்கு விடியலை வழங்க இறைவன் வழங்கிய சந்தர்ப்பம்

### வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க தமிழர் மகா சபை வேண்டுகோள்

அம்பாறை, செப்.6

தமிழ் மக்களின் விடியலை மிக விரைவாகக் காண்பதற்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ள அரிய சந்தர்ப்பமே கிழக்கு மாகாணத் தேர்தல். இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பக்குவப்படுத்தித் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த வாக்குகளையும் வீட்டுச் சின்னத்துக்கு இட வேண்டும். இது எம் மக்களுக்கான வரலாற்றுக் கடமையாகும் என்று அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு, அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபை விடுக்கும் பகிரங்க வேண்டுகோள் எனும் தலைப்பில் இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்களாகிய நாமனைவரும் ஒரு கொடியின் கீழ் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த வாக்குகளையும் வீட்டுச் சின்னத்துக்கு இட வேண்டிய கட்டாய வரலாற்றுக் கடமையிலுள்ளோம்.

இந்த வரலாற்றுக் கடமையை இந்தத் தேர்தல் காத்து நிற்கின்றது என்பதை உணர்ந்துசெயற்படவேண்டும்.

இந்தத் தேர்தலில் வாக்களிப்போர் உறவு, பாசம், கட்சி போன்ற விருப்பு, வெறுப்புக்களைக் களைந்து நாம் ஒன்றுபட்ட இனம் என்பதையும், எந்தவொரு இனத்துக்கும் நாங்கள் எதிரிகளல்ல என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

நாம் வடக்கு,கிழக்கு மாகாணத்தில் எம்மை நாமே ஆளக்கூடிய ஓர் அரசியல் பலத்தை தமிழ் பேசும் மக்[illegible] ஜனநாயக வழியில் உரத்துக் கூறுவோம்.

இந்த ஜனநாயகத் தேர்தல் மூலமாக அஹிம்சை வழியில் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் இவற்றைத் தெட்டத்தெளிவாக தெரிவிக்கும் சந்தர்ப்பம் கிழக்கு மாகாண சபைத் தேர்தலாகும்.

எனவே நாளைமறுதினம் தமிழ் வாக்காளப் பெருமக்கள் அதிகாலை எழுந்து இறைவனை வணங்கி வாக்குச் சாவடிக்குச் சென்று வீட்டுச் சின்னத்துக்கு முன் புள்ளடியிடுவதுடன், விரும்பிய வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

## திரு.பாலகிருஸ்ணர் இராசசேகரன் (SLTS-I)

[ஆசிரிய ஆலோசகர் (கணிதம்) - யாழ் கல்வி வலயம்]



### சேவை விபரம்

**ஆசிரியராக**

| | |
|---|---|
| கிளி/ இராமநாதபுரம் மேற்கு ம.வி | 23.05.1978 - 31.05.1978 |
| கிளி/முகமாலை றோ.க.த.க.பாடசாலை | 01.06.1978 - 31.10.1978 |
| கிளி/ பளை ம.வி | 01.11.1978 - 31.12.1981 |
| பலாலி ஆசிரிய கலாசாலை | 01.01.1982 - 31.12.1983 |
| அ/கஹட்ட கஸ்திகிலிய முஸ்லீம் ம.வி | 01.01.1984 - 30.06.1987 |
| யா/ மகாஜனக்கல்லூரி | 01.07.1987 - 31.12.1990 |

**ஆசிரிய ஆலோசகராக**

| | |
|---|---|
| பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் | 01.01.1991 - 31.12.1992 |
| கோப்பாய் கல்விக் கோட்டம் | 01.01.1993 - 31.12.1997 |
| யாழ் கல்வி வலயம் | 01.01.1998 - 05.06.2012 |

### வாழ்த்து

*மாண்புயர் குணங்கள் பலவால் மனங்கவர் நாயகனாய்*
*மகாஜன மகிழ்ந்தளித்த மகாஜனன் எனும் மாசறு தூயவனே*
*காண்பவர் விரும்பும் நல்ல கனிவுடை பேச்சதனால்*
*கடிதெனக் கவரும் வல்ல காந்தமும் நீரையா*
*வீண்புகழ் விரும்பா வண்ணம் விளங்கிடும் உமதுள்ளம்*
*விண்ணிலும் மண்ணிலும் நிகரிங்கு எதுவுமில்லை*
*வான்புகழ் கொண்ட உமது வாண்மையை உணர்த்திடவே*
*வாழ்த்தினோம் வாழ்க நாளும் வளமுடன் பல்லாண்டே*

*வேம்பின் காயாய் விளங்காப் பெருங்கசப்பாய்*
*விலகி ஓடிய கணித பாடமதை*
*தீம்பால் அமுதாய் தெளிந்த நற்தேனாய்*
*தெவிட்டாதளிப்பவர் உமையன்றி வேறில்லை*
*நாம் பல அறிவு பெற்றே நானிலம் போற்றிடவே*
*ஆலோசனை பல நல்கும் நயமிகு ஆசானே*
*மேம்படு நின்சேவை மேதினியில் தொடரவே*
*வாழ்த்தினோம் வாழ்க நாளும் வளமுடன் பல்லாண்டே*

*கருத்தரங்கில் நின்குரல் கம்பீரமாய் ஒலிப்பதும்*
*கண்ணியமாய் எம்மோடு கனிவாய் கதைப்பதும்*
*இருத்தியே எம் குறைகள் இனிதாய் கேட்பதும்*
*இமயம் போல் நிமிர்ந்தாலும் பணிவாய் நிறைவதும்*
*பொருத்தமுற அவரவர் நிலையறிந்தே என்றும்*
*பாசமுறு நல்ல நண்பனாய் ஆசானாய்*
*ஒருத்தனே நீரெடுத்த அவதாரம் பலவே*
*உவப்புடன் வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டே*

அகவை அறுபதை நிறைவு செய்யும் இந்நாளில் தங்களின் எதிர்காலம் ஆனந்தமும் அமைதியும் நிறைந்ததாக வளமுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

**கணித ஆசிரியர்கழகம் - யாழ் கல்வி வலயம்**

(22561)(9.14)

# மாணவர்களுக்கு நன்கொடை

யாழ்ப்பாணம்,செப்.6

2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்கள், 2011ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நல்லூர் பிரதேச சபையால் உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பொறுப்பில் வாழும் மேற்படி மாணவர்களுக்கு நன்கொடைகளை வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

எனவே மேற்படி தகைமையைக் கொண்ட மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை நல்லூர் பிரதேச சபையில் பெற்று எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (16)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


## NEW SCIENCE HALL

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**2013 A/L DAY CLASS**

(2012 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

PHYSICS: திரு. சோதிலிங்கம்
திங்கள்-வியாழன்-2.30-4.30 (பொறியியல்)
சனி- ஞாயிறு 12.30-2.30(மின்னியல்)
ஆரம்பம்: 06.09.2012

(சி/3109)(5-6-7)


## யா/மயிலணி சைவ மகாவித்தியாலய சமூகத்தின் கண்ணீர் அஞ்சலி



மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் மாண்புறும் சங்கீத மழை பொழியும் ஆசான் பத்மராணி கணேசராசா அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி கனகமணி நவரத்தினம்**

அவர்களின் மறைவுகேட்டு மனம் கலங்குகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக (22558) (2.6.7)

துயரில் பங்குகொள்ளும் பாடசாலைச்சமூகம், யா/ மயிலணி சைவ ம.வி.


## விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

எங்களுடைய தரத்தில் உயர்ந்த "விந்தினு" நாமம் கொண்ட குடிநீர் மற்றும் பழச்சாறு ஆகியவற்றினை வியாபார நிலையத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்.

நாங்கள் மிகக் குறுகிய காலத்தினுள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மிக உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்து கொழும்பு பிரதேசங்களில் வியாபார நிலையங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எங்களுடைய முயற்சியானது எங்களுடைய உற்பத்தியினை இலங்கை முழுவதும் விற்பனை விநியோகத்தர்கள் மூலமாக விநியோகிப்பதாகும். (SLS உம்சுகாதார சான்றிதழும் பெற்றது)

(விசேடமாக வடக்கு கிழக்கிற்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம்)

**அதற்காக நீங்களும் எங்களுடன் இணைந்து நலன்புரி வியாபாரத்திற்கு உங்களுடைய பெறுமதியான பணத்தினை முதலிட்டு மிக உயர்ந்த அனுகூலங்களையும் விஷேட சலுகைகளையும் பெற்றுக்கொள்ளவும்.**



மேலதிக விபரங்களுக்கு இன்றே அழைக்கவும்

**விந்தினு வோட்டர் சிஸ்டம்**
96 /10, இரத்தினபுரி வீதி, அவிசாவளை.
036-5100370/ 077 0181232


# கண்ணீர் அஞ்சலி



## நடராசா இராசகணேசன்

(கணித ஆசிரியர் - யா/கொடிகாமம் அ.த.க. பாடசாலை)

எமது கல்வி வலயத்தைச் சேர்ந்த கணித ஆசிரியரின் அகால மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கணித ஆசிரியர் ஒன்றியம்**
**தென்மராட்சி கல்வி வலயம்.**


## தவறிவிட்டது

சண்முகநாதர் உதயகுமார் என்பவருடைய வாகனப்புத்தகம்(WH-0835) பூநாறி மடத்தடிக்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது.
தொடர்பு: 0771522561 (22566)(3.14)

## பஸ் விற்பனைக்கு

JG- xxxx இலக்கமுடைய AC பஸ் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0778155920 (22563)(3.14)


# முதலாம் ஆண்டு நிலைவஞ்சலி

## அமரர் திருமதி ஜோர்ஜ் சந்திராதேவி

*அன்னை மடியில்*
*03 * 02 * 1950*

*இறைவன் அடியில்*
*06 * 09 * 2011*



**"நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். அவரும் என்பக்கம் சாய்ந்து என் மன்றாட்டைக் கேட்டருளினார்."**

(தி.பா 40: 1)

**அன்னாரின் விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக உடுவில் செபமாலை மாதா ஆலயத்தில் இன்று (06.09.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.**

ஆர்க்லேன்,
உடுவில், சுன்னாகம்

R.ஜோர்ஜ் (கணவர்)

(சி/3110)(3.14)

# மரண அறிவித்தல்

## நடராசா இராசகணேசன்

(ஆசிரியர், யா/அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கொடிகாமம்)



கொடிகாமத்தைச் சேர்ந்த நடராசா இராசகணேசன் நேற்று முன்தினம் (04.09.2012) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராசா மற்றும் சின்னப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் மூத்தமகனும் இராஜவரதன் (உள்ளூராட்சி திணைக்களம், வடமாகாணம்), இராஜமோகன் (கனடா), ஜானகி (லண்டன்), இராஜவிசாகன் (றுகுண பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர்), சசிகலா (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனும், அனுசூயா (உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டம்), ஸ்ரீவள்ளி (கனடா), அலெக்ஷ் (லண்டன்), பரிதா (ஆசிரியர், கொக்குவில் இராமகிருஸ்ணர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் மைத்துனரும், ஜெனன், அட்ஷயா, ஆர்த்தி, ஆர்வின், கஜாணன், தஷிகா, அபூர்வன் ஆகியோரின் பெரிய தகப்பனும், மிர்ணா, மேர்வின், சாரங்கன் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
[illegible] (தாய்)
[illegible] (ஆசிரியை)
"உதயபானு" கொடிகாமம். (சி/3106)(3.6.7)


## காணி விற்பனைக்கு

சூராவத்தை சுன்னாகத்தில் வீடு, காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0723064372 (22562)(3.14)

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் போன் சொப் ஒன்றிற்கு விற்பனையாளர் ஒருவர் தேவை. யாழ்.நகரை அண்மித்தவர் விரும்பத்தக்கது. வயதெல்லை 20-30 நேரில் வரவும்
தொடர்பு 0750405505 (22561)(3.14)

## வேலையாள்கள் தேவை

புடவை வியாபாரம் செய்யக்கூடிய ஆண்/ பெண் இருபாலாரும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் அல்லது பழக விரும்புவோர் உடன் தேவை.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)
தொடர்பு: த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0773086894 (22588)(3.14)

## தேவை
### பற்சிகிச்சை நிலைய உதவியாளர்

பற்சிகிச்சை நிலையத்தில் பணியாற்றுவதற்கு பெண் தாதிய உதவியாளர் தேவை. முன் அனுபவம் தேவையில்லை பயிற்சி பெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**New Royal Dental Clinic**
**749, KKS Road, Jaffna.**
(சி/3111)(3.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஐ.நா.மனித உரிமை சபையின் ஆய்வில் மன்னிப்புசபை, 'டெசோ' அறிக்கைகள்?

இம்மாதம் 10 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஜெனிவாவில் கூடி ஆலோசனைகள் நடத்தவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு இலங்கையின் தேசியப் பிரச்சினை என்றழைக்கப்படும் தமிழர் தொடர்பான பிரச்சினை குறித்து மூன்று முக்கிய ஆவணங்கள் அந்தச் சபையின் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவைகளில் ஒன்று ஏற்கனவே மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவின் முன் முயற்சியில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு இலங்கை அரசு தயாரித்துள்ள செயற்றிட்டமாகும்.

இன்னொன்று இந்த செயற்றிட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் கோணல் மாணல்களை புட்டுக் காட்டி ஐ.நா.மனித உரிமைகள் சபையை விழிப்படையச் செய்யவும், குற்றச் சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் அரசின் தகிடுதத்தங்கள் நீடிக்கும் பட்சத்தில் குற்றச் சாட்டுக்களை புலனாய்வுசெய்ய சர்வதேச சுயாதீன புலனாய்வுக்கு ஐ.நா.ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவும் சர்வதேச மன்னிப்புச்சபை சமர்ப்பித்துள்ள அறிக்கையாகும்.

இந்த அறிக்கைகளுடன் அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த தமிழீழ ஆதரவாளர்களின் 'டெசோ' மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய ஆவணமுமாகும்.

முந்திய இரண்டும் ஏற்கனவே மனித உரிமை சபையிடம் தாக்கல் செய்யப்பட்டு விட்ட போதிலும் டெசோ தீர்மானங்கள் அடங்கிய ஆவணம் இந்த மாதம் 20 ஆம் திகதி அளவிலேயே ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. பத்திரிகை செய்திகளின் படி தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகத் தின் பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செல்லும் குழுவினரே இந்த ஆவணத்தை ஐ.நா.செயலாளர் நாயகத்திடம் கையளிக்கவிருக்கின்றனர். இலங்கை விவகாரங்கள் தொடர்பாக வேறு ஆவணங்களும் மனித உரிமை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை. ஆனால் மேற்கூறிய மூன்று முக்கிய ஆவணங்கள் பற்றிய தகவல்களே நமக்கு இப்போது கிடைத்துள்ளன.

இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள செயற்றிட்டத்தில் காணப்படும் பொறுப்பு கூறும்செயற்பாடுகள், நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பாக சுயாதீன புலனாய்வுகளை நடத்தவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் குறிப்பாக செய்துள்ள பரிந்துரைகளை மிகத் தெளிவற்ற முறையிலேயே குறிப்பிடுகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டியிருக்கிறது. உரிமை மீறல்களுடன் தொடர்புடைய மற்றும் பொலிஸ் தரப்புகளிடமே அரசின் திட்டம் அதிகம் நம்பிக்கை வைத்திருப்பதானது அதன் பெரும் பலவீனமாகும் என்று மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், முக்கியமாக இலங்கையில் நடந்தேறிய இறுதிப் போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது ஐ.நா.உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை தமிழர்களின் உள்ளக் கிடக்கையைக் கண்டறியும் வகையில் அவர்கள் மத்தியில் ஐ.நா.ஆதரவில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினை தெற்காசிய பிரச்சினையாக அறிவிக்கப்பட வேண்டும் என்பவை குறிப்பிடக் கூடியவை.

மன்னிப்பு சபையின் அறிக்கையிலும் குற்றங்களுக்கு தண்டனை அளிப்பதிலிருந்து விலக்களிக்கும் நடைமுறையை இலங்கை அரசு ஒரு முடிவுக்கு கொண்டுவராது போனால் ஐ.நா.தலையிட்டு அரச படைகளினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் சர்வதேச சட்டங்களை மீறிச் செயல்பட்டமை தொடர்பாக சுயாதீனமான சர்வதேச புலனாய்வுக்கு ஏற்பாடு செய்ய ஐ.நா.தயாராக வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. உலகளாவிய பருவகால ஆய்வுகளின் போது இலங்கை அரசின் செயற்றிட்ட அறிக்கையும்,. ஏனைய ஆவணங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம். மன்னிப்பு சபையினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் மட்டுமன்றி 'டெசோ' தீர்மான யோசனைகளும் ஆராயப் படும் என்று கருத முடியும்.

மன்னிப்பு சபையின் அறிக்கையில் ஆழமான சில கருத்துக்கள் காணப்படுவதுடன் அரசின் செயற்றிட்டத்தின் பயனற்ற தன்மையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமை சபையின் தீர்மானத்தின் பொறுப்புக் கூறல் தொடர்பாக இலங்கை அரசு வழங்கியுள்ள பிரதிபலிப்பானது பயனற்றதோர் செயல்முறையை உருவாக்கு வதாகவே அமைகிறது என்பது அதன் குற்றச்சாட்டு.

டெசோ தீர்மானம் பல யோசனைகளை முன்வைத் துள்ளது. இலங்கை தமிழ் மக்களின் கருத்தை அறிய ஐ.நா.தலையிட வேண்டும் என்பதும் அதன் கோரிக்கை. உண்மையில் டெசோ மாநாடு நடந்து முடிந்த கையோடு அது எழுப்பியிருந்த பரபரப்பு மறைந்து விட்டது என்று தான் கருதப்பட்டது. ஆனால் அந்த மாநாட்டுத் தீர்மானங்கள் அடங்கிய ஆவணம் ஐ.நா.செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படுவது இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவில் குறிப்பாக இந்திய மத்திய அரசிலும் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மறுக்கமுடியாது.

தமிழ்நாட்டுத் தலைவர்களும் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறை காட்டுவதில் அடிப்படை நோக்கங்கள் வேறு இருந்தாலும் தி.மு.கவின் இந்த செயற்பாடு இந்த விடயத்தில் இந்திய மக்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை உலகத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டுவது மட்டுமல்ல, இந்தப் பிரச்சினை எவ்வளவு தூரம் உணர்ச்சி பூர்வமாகி வருகிறது என்பதற்கும் எடுத்துக்காட்டாகும்.

# தமிழர்களின் அரசியல் பலத்தை உலகுக்கு நிரூபிக்க கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

## வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோரிக்கை

வடமராட்சி, செப்.6

தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டை உறுதிப்படுத்தவும், எமது ஒன்றிணைந்த சக்தியை மீண்டும் உலகுக்கு எடுத்துக்காட்டவும், நாளை மறுதினம் 8 ஆம் திகதி நடைபெற வுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்த லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்களின் தாயகமாக விளங்கும் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் உயிர் மூச்சாக விளங்கும் கிழக்கில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம், நில அபகரிப்புக்கள், தமிழ் மக்களின் மீதான பாரபட்சமான நடவடிக்கைகளும், அடக்கு முறைகளும் மேலோங்கிய நிலையில் எமது தாயகக் கோட்பாட்டை உறுதிப்படுத்த எமது ஒன்றிணைந்த சக்தியை மீண்டும் உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

இதற்கு நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களுக்கான ஒரேஒரு தெரிவாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே எமது உறவுகள் வாக்களிக்கவேண்டும்.

வடக்கு மக்களையும், கிழக்கு மக்களையும் பிரித்து, எங்களுடைய பாரம்பரியங்களையும், மரபுகளையும் அழித்து பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை தமிழ்பேசும் மக்கள் வாழும் தாயகத்தின் மீது திணிப்பதற்கான சிங்கள பேரினவாத சக்திகளின் கபடத்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதற்காக அனைத்து தமிழ் பேசும் மக்களும் தாமாகவே முன்வந்து வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ் மக்களின் ஒற்றுமையை நிலைநாட்டுவோம்.

கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் காலாகாலமாக பேரினவாத சக்திகளால் ஒடுக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசிய உணர்வுடன் வாழ்ந்து வருகின்ற போதிலும் தேர்தலில் வாக்களிக்கச் செல்லாவிட்டால் எங்களை அழிப்பதற்கு காத்திருக்கும் தமிழ் விரோத சக்திகளுக்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் நாமே வழிவிடுவதாக அமைவதைத் தடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியைக் கிழக்கில் ஏற்படுத்த ஒன்றிணைந்து வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்துவோம் -என்றுள்ளது. (த-8)

# வேம்படிப் பிரச்சினை குறித்து இந்து மகா சபை அறிக்கை

வலி. வடக்கு, செப். 06

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இதன் அடிப்படையில் மாணவர்களின் எதிர்காலக் கல்வியைக் கேள்விக் குறியாக்காது உரியவர்கள் தமது நிலை உணர்ந்து கல்வி அமைச்சினதும் பொது சேவை ஆணைக் குழுவினதும் பணிப் புரைகளை அனைவரும் கடைப் பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் நியமனம் சம்பந்தமாக ஏற்படுத்தப் பட்டுள்ள குழப்பமான நிலைமை தொடர்பாக இந்து மகாசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சட்ட ஒழுங்குப் பொறிமுறை உறுதிப்படுத்தப்படுவது சமூகத்தின்ஆரோக்கியமான செயற்பாட்டுக்கு அத்தியவசியமான தேவைப் பாடாகும்.

அண்மைக் காலமாக சட்டத்தையும் ஒழுங்கையும் எமது பிரதேசத்தில் அமுல்படுத்துவதில் இடர்பாடுகள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக கல்விப் புலத்தில் இத்தகைய ஒழுங்கீனங்கள் காணப்படுவது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் மாணவர்களிடையேயும் சமூகத்தினரிடையேயும் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயங்கள் மாணவர்களின் விழுமியங்கள், விருத்திகளில் பாதகமானவிளைவுகளைஏற்படுத்தும்.

இது காலக் கிரமத்தில் சமூக கட்டுமானத்தில் சட்ட ஒழுங்கை சீர் குலைவுக்கு இட்டுச் செல்லும் அபாய நிலைமையையும் ஏற்படுத்தும்.

வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அதிபர் விவகாரத்தில் கல்வி அமைச்சின் நிர்வாக ஒழுங்குக்கு அமைய அதிபர் நியமனம் இடம் பெற்றும் அது நடைமுறைப்படுத் தப்படாமை கவலையளிக்கும் விடயமாகும்.

இந்த நியமனம் மூன்ற மாத காலமாகியும் நடைமுறைப்படுத் தப்படாமை மக்கள் மத்தியில் நிர்வாகக் கட்மைப்பின் மீது அவ நம்பிக்கையையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயத்தில் தொடர்ந்தும் காலதாமதம் ஏற்படுத்துவது குறித்த தேசியப் பாடசாலையின் கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்- என்றுள்ளது.

(ம-86)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா அடுத்த வாரம் ஆரம்பம்

வடமராட்சி, செப்.6

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

9 ஆம் திருவிழாவான 22 ஆம் திகதி சனிக்கிழமை வெண்ணெய்த் திருவிழாவும், 10ஆம் திருவிழாவான 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை துயில் திருவிழாவும், 11 ஆம் திருவிழாவான 24 ஆம் திகதி திங்கட் கிழமை பாம்புத் திருவிழாவும், 12 ஆம் திருவிழாவான 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஹம்சன் போர்த் திருவிழாவும் 13 ஆம் திருவிழா வான 26ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத்திருவிழாவும், 14 ஆம் திருவிழாவான 27 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும், 15 ஆம் திருவிழாவான 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 16 ஆம் திருவிழாவான 29 ஆம் திகதி சனிக்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 17 ஆம் திருவிழாவான 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பட்டுத்தீர்த்த திருவிழாவும் விசேட திருவிழாக்களாக நடைபெறும்.

சுவாமி வீதிவலம் வரும்போது வடக்கு வீதியில் கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடக நிகழ்வு அந்த நாள் திருவிழாவின் கருத்தை சித்திரிக் கும் முறையில் நடைபெறும்.

தினமும் பகல் திருவிழா 8 மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும். பெருந்திருவிழா நாள்களில் பெரியாழ்வார் ஆச்சிரமம் உட்பட கோவில் மடத்திலும் அன்னதானம் நடைபெறும்.

பெருந்திருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை-மந்திகை ஊடாக வல்லிபுரக் கோவில் பருத்தித்துறை -தும்பளை ஊடாக வல்லிபுரக் கோவில், யாழ்ப்பாணம்-வல்லிபுரக் கோவில் ஊடாகப் பருத்தித்துறை போன்ற பஸ் சேவைகளுக்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

சமயக் கோட்பாடுகளுக்கும், கலாசாரத்துக்கும் அமைவாக உடைகள் அணிந்து தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து திருவிழாக்களில் கலந்து கொள்ளுமாறு ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (ம-8)

## கிழக்குத் தேர்தலுக்கு ஆதரவாக பிரசாரம்

வடமராட்சி, செப்.6

கிழக்கு மாகாணசபைத் தேர்த லில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் ஆகியோரும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் திருகோணமலை மாவட்டத்திலும், பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் பூ.சஞ்சீவன் மட்டு, அம்பாறை மாவட்டங்களிலும் கடந்த சில தினங்களாகப் பிரசாரத்தில் களம் இறங்கியுள்ளனர்.

(ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிக்கின்றன இந்திய வீடுகள் பீதியில் உறைந்துள்ளனர் மக்கள்

## உயிலங்குளத்தில் 50 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன

துணுக்காய்,செப்.6

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள உயிலங்குளத்தில் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட 50 இந்தியன் வீட்டுத் திட்டப் பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட வீடுகளின் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு இடிந்து விழும் நிலையிலுள்ளதாகப் பயனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டுச் சில மாதங்களேயான நிலையில் அத்திபாரம் நிலத்தின் கீழ் இறங்குவதால் வெடிப்புக்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வீடுகளில் உரிமையாளர்கள் பீதியுடன் பொழுதைக் கழிப்பதைக் காண முடிகின்றது.



மேலும் ஓசையெழுப்பியவாறு வீட்டுச் சுவர்களில் வெடிப்புக்கள் தோன்றுவதால் வீடு இடிந்து விழுந்துவிடுமோவென்ற அச்சமும் மக்களிடையே எழுந்துள்ளது.

மேலும் மின்சார வசதியும் இங்கு வழங்கப்படவில்லை. காட்டுப் பகுதியை அண்டிய இடத்தில் இந்த வீட்டுத் திட்டம் அமைந்துள்ளதால் இரவு நேரங்களில் பெரும் பயப் பீதியுடன் மக்கள் பொழுதைக் கழிக்கின்றனர்.

அதேசமயம் கடும் வறட்சி காரணமாகத் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு இங்கு நிலவி வருகின்றது.

தற்போது துணுக்காய்ப் பிரதேச சபையால் பவுசர் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதால் ஓரளவு ஆறுதல் ஏற்பட்டுள்ளது.

இங்கிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தென்னியன் குளத்திலேயே கிராம மக்கள் தமது குடிதண்ணீர் தவிர்ந்த ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். ஆனால் அந்தக் குளமும் வறண்ட நிலையில் காணப்படுவதால் இவர்களின் நிலை மோசமாக மாறியுள்ளது.

போக்குவரத்து வசதிகள் சீரான முறையில் அமையாததால் அதிலும் சிரமங்கள் தான் இந்த மக்களுக்கு ஏற்படுகின்றன.

இவ்வாறு எல்லா வகையிலும் துன்பத்தையே எதிர்கொண்டு வரும் இந்த மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது உரியவர்களின் முக்கிய கடமையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-415)

## கம்பி எண்ணுகின்றனர் கோழி திருடிய 6பேர்

மன்னார், செப்.6

மன்னார் பனங்கட்டுக்கொட்டுப் பகுதியில் கோழிகளைத் திருடி விற்பனை செய்து வந்த ஆறு இளைஞர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுப் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளை இந்த இளைஞர்கள் திருடி விற்பனை செய்து வந்தனர். இந்த நிலையில் பனங்கட்டுக்கொட்டுப் பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் இவர்கள் கோழிகளைத் திருடியுள்ளனர். திருடிய கோழிகளை இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை உப்புக்குளம், கோந்தைப்பிட்டி ஆகிய கிராமங்களில் விற்பனை செய்வதற்கு முயன்றபோது மன்னார்ப் பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களால் திருடப்பட்ட 21 கோழிகளும் கைப்பற்றப்பட்டன.

பொலிஸார் இந்த ஆறு இளைஞர்களையும் மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினர். இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-12)

## கசிப்பு வைத்திருந்த இருவருக்குத் தண்டம்

கிளிநொச்சி, செப்.6

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட கசிப்பை வைத்திருந்த இருவருக்குக் கிளிநொச்சி நீதிமன்றத்தால் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பைத் தனது உடைமையாக வைத்திருந்த ஒருவர் கடந்த 29 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். இவருக்குக் கிளிநொச்சி நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

இதேவேளை கடந்த 28 ஆம் திகதி இரண்டு போத்தல் கசிப்பை வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

**15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.**

கிளிநொச்சியில் மீள்குடியமர்ந்த மக்களிடையே கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துக் காணப்படுவதும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்படுவதும் சாதாரண நிகழ்வாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-6)

## பக்திப் பாடல் இறுவட்டு வெளியீடு வட்டக்கச்சியில் நாளை

கிளிநொச்சி செப்.6

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் மீது பாடப்பட்ட பக்திப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் ந. தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் திருமதி நாச்சியார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பண்டிதர் பொன் சுகந்தனால் எழுதப்பட்டு தென்னிந்திய முன்னணிப் பாடகர்களால் இந்தப் பக்திப் பாடல்கள் பாடப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ)

## புழுதியைத் தடுக்க பெய்யுமா மழை...?



மல்லாவியில் நூற்றுக்கணக்கான வயல் நிலங்களுக்கு நீரை வழங்கி வந்த மல்லாவிக்குளம் கடும் வறட்சியால் வறண்டு போய் புழுதி பறந்த நிலையில் காணப்படுகின்றது. (க-415)

## வெங்காயத்தைச் சந்தைப்படுத்துவதில் பாலிநகர் விவசாயிகள் திண்டாட்டம்

துணுக்காய், செப்.6

மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாலிநகர் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிர்கள் நல்ல விளைச்சலைத் தந்துள்ளபோதிலும் அதனைச் சந்தைப் படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு வசிக்கும் 120 பேருக்குச் சர்வோதய நிறுவனத்தினர் தலா இரண்டு அந்தர் வீதம் விதை வெங்காயத்தை வழங்கியிருந்தனர். இதனையடுத்து விதை வெங்காயத்தைப் பெற்றவர்கள் வெங்காயச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இங்கு கடும் வறட்சி நிலவிய போதிலும் நல்ல விளைச்சல் கிடைத்தது.

ஆனால் விளைச்சலுக்கு ஏற்ற வகையில் பயனைப் பெறமுடியாத நிலையில் வெங்காயச் செய்கையாளர்கள் காணப்படுகின்றனர்.

வெங்காயத்தின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணமாகும். ஒரு கிலோ வெங்காயம் 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்பனையாவதால் இவர்கள் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற முடியாத நிலையில் கவலையுடன் காணப்படுகின்றனர். (க-415)

## போக்குவரத்துச் சிரமத்துக்குள் மூன்று முறிப்பு கிராம மக்கள்

### பாடசாலைக்கு மாணவர்கள் கால்நடையாக

துணுக்காய், செப்.6

பஸ் சேவை இல்லாததால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மூன்றுமுறிப்புக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு வழிகளிலும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு மீள்குடியமர்ந்த மக்கள் வவுனியா செல்ல வேண்டுமாயின் 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மல்லாவி நகர்ப் பகுதிக்கு முதல் நாளே வருகை தந்து தங்கியிருந்து விட்டு மறுநாள் தமது பயணத்தைத் தொடர வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

மாணவர்கள் நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நட்டாங்கண்டல் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைக்குக் கால் நடையாகச் செல்வதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையில் குஞ்சுக்குளத்திலிருந்து மூன்று முறிப்புக் கிராமத்துக்கு பஸ் சேவையை ஏற்படுத்தும் பொருட்டு இங்குள்ள பிரதான வீதிகளைச் சிரமதானம் மூலம் மக்களும் இராணுவத்தினரும் துப்புரவு செய்துள்ளனர்.

மேலும் வவுனியாவிலிருந்து பாலமோட்டைப் பகுதியூடாக குஞ்சுக்குளம் வரைக்கும் இடம்பெறும் பஸ் சேவையை மூன்று முறிப்புக் கிராமம் வரை நீடித்தால் இங்குள்ள மக்கள் வவுனியா சென்று வருவதிலுள்ள சிரமங்கள் வெகுவாகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-415)

## மரம் தறிப்பதிலும் பாகுபாடு; கிராம மக்கள் முறைப்பாடு

நெடுங்கேணி, செப்.6

நெடுங்கேணியில் மின் விஸ்தரிப்புக்கெனப் பிரதான வீதியிலுள்ள மரங்களைத் தறிப்போர் பயனுள்ள மரங்களை மட்டும் தறித்துவிட்டு ஏனையவற்றை விட்டுச் செல்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள ஒலுமடு, மருதோடை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதற்கென வீதியோரங்களில் காணப்படும் மரங்கள் வனத் திணைக்களத்தினரால் தறித்து அகற்றப்படுகின்றன. ஆனால் அவர்கள் தமக்குப் பயன்தரக் கூடிய மரங்களை மட்டுமே தறித்துவிட்டு ஏனைய மரங்களை அப்படியே விட்டுவிடுகின்றனர். இதனால் மின் விஸ்தரிப்பு வேலைகள் மேலும் தாமதமடையுமென மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இது தொடர்பாக ஒலுமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நெடுங்கேணிப் பிரதேச செயலருக்கும் வனதிணைக்களத்தினருக்கும் முறையிட்டுள்ளனர்.

வீதியோரங்களில் காணப்படும் சகல மரங்களையும் தறித்து அகற்றுமாறு பிரதேச செயலர் அறிவித்த போதிலும் பயன் தரக் கூடிய மரங்கள் மட்டுமே தறித்து அகற்றப்படுகின்றமை முறையில்லாத ஒரு செயல் என்றும் இவர்கள் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-435)

## விருந்தினர்களுக்காக காத்திருந்த பாடசாலை விடுதிகள் இன்று திறப்பு

### அதிபர் தலைமையில் நிகழ்வு

மாங்குளம், செப்.6

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் யூ.என்.டி.பியின் அனுசரணையால் அமைக்கப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான இரு ஆசிரியர் விடுதிகள் இன்று முற்பகல் 11 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளன.

கல்லூரியின் அதிபர் கி.விக்னராஜா தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் விடுதியைத் திறந்து வைக்கவுள்ளார்.

வேலைகள் பூர்த்தியாகிச் சுமார் 5 மாதங்களாக விருந்தினர்களுக்காகக் காத்திருந்து தற்போது தான் இந்த விடுதிகள் திறந்து வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் இந்திய அரசின் வீட்டுத் திட்டப் பணிகள்

## யாழ். செயலகம் தகவல்

யாழ்ப்பாணம், செப்.6

இந்திய அரசின் வீட்டுத் திட்ட இரண்டாம் கட்டப் பணிகளை யாழ். மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளவுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்களுக்கே நேரடியாகப் பணத்தை வழங்கி வீட்டுத் திட்டப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்ட ஒப்பந்தம் கடந்த ஜூலை 12 ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டத்தை யு.என். ஹபிற்றா, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், வீடமைப்பு அதிகார சபை, மனிதாபிமானத்துக்கான குடியிருப்பு ஆகிய அமைப்புக்கள் நடைமுறைப்படுத்தவுள்ளன.

இலங்கையில் ஏற்கனவே வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இந்த நிறுவனங்கள் கொண்டுள்ள அனுபவங்களை கருத்தில் கொண்டே வீடமைப்புப் பணிகளை மேற்கொள்ள இந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்படும் பயனாளிகள் தமது வீட்டை நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வர். இதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இந்த நிறுவனங்கள் வழங்கும். வீடுகளுக்கான நிதி நிர்மாணப் பணிகளின் முன்னேற்றங்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இதற்கமைய யாழில் மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் வன்னி மாவட்டத்தில் யு.என்.ஹபிற்றாவும் வவுனியா மாவட்டத்தில் வீடமைப்பு அதிகார சபையும் இந்திய வீட்டுத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இரண்டாம் கட்ட இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ள போதும் எத்தனை வீடுகள் அமைக்கப்படும் என்பது தொடர்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ம-5)

## 26 வீதிகள் திருத்தம்

வடமராட்சி, செப்.6

வல்வெட்டித்துறை நகர எல்லைக்குள் உள்ள பகுதிகளில் சுமார் 26 வீதிகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பல வீதிகள் புதிதாக அமைக்கப்பட்டும் சில வீதிகள் புனரமைக்கப்பட்டும் வருகின்றன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப் மற்றும் செயர் திட்டங்களின் உதவிகள் மூலம் அமைக்கப்பட்டு வருவதாக வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் அனந்தராஜ் தெரிவித்தார்.

நெல்சிப் திட்டத்தில் இடம்பெறும் வேலைத் திட்டங்களின் கீழ் நெல்சிப் நிதியிலிருந்து 92 வீதமும் மக்கள் பங்களிப்பாக 3 வீதமும் நகரசபையின் பங்களிப்பாக 5 வீதமும் இருக்க வேண்டும் என்ற நிலையில் அந்தந்தப் பகுதிகளில் வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதிகள் தொண்டைமானாறு, கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி பகுதிகளிலேயே அமைக்கப்பட்டு வருகின்றன. (ம-8)

## பொக்கனை குடிதண்ணீர் விநியோக பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.6

தண்ணீர் மட்டம் குறைவடையாத நிலையில் உள்ள பொக்கணைக் கிணறு துப்புரவு செய்யப்பட்டு அந்தக் கிணற்றின் ஊடான குடிதண்ணீர் விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த கிணறு துப்புரவு செய்யப்பட்டு ஆழமாக்கப்பட்டுள்ள நிலையில் இதன் நீர் மட்டமும் உயர்வடைந்து காணப்படுகிறது என்று கூறப்பட்டது.

இங்கிருந்து நவாலி, கட்டுடை போன்ற பிரதேசங்களுக்கும் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது என்று மேலும் கூறப்பட்டது. (ம-17)

## 2 வருடங்களாக 1,270 சங்குகள் பிடித்தவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப்.6

சட்டவிரோதமாக கடலில் ஆயிரத்து 270 சங்கு பிடித்து சேகரித்து வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபரை 25ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்து, அது தொடர்பான வழக்கை அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தது நீதிமன்றம்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

வழக்கின் சந்தேக நபரான கோட்டை பருத்தியடைப்பைச் சேர்ந்தவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டார்.

பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவரை நீதிவான் 25,000 ரூபா பிணையில் விடுவித்தார். 1270 சங்குகளையும் நீதிமன்றம் பாரமெடுத்துள்ளது. சந்தேக நபர் கடந்த 2 வருடங்களாகச் சங்கைச் சேகரித்து வந்துள்ளார். இவ்வாறாக 2 வருடங்களும் 1270 சங்கைச் சேகரித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (த-13-4)

## யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட 75 வீத பாடசாலைகளில் சத்துணவு

### வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.6

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட 75 வீதமான பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது பாடசாலைகள் மூன்றாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகளுக்குத் திறக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பெரும்பாலான பாடசாலைகளில் சத்துணவுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டாம் தவணையில் பெரும்பாலான பாடசாலைகளில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு பால், முட்டை என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

வலயத்துக்கு உட்பட்ட இந்துப் பாடசாலைகளில் பசுப்பால் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளில் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## குடும்பஸ்தரின் உயிரிழப்பில் சந்தேகம்

யாழ்ப்பாணம், செப்.6

பண்டத்தரிப்பில் நஞ்சருந்தியதாகத் தெரிவிக்கப்பட்டுத் திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

அவரது உயிரிழப்புக்கான காரணம் தொடர்பாக உறவினர்களால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதனால் உயிரிழந்தவரது இரத்த மாதிரி இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பண்டத்தரிப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குடும்பஸ்தர் நஞ்சருந்தியதாகத் தெரிவிக்கப்பட்டுத் திங்கட்கிழமை அதிகாலையிலேயே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் பண்டத்தரிப்பு கலட்டியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி புஸ்பராசா (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார். (த-4-5)

## வெள்ள வாய்க்கால் பணிகளை மழைக்கு முன்னர் முடியுங்கள்

வலி.தென்மேற்கு, செப்.6

சாவல்கட்டு கிராமத்தில் அண்ணாமலை வீதியில் மழை காலங்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு வசதியாக சுமார் 33 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் வெள்ளவாய்க்கால் வேலைகள் துரிதமாக இடம்பெறாமையால் வாய்க்கால் ஓரத்திலுள்ள மின்கம்பங்கள், வேலிகள் சரிந்து விழும் நிலையிலுள்ளன.

எனவே வாய்க்கால் வேலைகளை மழைகாலம் ஆரம்பமாக முன்பு துரிதமாகச் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆனைக்கோட்டை பாரதி சனசமூக நிலையத் தலைவரும் வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினருமான ஆ.சி.கணேசவேல் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மக்கள் நெருக்கமாக வாழும் சாவல்கட்டு கிராமமும் கிராமத்துக்கு ஊடாகச் செல்லும் அண்ணாமலை வீதியும் மழை காலங்களில் வெள்ளக் காடாகக் காட்சியளிப்பதனால் வீதியால் மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அங்கு வசிக்கும் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலை குறித்து சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சியால் குறித்து ஒதுக்கப்பட்ட மாகாண நன்கொடை நிதியிலிருந்து ரூபா 33 லட்சம் வெள்ள வாய்க்கால் அமைப்பதற்கு வழங்கப்பட்டது.

இந்த நிதி மூலம் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட வெள்ள வாய்க்கால் வேலை ஒப்பந்தத்தின்படி ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன் முடிவடைய வேண்டும்.

ஆனால் வேலைகள் துரிதமாக இடம்பெறாததால் வாய்க்கால் ஓரத்திலுள்ள மின் கம்பங்கள், கிராம அபிவிருத்திச் சங்க வேலிக் கதியால்கள் சரிந்து விழும் நிலையிலுள்ளன.

எனவே மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்பு இந்த வாய்க்கால் வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாரதி சனசமூக நிலையத் தலைவர் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (த-115)



சத்திரச் சந்திப் பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்காலின் மூடி சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த நிலையில் இதற்குள் பொலித்தீன் கழிவுகளும் தேங்கிக் காணப்படுகின்றன. (ம-23)

## முருங்கைக்காய் விளைச்சல் அமோகம்

### திருநெல்வேலியில் கிலோ ரூபா.30

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்.குடாநாட்டில் கடந்த ஆண்டைவிட இம்முறை முருங்கைக்காய் விளைச்சல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போதைய காலநிலையே இதன் உற்பத்தி அதிகரிப்புக்குக் காரணம் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சந்தைகளில் முருங்கைக்காயின் வருகை அதிகரித்துக் காணப்படுவதால் அவற்றின் விலையும் சரிந்து காணப்படுகின்றது. திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ முருங்கைக்காய் 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு கிலோ முருங்கைக்காய் 300 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## சமிக்ஞை காட்டாமையால் 3 ஆயிரம் ரூபா அபராதம்

### மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு

வீதியில் சென்று கொண்டிருந்த வாகனத்துக்கு சமிக்ஞை வெளிப்படுத்தாமல் மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர் ஒருவருக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரால் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் மீது சமிக்ஞையை வெளிப்படுத்தத் தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது குறித்த இளைஞர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை அனுமதிக்க வேண்டாம்

## மத்திய பிரதேச முதல்வர், மன்மோகனுக்கு வைகோ கடிதம்



சென்னை, செப்.6

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ்சிங் சவுகானுக்கு ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

மத்திய பிரதேசத்தில் எதிர் வரும் 21 ஆம் திகதி சாஞ்சியில் புத்தமத அடிக்கல் நடும் விழா நடைபெறவுள்ளது. இதில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கலந்து கொள்ள இருக்கிறார். இதற்கு தமிழகத்தில் தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். வைகோ மத்திய பிரதேச மாநிலத்துக்கே சென்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளார். இந்நிலையில் அந்த மாநில முதல் வருக்கு வைகோ கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், தமிழர்களுக்கு துரோகம் செய்த ராஜபக்ஷவை விழாவுக்கு அழைப்பது தமிழர்களுக்கு இழைக்கப்படும் துரோகம். அவரை வர அனுமதிக்கக் கூடாது. அவரை மீறி அனுமதித்தால் சாஞ்சியில் ம.தி.மு.க. ஆர்ப்பாட்டம் செய்ய போவது உறுதி என்று என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில்,

புத்த பெருமானின் புனிதப் பொருள்களை, இலங்கைக்குக் அனுப்புவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந் தத்தை ரத்துசெய்ய, தாங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இதேவேளை மத்திய பிரதேசத்திற்கு வரும் இலங்கை ஜனாதி பதியின் வருகையை எதிர்த்து அங்கு கறுப்புக் கொடி போராட்டம் நடத்த வைகோ தலைமையில் அந்தக்கட்சியினர் எதிர்வரும் 17 ஆம் திகதி சென்னையில் இருந்து பஸ்ஸில் சாஞ்சிக்கு புறப்படவுள்ளனர்.

(வ)

## மஹிந்தவை இந்தியா வருமாறு அழைக்கவில்லையாம் சுஷ்மா



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியா வருமாறு தான் அழைக்கவில்லை என்று பா.ஜ.க. மூத்தத் தலைவரும், மக்களவை எதிர்க் கட்சித் தலைவருமான சுஷ்மா சுவராஜ் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநி லத்தில் சாஞ்சியில் எதிர்வரும் 21 ஆம் திகதி புத்தமதம் தொடர்பான கல்வி மையத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் பங்கேற்குமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த பா.ஜ.க. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் அழைப்பு விடுத்துள்ளதாக ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கடந்த 3 ஆம் திகதி தான் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தார்.

இதனிடையே, இந்தியா வரும் ஜனாதிபதி மஹிந்தவை நாங்கள் எதிர்ப்போம் என்று மாநில பா.ஜ.க. தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்த நிலையில், இலங்கை ஜனாதிபதியை இந்தியா வருமாறு தான் அழைக்கவில்லை என்றும் மத்திய அரசு அழைத்ததாலேயே இந்தியா வர உள்ளார் என்றும் சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

(வ)

## கனிமொழியின் வழக்கு நேற்று விசாரணைக்கு

சென்னை, செப். 6

2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று கனிமொழி தாக்கல் செய்திருந்த மனு நேற்று டில்லி உயர்நீதிமன்றத்துக்கு விசாரணைக்கு வந்தது.

ஒரு லட்சத்து 6 ஆயிரம் கோடி ரூபா நாட்டுக்கு இழப்பு ஏற்படுத்திய ஸ்பெக்ட்ரம் முறைகேட்டு வழக்கில் கூட்டுச்சதியாளராக கனிமொழி சேர்க்கப்பட்டு கைது செய்யப்பட்டார். ஏறக்குறைய 200 நாட்களுக்கும் மேலாக அவர் சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவர் சென்னையில் தங்குவதும், டில்லி சிறப்பு கோர்ட்டில் ஆஜராக செல்வதுமாக இருந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## சிதம்பரத்துக்கு நலக்குறைவு: மருத்துவமனையில்



சென்னை, செப்.6

மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் திடீர் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் மாலை சென்னையில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு சிறு துளை அறுவைச் சிகிச்சை (லேப்ராஸ்கோபிக்) செய்யப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இதை காங்கிரஸ் கட்சி மூத்த தலை வர்களும், சிதம்பரம் குடும்பத்தினரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவர் ஓரிரு நாள்களில் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(வ)

## இந்தியாவின் மிக நீளமான சொகுசு பஸ் பெங்களூர்-மைசூர் இடையே அறிமுகம்



இந்தியாவின் மிக நீளமான சொகுசு பஸ் பெங்களூர்- மைசூர் இடையே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய பஸ் சேவையை கர்நாடக போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆர்.அசோகா நேற்றுமுன்தினம் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

14.5 மீற்றர் நீளம் கொண்ட இந்த 'மல்டிஒக்சில்வொல்வோ' பஸ்ஸில் கழிவறை மற்றும் உணவக வசதிகள் உள்ளன. பயணிகளுக்கு மிகச் சிறந்த பயண அனுபவத்தைக் கொடுக்கும் வகையிலான வசதிகளை இந்த புதிய பஸ் கொண்டிருக்கிறது.

இதுகுறித்து அமைச்சர் அசோகா கூறுகையில்,

''பயணிகளுக்கு நிறைவான சேவை வழங்குவதில் முன்னிலை வகிக்கிறோம். பெங்களூர்-மைசூர் இடையில் இந்த புதிய பஸ்ஸை பரீட்சார்த்த முறையில் அறிமுகம் செய்துள்ளோம்.

வாடிக்கையாளர்களிடம் கிடைக்கும் வரவேற்பை பொறுத்து பெங்களூர்-சென்னை இடையிலும் இந்த புதிய பஸ் சேவையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்'' -என்றார்.

## இந்தியத் தயாரிப்பில் உருவான சூரிய சக்தியில் இயங்கும் கார்

### பிரணாப் ஆரம்பித்து வைத்தார்



டில்லி, செப். 6

இந்தியாவில் தயாரிக் கப்பட்ட, சூரிய சக்தியில் இயங்கும் கார் வெள்ளோட்டத்தை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, நேற்றுமுன்தினம் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

சூரிய சக்தியில், இயங்கும் காரை, டில்லி தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடிய இந்தக் காரில், இரண்டு பேர் பயணிக்கலாம். மேலும், மூன்று பேர் அமரத்தக்க வகையில், இருக்கைகளை சேர்க்கும் வசதியுடனும், இந்தக்கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காரில், 'காபன்' மாசு, துளியும் உருவாகாது. காருக்கு, 'சோலா ரிஸ்' எனப்,பெயரிடப்பட்டுள்ளது.

டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 'சோலாரிஸ்' கார் வெள்ளோட்டத்தை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். உலகின் பல்வேறு நாடுகளில் தயாரிக்கப்பட்ட, சூரிய சக்தியால் இயங்கும் கார்களுக்கான கண் காட்சிப் போட்டி, தென்னாபிரிக்காவில் எதிர்வரும், 15 - 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இந்தியா சார்பில் 'சோலாரிஸ்' பங்கேற்கிறது.

## பாகிஸ்தானுக்கு மின் விநியோகம் குறித்து ஆராய்கிறது இந்தியா

பாகிஸ்தானுக்கு மின்சாரம் விநியோகம் செய்வதற்கான சாத்தியம் குறித்து இந்திய அரசு ஆராய்ந்து வருகிறது என்று பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் நிருபமாராவ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சார விநியோகத்துக்கான கோரிக்கை குறித்து பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் கோரிக்கைகள் குறித்தும் இந்தியா ஆராய்கிறது.

வெளிநாடுகளுக்கு மின்சாரம் விநியோகிக்கும் திட்டத்தை இந்தியாவில் சிலர் எதிர்த்து வருகின்றனர். ஏனைய நாடுகளுக்கு முன்னர், இந்தியா தனது சுயதேவையை பூர்த்திசெய்ய வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தியா வருடாந்தம் 170 ஆயிரம் மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இந்தியாவில் மின்சாரத்திற்கு பற்றாக்குறை ஏற்படும் என்ற கருத்தை அவர் நிராகரித்துள்ளார்.

2007-2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாத்திரம் 55,000 மெகாவாற் மின் சாரம் தேசிய மின்சார வலையமைப்புடன் இணைக்கப்பட்டது. 2012 காலப் பகுதியில் மட்டும் 20 ஆயிரத்து 500 மெகாவாற் மின்சாரம் இணைக்கப்பட்டது.

## மும்பையில் மேம்பாலம் இடிந்து ஒருவர் சாவு; எண்மர் காயம்

மும்பை அண்டேரி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வந்த மெட்ரோ ரயில் மேம்பாலம் நேற்று முன்தினம் மாலை திடீரென இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் 8 பேர் படுகாயமடைந்தனர்.

கட்டப்பட்டுவந்த மேம்பாலத்தின் சுமார் 50 மீற்றர் நீளமான பகுதி இடிந்து விழுந்துள்ளது.

கடந்த 24 மணித்தி யாலமாக மும்பையில் கனத்த மழை பெய்து வருகின்ற நிலையில் விமானப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட் டுள்ளது. செம்பூரில் நிலச்சரிவும் ஏற்பட்டது. இந் நிலையிலேயே மெட்ரோ ரயில் பாலம் இடிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தரின் கோட்பாடுகளுக்கு நேர்மாறாக மஹிந்த செயற்படுகிறார்

### நல்லக்கண்ணு குற்றச்சாட்டு



**கச்சதீவில் தமிழக மீனவர்கள் ஓய்வு எடுக்கவும், வலைகளைக் காய வைக்கவும் ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆனால் இந்த ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது.**

புத்தரின் அடிப்படை கோட்பாடு கொல்லாமை. வென்றவர்களையும், வெல்லப்பட்டவர்கள் நட்போடு நடத்த வேண்டும் என்பதும் புத்தரின் கோட்பாடுக்ளில் ஒன்றாகும். இந்த கோட்பாட்டுக்கு நேர்மாறாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடந்து கொள்கிறார் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.நல்லக்கண்ணு குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சையில் செய்தியாளர்களிடம் தமிழக மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் தாக்கப்படுவது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் ஒரு பகுதியில்தான் தமிழகம் உள்ளது. தமிழ்நாட்டில் பிறந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள் தான். இவர்களையும் மத்தியஅரசே பாதுகாக்க வேண்டும்.

இலங்கை எமது நட்பு நாடு என்று மத்திய அமைச்சர் சொல்கிறார். அவர் எதை வைத்து நட்பு நாடு என்கிறார் என்பது தெரியவில்லை.

இதுவரைக்கும் தமிழக மீனவர்கள் 800 பேர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் பிடிக்கும் மீன்களைக் கடலில் அள்ளி வீசுகின்றனர். வலைகளை அறுக்கின்றனர். மீனவர்களைத் தொடர்ந்து தாக்குகின்றனர்.

கச்சதீவில் தமிழக மீனவர்கள் ஓய்வு எடுக்கவும், வலைகளைக் காய வைக்கவும் ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆனால் இந்த ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், இலங்கை அரசுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவுவதற்கான அடிப்படைகள் எதுவுமில்லை-என்றார்.

(வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### தென்சீனக் கடல் விவகாரத்தில்

# அமெ. அத்துமீறி தலையிட்டால் சீனா தக்க பதிலடி கொடுக்கும்

தென்சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டால், தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று சீன ஊடகங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தென்சீனக் கடல் விவகாரம் தொடர்பாக நான்கு ஆசிய நாடுகளுடன், சீனாவுக்கு பிரச்சினை இருந்து வருகிறது.

இந்தநிலையில் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இந்தப்பிரச்சினை குறித்து இந்தோனேஷியா நாட்டுடன் பேச்சு நடத்தினார்.

இந்தப் பிராந்திய பிரச்சினைக்கு அர்த்தமுள்ள விதத்தில் தீர்வுகாண ஆசியா நாடுகள் முயலவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து இரண்டு நாள் பயணமாக சீனா வந்துள்ள ஹிலாரியிடம், ஈரான், சிரியா மற்றும் வடகொரியா நாடுகளின் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படலாம் என்று தெரிகிறது. இதன்பின் அவர் கிழக்கு திமோர் மற்றும் புரூணை நாடுகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தநிலையில் ஹிலாரியின் வருகையை சீன ஊடகங்கள் விமர்சித்து எழுதியுள்ளன. அதில் இப்பிராந்திய பிரச்சினையில் அமெரிக்கா அத்துமீறி தலையிட்டால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று விமர்சித்துள்ளன.

தென் சீனக்கடல் பிராந்தியத்தில் தாங்கள் ஆதிக்கம் செலுத்தவில்லை. பன்னாட்டு சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு இப்பிராந்திய வளர்ச்சி மற்றும் அமைதிக்காக அமெரிக்கா செயற்படும் என்று ஹிலாரி கிளின்டன் முன்பே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இறுதிச் சடங்கில் வெடித்தது குண்டு

## ஆப்கனில் 25 பேர் சாவு

ஆப்கானிஸ்தானில் நடந்த இறுதிச் சடங்கு நிகழ்வில் திடீரென மனித வெடிகுண்டு வெடித்ததில் 25 பேர் கொல்லப்பட்டனர், 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் செயற்படும் தலிபான் தீவிரவாதிகள் திருமண நிகழ்ச்சிகள் மற்றும் இறுதிச்சடங்குகள் நடக்கும் இடங்களில், திடீரெனப் புகுந்து தற்கொலைப்படை தாக்குதல் நடத்தி பலரையும் கொன்று வருவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் ஆப்கான் கிழக்கே பாகிஸ்தான் எல்லையில் உள்ள தர்பாபா மாவட்குடத்தில் முக்கிய பிரமுகர் ஒருவரின் இறுதிச் சடங்கு நடைபெற்றது.



அப்போது அந்தக் கூட்டத்துடன் நடந்து வந்த தலிபான் தற்கொலைப்படை தீவிரவாதி திடீரென குண்டை வெடிக்கச் செய்தார்.

இதில் 25 பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்களில் பலர் அபாய கட்டத்தில் உள்ளனர்.

இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகமாகும் என்று நம்பப்படுகிறது என்று உள்துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் சித் திக் சித்திகி தெரிவித்தார்.

**உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிக மாகும் என்று நம்பப்படுகிறது என்று உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் சித்திக் சித்திகி தெரிவித்தார்.**

இந்த இறுதிச்சடங்கில் மாவட்ட ஆளுநர் கலந்து கொண்டார். இவரைக் குறிவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. (வ)

## போர்த்துக்கல்லில் காட்டுத் தீ ஒருவர் சாவு

போர்த்துக்கல்லின் மத்திய மற்றும் வட பிராந்தியங்களில் காட்டுத் தீ பரவியதால் ஒருவர் உயிரிழந்தார்.

போர்த்துக்கலின் மத்திய மற்றும் வட பிராந்தியங்களில் பெரியளவில் காட்டுத் தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீயைக் கட்டுப்படுத்துவதற்கென ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்ட தீயணைப்புப் படையினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தமது விவசாய நிலங்களைப் பாதுகாக்க முற்பட்ட ஒருவர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியை போர்த்துக்கல் கோரியுள்ளது.



இந்தோனேஷியா வந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனை அந்த நாட்டு ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யூதோயனோ, ஜகார்த்தாவில் வரவேற்றார்.

## ரஷ்யாவில் அப்பிள் நிறுவுநருக்குச் சிலை

தனிப்பாவனைக் கணினிகளை வடிவமைத்து உலகில் தகவல் புரட்சிக்கு வித்திட்ட அமெரிக்கரும் உலகப் புகழ் பெற்ற 'அப்பிள்' நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஸ்ரீவ் ஜாப்ஸிக்கு ரஷ்யாவின் பீட்டர்ஸ்பர்க் நகரில் நினைவுச் சிலை அமைக்கப்பட உள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது:-

ஸ்ரீவ் ஜாப்ஸின் உருவச் சிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்று பலரிடம் கருத்து கேட்கப்பட்டிருந்தது.

தற்போது மொத்தம் 25 வகைகள் வந்துள்ளன. இன்றைய தினம் நடுவர்கள் குழு நினைவுச் சிலைகள் குறித்து கிடைக்கப்பெற்ற வகைகளில் ஒன்றை தெரிவு செய்கிறவர்கள் என்று தெரிவித்தனர்.

இதே போன்று ஹங்கேரியின் புதாபெஸ்ட் நகரில் ஜாப்ஸிக்கு வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது. மேலும் பிரேசில் நாட்டின் ஷா பாலோ நகரத்திற்கு அருகில் உள்ள ஜூண்டியாய் நகரத்துக்கு ஸ்டீவ் ஜாப்ஸின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (வ)

## மாடுகளைத் திருடிய 67 நபர்கள் ஆபிரிக்காவில் அடித்துக்கொலை

ஆபிரிக்காவில் மாடுகளைத் திருடிய 67 பேர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்க நாடான மடகஸ்கரில் கால்நடைகள் திருடுவது மிகப்பெரிய பிரச்சினை என்று கூறப்படுகிறது.


தலைநகர் அண்டனனரிவோவிலிருந்து 1000 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அனோசி என்ற கிராமத்துக்குள் மாடு திருடும் கும்பல் ஒன்று புகுந்துள்ளது.

அவர்கள் மீது கிராமத்து மக்கள் கூர்மையான ஆயுதங்கள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். இதில் 67 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலில் கிராமத்தைச் சேர்ந்த 12 பேர் காயமடைந்துள்ளனர்.

மற்றொரு இடத்தில் நடந்த சம்பவத்தில் மாடு திருடியவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய மோதலில் 10 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

கால்நடைகள் திருடுவதற்கென்று மிகப் பெரிய குழுவாகச் செயற்படும் இவர்களுக்கு அந்தப் பகுதியில் உள்ள ஒரு சமூகத்தினர் அவர்களை ஊக்குவிப்பதாகக் கூறப்படுகிறது. (வ)

## 2100 ஊசிகளை தலையில் ஏற்றி கனேடிய தமிழர் கின்னஸ் சாதனை



2100 ஊசிகளை தலையில் ஏற்றி கனேடியத் தமிழர் ஒருவர் கனடாவில் சாதனை நிலைநாட்டியுள்ளார்.

அக்குபஞ்சர் ரக 2100 ஊசிகளைத் தலையில் ஏற்றி, சுமார் 48 மணிநேரம் அதனை தலையில் வைத்திருந்து இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

மோகனதாஸ் சிவநாயகம் என்ற 37 வயதான கனேடியத் தமிழரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவநாயகம் ஏற்கனவே தலையில் ஊசிகளைக் ஏற்றி கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டிருந்தது. புற்று நோய் அறக் கட்டளை ஒன்றுக்கு நிதி திரட்டும் நோக்கில் இவ்வாறு 2100 ஊசிகளை ஏற்றி அதனை 48 மணி நேரம் தலையில் வைத்திருந்து சாதனை படைத்துள்ளார். கின்னஸ் சாதனைக்கு அமைவாக இந்த சாதனை நிகழ்த்தப்பட்டதாகக் குறிப் பிட்டுள்ளார்.

சிவநாயகம் வித்திகிலோ என்னும் தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சாதனை மூலம் சிவநாயகம் 12000 கனேடிய டொலர் திரட்டியுள்ளார். இப் பணத்தை அறக்கட்டளைக்கு வழங்க உள்ளதாக சிவநாயகம் தெரிவித்துள்ளார்.

(வ)

## 13 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தவர் வீழ்ந்தார் நிலத்தில்

### அதிசயமாகத் தப்பினார் சாகச வீரர்



ஆகாயத்தில் பறந்து சாகசம் செய்யும் 'ஸ்கை டைவ்' திருவிழாவில் கலந்து கொண்ட பிரிட்டனைச் சேர்ந்த வீரரின் பரசூட் செயலிழந்ததால் 13 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்தார்.

நியூசிலாந்தில் உள்ள மொடேய்கோ பகுதியில் வானில் பறந்து சாகசம் செய்யும் 'ஸ்கை டைவ்' திருவிழா நடந்தது.

இதில் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த யாம் டுன்னே (வயது35) என்பவரும் கலந்து கொண்டார். ஆகாயத்தில் 13 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து சாகசம் செய்து கொண்டிருந்த போது, அவரின் பரசூட் செயலிழந்ததால் பயங்கர வேகத்துடன் தரையை நோக்கி விழுந்தார்.

அதிர்ஷ்டவசமாக சகதியில் விழுந்ததால் அவர் உயிர் தப்பினார். இருப்பினும் முதுகுத்தண்டில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வரும் அவருக்கு முதுகுத்தண்டில் அறுவைச் சிகிச்சை மூலம் 'ஸ்டீல் பிளேட்கள்' பொருத்தப்பட்டுள்ளன.

## அமெரிக்க - ஜேர்மனி உறவு சிறப்பாக இல்லை

### முன்னாள் அமைச்சர் கருத்து

அமெரிக்காவுடனான ஜேர்மனியின் உறவு சிறப்பாக இல்லை என்று ஜேர்மனியின் முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பிராங்க் வால்ட்டெர் ஸ்டீன் மேயெர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீண்டும் பராக் ஒபாமா அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இருநாடுகளிடையே நல்லுறவு ஏற்படும். ஒபாமா தனது ஆட்சிக்காலத்தில் பரிஸ், லண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

ஆனால் பெர்லினுக்கு மட்டும் வரவில்லை என்பது ஜேர்மனிக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நல்லுறவு இல்லை என்பதைப் புலப்படுத்துகிறது.

நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மிட்ரோம்னியால் ஜேர்மனிக்கு எந்தப் பயனுமில்லை. எனவே ஒபாமா ஜனாதிபதியாக வருவதே நல்லது.

**மீண்டும் பராக் ஒபாமா அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இரு நாடுகளிடையே நல்லுறவு ஏற்படும்.**

ஜேர்மன் அரசு ஐ.நா பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பினராக வேண்டும். இதுவே தங்களின் ஆட்சியின் போது பிரதமராக இருந்த ஜெர்ஹார்ட் ஸ்க்ரோ டெரின் இலட்சியமாக இருந்தது.

ஆனால் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசு இந்த இலட்சியத்தை அடையும் முனைப்பில் செயற்படவில்லை- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் போர் உச்சம்

## விமானத் தாக்குதலில் ஒரே இடத்தில் 25 பேர் சாவு

சிரியாவில் தீவிரவாதிகள் பிடியில் உள்ள அலெப்போ பகுதியில் நேற்றுமுன்தினம் அரசுப் படையினர் நடத்திய வான்தாக்குதலில் கட்டடத்துக்குள் இருந்த 25 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத் படைக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே உச்சகட்ட போர் நடைபெற்று வருகிறது.

நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் போரில் 100 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். தீவிரமாக நடைபெற்று வரும் இந்தப் போரை நிறுத்துவது முடியாத காரியம் என்று சிரியாவுக்காக நியமிக்கப்பட்டுள்ள பன்னாட்டு தூதர் லக்தர் ப்ரஹிமி



தெரிவித்தார்.

மனித உரிமை குழு தலைவர் டேவிட் பீட்ராயஸ் டமாஸ்கஸில் பேச்சு நடத்த இருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இருதரப்புத் தாக்குதலிலும் அவதியுறும் பொது மக்களுக்கு உதவ செஞ்சிலுவைச் சங்கத்தினர் அங்கு சென்றுள்ளனர். கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் இந்தப் பகுதியில் உள்ள கடைகள் மற்றும் வீடுகள் புல்டோசர் மூலம் இடிக்கப்பட்டு வருவதால் பொது மக்கள் தெருக்களில் நின்று தவிப்பதாகவும் கூறப்படுகிறது.

அலிப்போ நகரில் கிளர்ச்சியாளர் வசம் இருக்கும் பகுதியை இன்னும் 10 நாள்களில் மீட்டுவிடுவோம் என்று இராணுவ அதிகாரி உறுதியுடன் தெரிவித்தார்.

இதற்கிடையில் இராணுவத்தின் அத்துமீறல்களைத் தடுக்க ஆயுதம் தேவை என்றும், இதனை தமக்குத் தரும்படியும் கிளர்ச்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் சிரியா பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தவும், வன்முறையை நிறுத்தவும் உடனே தலையிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்கள். (வ)

# 4 மாத இழுபறிக்குப் பின்னர் அல்ஜீரியாவுக்கு புதிய பிரதமர்



அல்ஜிரிஸ், செப்.6

அல்ஜீரியாவில் 4 மாதங்கள் இழுபறிக்குப் பின்னர் அப்துல் மாலிக் செல் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் கடந்த மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தது. இருப்பினும் அங்கு நிலவிய அரசியல் நெருக்கடியால் புதிய பிரதமர், அமைச்சரவையை அமைப்பதில் இழுபறி நீடித்தது. இந்நிலையில் 4 மாதத்திற்கு பிறகு நாட்டின் புதிய பிரதமராக அப்துல் மாலிக் செல் என்பவரை நியமனம் செய்து இருப்பதாக ஜனாதிபதி அப் துலாஷிஸ் அறிவித்துள்ளார்.

புதிய அமைச்சர்கள் குறித்து பிறகு அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. புதிய பிரதமரைத் தெரிவு செய்வதில் 4 மாத இழுபறிக்குக் காரணம் என்ன என்பது வெளியிடப்படவில்லை. (வ)

# அசாஞ்சே அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படமாட்டார்

## சுவீடன் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு

ஜூலியன் அசாஞ்சே ஈக்குவடோர் தூதரகத்தை விட்டு வெளியேறினால், அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்படுவார் என்பதெல்லாம் ஆதாரமில்லாத குற்றச்சாட்டு என்று சுவீடன் வெளிவிவகாரத் துறை அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பிரிட்டனோ, சுவீடனோ அசாஞ்சேவை விசாரணைக்காக மூன்றாவதாக ஒரு நாட்டுக்கு அனுப் பாது.

மரணதண்டனை நடைமுறையில் உள்ள நாடுகளுக்கு நிச்சயமாக அவரை அனுப்பிவைக்கும் எண்ணம் பிரிட்டனுக்கு இல்லை.

மனித உரிமை மீறல் எதுவும் அசாஞ்சே மீது நடைபெறாது என்று ஹேக் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவருக்கு மரணதண்டனை அளிப்பதற்கான எந்த நோக்கமும் அவசியமும் இல்லை- என்றுள்ளது

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நிறுவுந ர் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அரசு இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தியவர்.

அமெரிக்க அரசு அவர் மீது கடும் கோபத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிலையில் சுவீடன் நாட்டில் 2 பெண்களை பலாத்காரம் செய்ததாக அசாஞ்சே மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக லண்டனில் இருந்த அசாஞ்சே கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (வ)

# ஏவுகணை பாதுகாப்பு கட்டமைப்பு அடுத்த ஆண்டில் நிறைவடையும்

## ஈரான் அறிவிப்பு

தமது ஏவுகணை பாதுகாப்புக் கட்டமைப்பை அடுத்த ஆண்டில் நிறைவு செய்யவுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இந்த கட்டமைப்பின் 30 வீதம் தற்போது நிறைவு பெற்றுள்ளதாக ஈரானின் இராணுவ விமான பாதுகாப்பு படையின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி கூறியுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையே, பெரியளவில் விமானப் பாதுகாப்பு பயிற்சி நடவடிக்கையை அடுத்த இரண்டு மாதங்களில் முன்னெடுக்கவுள்ளதாகவும் அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. சர்ச்சைக்குரிய அணுத் திட்டம் குறித்து இஸ்ரேல் மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களை ஈரான் எதிர்நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தமது ஆயுதக் கட்டமைப்புக்களை தரமுயர்த்தி வரும் ஈரான், பல்வேறு இராணுவப் பயிற்சிகளையும் நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

### புதிய விசா கொள்கை

இந்தியா - பாகிஸ்தான் இடையே, புதிய விசா கொள்கைக் கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, வரும், 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை, பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

இப் பயணத்தின் போது, இந்தியா - பாகிஸ் தான், நாடுகளின் மக்களிடையே, சகஜமான உறவு ஏற்படும் நோக்குடன், புதிய விசா கொள்கைக்கான ஒப்பந்தத்திலும், கிருஷ்ணா கையெழுத்திடுகிறார். ஒப்பந்தத்தின் படி, இருநாட்டு மக்களும், எளிதில் விசாக்களை பெறும் வகையில், வழிமுறைகள் உருவாக்கப்படும். (வ)


**கோழிக்குஞ்சு விநியோகம்**

1½ மாதம் வளர்ச்சியடைந்த நல்லின சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள், விற்பனைக்குண்டு.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.

(22496)(5.6.7) T.P NO : 077 6090926

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA No -1 புறொயிலர் குஞ்சுகள் 06.09.2012 இன்று விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(22495)(5.6.7) T.P : 077 6090926

**கோழிக்குஞ்சு விற்பனை**

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொ யிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை தொ.பே : 077 8996085

(22499) (5.6.7)

**கண்காட்சி**
Exhibition @
Angel International School, Manipay.
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்
Dates: 6th, 7th & 8th Sept 2012
Time: 9.00am to 7pm
Admission by programme.
*Open to Students of all ages, parents and well-wishers*
(22510)(6-7)

**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலி பல்கலைக்கழக பகுதியில் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

(22531)(5-6-7) தொடர்பு: 077 420 6675

**வீடு வளவு விற்பனைக்கு**

ஆடியபாதம் வீதி, முருகன் வீதி, திருநெல்வேலியில் வீடு, வளவு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

(22530)(5-6-7) தொடர்பு: 077 982 2642

**தவறிவிட்டது**

உரும்பிராய் தெற்கு சோதிலிங்கம் ரகுனா என்பவருடைய தே.அ.அட்டை (738614240V) உரும்பிராய் சந்திக்கும் டிப்போவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

(22531)(5-6-7) தொடர்பு: 077 797 1980

**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 17 - 01 - 1982



உதிர்வு 06 - 09 - 2006

**சற்குணராசா ருசந்தன்**

காலனவன் செய்த காட்டேரி வேலையால்
கண்ணீரில் எமை விட்டு
காத தூரம் சென்றதேனடா?

காலங்கள் கரைந்தோடி போகுதடா -ருசந்தா
கண்கள் குளமாகி ஆறாண்டுகள் ஆனதடா
இருப்பினும் உன் நினைவுகள் கனவிலும் போகாதடா!!!

தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி

(22469)(6-7)

உன்பிரிவால் வாடும் குடும்பத்தினர்

**ஓராண்டு நினைவினில்.**



அமரர்
**சிவசம்பு சிவராசா**

வருடங்கள் ஓடி மறைந்தபோதும்
நீங்கள் எங்களை விட்டு மறைந்தாலும்
எங்கள் இதயங்களில் என்றும்
உங்கள் நினைவு தான்.
உங்கள் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள்.

நாவலடி லேன்,
மானிப்பாய்.

[22510][5-6-7]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(05)

பயத்தை வளர்த்துக் கொள்கின்றவர்கள், அதைத் தவிர்க்க முயலாத போது, எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது இடையூறுகளுக்கு ஆளாகிப் போகிறார்கள். உதாரணத்தை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன் .

என்னுடைய நண்பர் ஒருவருக்கு விமானத்தில் பிரயாணம் செய்வது என்றால் பயம். ஆகாயத்தில் பறக்கின்ற விமானம் விழுந்துவிடும் என்று அவராகவே மனதில் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டார்.



விமானத்தில் பறந்தால் விபத்து ஏற்படும் என்று பயந்து கொண்டு அந்த நண்பர் விமானத்தில் ஏறுவதில்லை. அதனால் அவர் ரயில் பிரயாணமே செய்து வந்தார். சுலபத்தில் முடிய வேண்டிய காரியங்களைக் கூட காலதாமதமாகவே அவர் செய்ய வேண்டியிருந்தது. அந்த நண்பரைப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்கு அனுதாபமே ஏற்படும்.

இது பற்றி அவரிடம் நான் பலமுறை விவாதித்திருக்கிறேன். விமானப் பயணத்தின் போது தான் விபத்து ஏற்பட வேண்டும் என்கிற கட்டாயமில்லை. ரயில் பயணத்திலும் கூட அது ஏற்படலாம். காரில் பயணம் செய்கின்றவர்களுக்கு விபத்து ஏற்படுவதில்லையா? இதை விளக்குவதற்கு எனக்குத் தெரிந்த சில சம்பவங்களை அவரிடம் விவரித்தேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராக அஜீஸ் இருந்தார். எனக்கு அவர் நெருக்கமான நண்பர். அப்பொழுது பக்தவத்சலம் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்தார். அவருடைய அமைச்சரவையில் மஜீத் என்பவர் ஓர் அமைச்சராக இருந்தார். நண்பர் அஜீஸ் வேலூருக்கு ஒரு பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தார். பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு, காட்பாடியில் ரயில் ஏறி, சென்னைக்கு அவர் வருவதற்கு முதல் வகுப்பில் அவருக்கு இடம் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது. தற்செயலாக வேலூருக்குச் சென்றிருந்த அமைச்சர் மஜீத்தை அவர் சந்தித்தார்.

மஜீத் அன்றிரவே சென்னைக்கு தன்னுடைய காரில் திரும்புவதாக இருந்ததால் ரிசர்வ் செய்த டிக்கெட்டை கேன்சல் செய்துவிட்டுத் தன்னுடன் வரும்படியாக அஜீஸை அழைத்தார். அஜீஸும் ஒப்புக்கொண்டு மஜீத்துடன் சென்னைக்கு காரில் திரும்பினார். வரும் வழியில் காரை ஓர் இடத்தில் நிறுத்தி விட்டு சிறுநீர் கழிப்பதற்காக இருவரும் இறங்கினார்கள். திரும்பி வந்து உட்காரும் போது மஜீத் உட்கார்ந்திருந்த இடத்தில் அஜீஸும், அஜீஸ் உட்கார்ந்திருந்த இடத்தில் மஜீத்தும் இடம் மாறி அமர்ந்தார்கள்.

கார் சென்னை நோக்கிப் புறப்பட்டது. வரும் வழியில் விபத்துக்குள்ளாயிற்று. மஜீத் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். அஜீஸ் விபத்தில் மரணம் அடைந்தார்.

இதற்கு என்ன விளக்கம் சொல்லுவது? விபத்துக்கள் எப்பொழுது ஏற்படும், யாரைப் பாதிக்கும் என்று யாரும் முன் கூட்டிச் சொல்வது சாத்தியமில்லை. ஆனால் நண்பர் என்னுடைய வாதங்கள் எதையும் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. விமானப் பயம் அவருக்கு இருந்து கொண்டே இருந்தது.

அடிக்கடி அவர், விமான விபத்தில் உயிர் துறந்ததை சொல்லிக்கொண்டேயிருப்பார். எங்கள் இருவருக்கும் இறந்து போன அந்த இரண்டு பேரும் நெருக்கமான நண்பர்கள். ஆகவே அதைச் சுட்டிக் காட்டி விமானப்பயணத்தில் ஆபத்தை அவர் நினைவு படுத்திக் கொண்டேயிருப்பார்.

அவரை தைரியப்படுத்துவதற்காக அவருக்கு வேறு ஒரு சம்பவத்தை நினைவூட்டினேன். ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவர் சந்திர மண்டலம் வரையில் சென்று ஆராய்ச்சிகள் நடத்திவிட்டு பூமிக்கு பத்திரமாகத் திரும்பி வந்து விட்டார். ஆனால் அவரே ஒரு முறை விமானப் பயணம் செய்த பொழுது விபத்துக்கு உள்ளாகி மாண்டு போனார்.

ஆபத்து நிறைந்த விண்வெளிப் பயணம் சென்று பத்திரமாகத் திரும்பியவர் விமான விபத்தில் இறந்து போனதற்கு எவ்வாறு விளக்கம் சொல்ல முடியும்?

நண்பர் என்னுடைய வாதத் திறமையைப் பாராட்டினாரே தவிர விமானப்பயணத்திற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு முறை நாங்கள் இருவரும் பெங்களூர் சென்று இருந்தோம். அவர் உடனடியாகச் சென்னை திரும்ப வேண்டிய கட்டாயமிருந்தது.

இருவருமே விமானத்தில் சென்னைக்குத் திரும்பி விடலாம் என்று நான் ஆலோசனை சொன்னேன். திடீரென்று விமான ரிக்கெற் கிடைப்பது கஷ்டமாயிற்றே என்றார் நண்பர்.

அவருடைய உண்மையான கவலை அதுவல்ல. எப்படியும் விமானப் பயணத்தைத் தவிர்க்க வேண்டுமென்று அவர் விரும்பியதே அதற்குக் காரணம்.

என்னுடைய நிர்ப்பந்தத்தின் பெயரில் இரண்டு பேரும் டிராவல் ஏஜென்ஸிக்குச் சென்று ரிக்கெற் கேட்டோம். ரிக்கெற் கிடைத்து விட்டது. ரிக்கெற்றை வாங்கிக் கொண்டதுமே நண்பருடைய முகத்தில் பயஉணர்ச்சி பரவியது.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# தனியார் கல்வி நிறுவன நடவடிக்கைகள் பாடசாலையை மேம்படுத்த உதவ வேண்டும்

## வதிரி விளையாட்டு விழா நிகழ்வில் உரை

தனியார் கல்வி நிறுவன நடவடிக்கைகள், அரச பாடசாலை நடவடிக்கைகளை மேம்படுத்த உதவ வேண்டுமே தவிர, அரச பாடசாலை நடவடிக்கைகளுக்கு உத்தரவாதமாக மாறி அவற்றின் மீது ஒரு சுமையாக மாறிவிடக் கூடாது. எந்தவொரு நடவடிக்கையும் கல்வியில் இருந்துதான் ஆரம்பிக்கிறது என்று பொருளியலாளரும் பருத்தித்துறை பிரதேசசபை உபதலைவருமாகிய மா.லோகசிங்கம் தெரிவித்தார்.

வதிரி பூவக்கரை கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே லோகசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் மாவட்டங்களில் முன்னிலை வகித்த யாழ்.மாவட்டம் இன்று கீழ் மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை கோடிட்டு காட்டப்பட வேண்டியுள்ளது. நிறைவையும் கல்வியிலே காண்பவர்கள் தான் யாழ்ப்பாணத்து மக்கள். ஆனாலும் இன்று யாழ்ப்பாணத்துக் கல்வி நிலையும், அதன் தரமும் கேள்விக்குறியாகியுள்ளன.

அரசின் பொதுப் பரீட்சைகள் மூலமான அடைவுமட்டம் சில வேளைகளில் நல்ல நிலைமைகளைக் கொண்டிருந்தாலும், இன்று அடிப்படையான ஒரு விடயம் என்னவெனில் சர்வதேச மட்டத்தில் அடையப்பட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்து வளர்ச்சிகளில் சிலவற்றையேனும் சராசரியாக மாணவர்கள் அடையக்கூடிய விதத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லையென்பதே கவலையளிக்கும் விடயமாகும்.

1970 களின் இறுதிப் பகுதியிலிருந்து தோற்றம் பெற்ற தனியார் கல்வி நிறுவனங்கள் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்திக்கொள்ள உதவின என்பதில் எதுவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனாலும் அன்றுமுதல் இன்றுவரை ஆசிரியர்களின் விரிவுரை வார்த்தைகளை எழுத்தில் வடிக்கும் இயந்திரங்கள் என்ற தரத்துக்கு மாணவர்கள் குறைக்கப்பட்டுள்ளனரே தவிர, எந்த வகையிலும் மாணவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்தும் ஓர் இயக்கத் தன்மை வாய்ந்ததாக தனியார் கல்வி நிலையங்கள் மாறவில்லை என்பது வெளிப்படையாகும்.

தனியார் கல்வி நிலையங்களில், கற்கின்ற பாடசாலை மாணவர்களால் அரச ஆசிரியர்களும் அதிபர்களும் சில தருணங்களில் அவமதிப்புக்குள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. பல ஆசிரியர்கள் மாணவர்களின் கீழ்ப்படிவற்ற நடத்தையின் காரணமாக வெளியில் சொல்லித் தீர்க்க முடியாமல் வேதனையுடன் தமது சேவைகளைத் தொடர்பவர்களாக உள்ளனர் -என்றார்.

(எ-402)



தென்புலோலி குரும்பைகட்டியைச் சேர்ந்த சி.சிவச்சந்திரன் தமிழ், ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்பாளராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்கிறார்.

(8)

# குடும்பத்தில் நிலவும் சுமுகமான நிலை சிறார்களின் ஆளுமை விருத்திக்கு உதவும்

## கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் தெரிவிப்பு

இன்றைய இயந்திரமான உலகில் பெற்றோருடன் அதிக நேரத்தைச் செலவிட சிறார்களுக்கு சந்தர்ப்பம் குறைவாகக் காணப்படுகின்றது. பெற்றோருடன் பூரண தொடர்பில்லாத சிறார்களிடத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவு செய்யப்படாமையால் தன்னம்பிக்கை குன்றும். ஆகவே பெற்றோருடனான தொடர்பிலும், இயல்பிலும், அளவிலும் சிறார்களின் ஆளுமைச் சிதைவின் இயல்பும் அளவும் தங்கியிருக்கும் என்று தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பா.தனபாலன் தெரிவித்தார்.

திருநெல்வேலி முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்குமான செயலமர்வில் முதன்மை வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தனபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குடும்பத்தில் நிலவும் சுமுகமான நிலை சிறார்களின் ஆளுமையை விருத்தியாக்குகின்றது. பெற்றோருடனான உறவு, கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், கூட்டாகச் சேர்ந்து தீர்மானம் மேற்கொள்ளல், இணைந்து செயற்படல், எல்லோரும் ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், இறைவழிபாடு செய்தல், கோயிலுக்குச் செல்லுதல், சுற்றுலாவுக்குச் செல்லுதல் என்பனவற்றால் குடும்பம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும். இதனால் வளரும் சிறார்கள் [illegible] பெற்ற பூரண ஆளுமை உடையவர்களாவார்கள்.

எனவே சிறுவர் பாடசாலை, வீட்டுக்கும், பாடசாலைக்கும் ஒரு பாலமாக அமைகின்றது. சிறுவர் பாடசாலைச் சூழல் வீட்டுச் சூழலுக்குச் சாதகமாக அமைந்தால், அதனால் பழக்கப்பட்ட சூழலிலிருந்து முதன்முதலாக விலகிச் செல்லும் சிறார்களுக்கு ஆறுதலும் மனஅமைதியும் கிடைக்கும். பிள்ளை தனது பெற்றோரின் வீட்டுச் சூழலை மறந்து, சிறார் பாடசாலையில் நிகழும் பலவகையான செயற்பாடுகளிலும், விளையாட்டிலும் கலந்து கொள்ளவும், மனதை ஒருநிலைப் படுத்தவும் முடியும்.

நல்ல பயிற்சியும், ஆளுமையும் கொண்டு பெற்ற தாய்போல நடந்து கொள்ளக்கூடிய முன்பள்ளி ஆசிரியையால் மட்டுமே சிறார்களுக்கு உகந்த இடமாக பாடசாலையை மாற்ற முடியும். சிறார் பாடசாலை ஆசிரியைகளிடம் மனிதத் தன்மை குறைபாடுகள் காணப்பட்டால் பிள்ளை அங்கிருந்து வெளியேறவே விரும்புவான்; ஆசிரியைமேல் வெறுப்படைவான்.

இந்த வெறுப்பு குடும்பம், கல்வி, சமுதாயம், நண்பர்களிடமும் தோன்ற இடமுண்டு. சிறார் பாடசாலை ஆசிரியைகள் மீது ஆரம்பத்தில் ஏற்படுத்திக் கொண்ட மனப்பாங்கு நீண்டகாலத்துக்கு பிள்ளையின் மனதில் உறங்கிக் கிடக்கும். இவ்வாறான கசப்பான அனுபவங்கள் பிற்காலத்தில் பிள்ளைகளுக்கு சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள, சமூகமயமாக மேலும் தடையாக அமையும்.

மகிழ்ச்சிகரமான கற்றல் சிறார்களின் ஆளுமையைச் செழிப்பூட்டும். பிள்ளைக்குச் சாதகமாக பாடசாலைச் சூழல் இருந்தால் மட்டுமே, கற்றலில்நாட்டம், உற்சாகம் காட்ட முடியும். பிள்ளையின் திறன்களை மதித்தல், பிள்ளையை ஏற்றுக்கொள்ளல், பிள்ளைக்குரிய இடமளித்தல், பிள்ளையின் விருப்பத்துக்கு ஏற்ப கற்பித்தல், அன்பு, கருணைகாட்டல், தண்டனைகள் கொடுக்காமை என்பன சாதகமான காரணிகளாகும்.

பல்வேறு காரணங்களால் பாடசாலைகளில் ஏற்படும் குறைபாடுகளும், பொருத்தமற்ற நடவடிக்கைகளும் இன்று பெருகி வருகின்றன. தலைமைத்துவம், முன்நிற்றல், பொறுப்பை ஏற்றல், குழுவாகச்செயற்படல், பொறுமை, நட்பு போன்ற பண்புகளை, மற்றவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து செயற்படும் போதும் விளையாடும் போதும் கற்றுக்கொள்கின்றது.

பாடசாலையிலே இத்தகைய மனப்பாங்குகளை வளர்க்காமல் போட்டிமுறை, திணிப்புக்கல்வி, பல்வேறு தரப்பினர் ஊடான பலாத்காரமான செயற்பாடுகள், பொருத்தமற்ற மனிதத்துவமற்ற நடத்தைகள், பொருத்தமற்ற கடும் தண்டனைகள் என்பவற்றால் இன்றைய மாணவர்களுடைய ஆளுமை சிதைவடைகின்றது. இவற்றைத் தடுக்க மிக விரைவான விழிப்புணர்வுச் செயற்திட்டங்களையும், வலுவூட்டும் செயற்பாடுகளையும் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் -என்றார்.

(எ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 2229944, 5679933, 5679944
**விளம்பரம்:** 021-5671111
**விநியோகம்:** 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021228 0065
தொலைநகல்: 021228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 0212262395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹாரா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# மனிதத்தைப் பேணுவோம்

இலங்கை அரசுக்கு எதிரான உணர்வுகள் தமிழ் நாட்டில் பொங்கிப் பிரவாகிக்கத் தொடங்கிவிட்டன. இந்த நிலை அங்கு ஏற்பட்டதற்கு இலங்கை மற்றும் இந்திய அரசுகளே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழகத் தமிழர்கள் இதுவரை நியாயமான ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராகவே கண்டனங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தார்கள். அப்போதெல்லாம் இலங்கை யாத்திரிகர்கள் மீதோ சுற்றுலாப் பயணிகள் மீதோ அவர்கள் கை வைத்ததில்லை.

இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி கொடுக்காதீர்கள் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா புதுடில்லி அரசிடம் திரும்பத் திரும்ப வலியுறுத்தியும் அதனைக் கவனத்தில் எடுக்காததும், எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திவரும் தாக்குதல்களை அது நிறுத்தாததும், தமிழக அரசியல்வாதிகளுக்கு எதிராக சிங்களக் கடும்போக்குவாதிகள் தெரிவிக்கும் அதிதீவிரக் கருத்துக்களுமே நிலைமையை இப்போது இந்தளவுக்கு மோசமாக்கி உள்ளன.

தமிழர்களின் உணர்வை மத்திய அரசு புரிந்துகொள்ளவில்லை; மதிக்கவில்லை என்று கருதும் தமிழ் இன உணர்வாளர்கள் அதன் விளைவாக இப்போது தமது ஆத்திரத்தை, யாத்திரிகர்கள் மீதும் விளையாட்டு வீரர்கள் மீதும் திருப்பி உள்ளனர்.

இலங்கை அரசுக்கும் அதன் படைகளுக்கும் எதிரான போக்கு தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளிடமும் – திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பன உட்பட – தீவிரமாக வேரூன்றி இருப்பது இத்தகைய சில்லறைத்தனமான, பொதுமக்களுக்கு எதிரான வெறுப்பூட்டல்களுக்குச் சாதகமாகவும் அமைந்துள்ளன.


மாநில ஆட்சியில் உள்ள அரசும் தமது உணர்வுகளையே பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும்போது தாம் எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கை போராட்டக்காரர்களுக்குத் தானாகவே ஏற்பட்டுவிடுகின்றது. இதனால் அவர்கள் சிலவேளைகளில் வரம்புகளை மீறிச் சென்றுவிடுகிறார்கள்.

இந்த இடத்தில்தான் தமிழக அரசும் தமிழ் இன உணர்வாளர்களும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள் சில உண்டு. இலங்கை அரசுக்காகவும் அதன் படைகள் செய்த கொடூரங்களுக்காகவும் சிங்களப் பொதுமக்களை இலக்கு வைப்பதும் துன்புறுத்துவதும் நியாயமாகிவிடாது. பின்னர் போரில் அப்பாவித் தமிழ் மக்களை சிங்கள அரசு கொன்று குவித்தமைக்கு எதிராக நீதி கேட்கும் எமது தார்மீக உரிமையை அது கேள்விக்குறியாக்கிவிடும்.

போரில் அப்பாவித் தமிழர்களை ஆயிரக்கணக்கில் கொன்றதற்காகவும் வயிற்றுப்பிழைப்புக்காகக் கடல் தாண்டும் இந்திய மீனவர்களைக் கொன்றும் துன்புறுத்தியும் வந்ததற்காகவும் குரல் எழுப்புவதற்குத் தமிழர்களுக்கு உள்ள நியாயங்களைக் கேள்விக்குள்ளாக்கும் இத்தகைய போராட்டங்களைத் தவிர்த்துக் கொள்வதே நல்லது.

இலங்கை அரசுக்கும் அதன் படைகளுக்கும் இந்திய அரசுக்கும் எதிராக எமது போராட்டங்களை மேலும் மேலும் தீவிரப்படுத்துவதே நன்மை பயக்கக்கூடியது. அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லையே என்று தமிழ் இன உணர்வாளர்கள் அங்கலாய்ப்பது புரிகிறது. ஆனாலும் வேறு என்ன செய்வது? இருக்கும் ஒரே வழியும் மார்க்கமும் அதுதான். சிங்களவர்கள் மனிதத்தைத் தொலைத்து விட்டார்கள் என்பதற்காக நாமும் அதனை இழப்பது சரியாகாது.

# உண்மையான பொறுப்புக்கூற இலங்கை அரச மனமில்லை



**செயற்திட்டம் எடுத்துக்கா**
**மன்னிப்புச் சபை ஐ.நா**

- பாரதூ
கனை
சின்
வில்லை
- போர்க்
வனங்க
பரிந்து
தும் பொ
- குற்றங்க
களிப்ப
விட்டால்
வுக்கு ஐ.
வேண்டும்.

இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 10-28ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 21 ஆவது மாநாட்டுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை சமர்ப்பித்துள்ள எழுத்து மூலமான அறிக்கையின் விவரம்: 'பொறுப்பு கூறுவதற்கு உண்மையான ஆர்வமில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கைஅரசு தயாரித்துள்ள தேசிய செயல் திட்டத்தில் குறைபாடுகள்' என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபை சமர்ப்பித்துள்ள அறிக்கை.

மனித உரிமைகள் பாரதூரமாக மீறப்பட்டுள்ளமைக்கு பொறுப்புக் கூற இலங்கை அரசு தவறியிருப்பதானது குற்றங்களிலிருந்து விலக்களிக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அதனால் தாம் நினைத்தபடி தடுப்புக்காவலில் வைத்தல், சித்திரவதை அல்லது வேறுவித கொடுமைக்குள்ளாக்குதல், பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் மற்றும் பாதுகாப்பில் வைத்திருக்கும் போது கொலை செய்தல் போன்றவை கட்டுப்பாடு இன்றி தொடர்ந்து நடைபெறுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுற்று மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையிலும் இந்த வகையான உரிமை மீறல்கள் அறிக்கையிடும் வகையில் தொடர்கின்றன.

எல்.ரி.ரி.யுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று சந்தேகிக்கப்படும் நூற்றுக்கணக்கானவர்கள் குற்றஞ்சாட்டப்படவோ, விசாரிக்கப்படவோ இல்லாத நிலையில் தடுப்புக்காவலில் வைப்பதற்கு பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் மீதே அதிகாரிகள் இன்னமும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆள்களை நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைத்திருக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அனுமதிக்கின்றது. தடுப்புக் காவலில் உள்ளவர்கள் சித்திரவதைக் குட்படுத்தல் அல்லது மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் எழும்போது ஆதாரங்களை அது மாற்றிவிடுகின்றது. கருத்து வெளியிடும் உரிமை, தொடர்பு கொள்ளும் உரிமைகளை கட்டுப்படுத்துவதுடன் எதிர்ப்புகளை அடக்கிவிடவும் அது பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளை சர்வதேச மன்னிப்புச்சபை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளது.

2012 மார்ச் 22 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 19/02 தீர்மானம் ஒரு முக்கிய முன்னேற்றமாக அமைந்தது. போர்க் குற்றங்கள் உட்பட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையை அது பொறுப்புக் கூறும்படி கோரியிருக்கிறது. எல்.எல்.ஆர்.சி பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக செயற்திட்டமொன்றை வரையும்படி இலங்கை அதில் வற்புறுத்தப்பட்டது. அத்துடன் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டது. எல்.எல்.ஆர்.சியின் அறிக்கையானது சர்வதேச சட்டங்கள் பாரதூரமாக மீறப்பட்டமை தொடர்பாக போதுமான அளவு அக்கறை காட்டவில்லை என்று தீர்மானத்தில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது.

### தேசிய செயல் திட்டத்தில் குறைபாடுகள்

2012 ஜூலை மாதம் தேசிய செயற்திட்டம் ஒன்றை தயாரித்திருப்பதை இலங்கை அரசு வெளிப்படுத்தியது. எல்.எல்.ஆர்.சியின் 285 பரிந்துரைகளில் 92 பரிந்துரைகளுக்குள் அது தன்னை கட்டுப்படுத்திக் [illegible] [illegible] அமைப்புகள், சுட்டிக்காட்டுபவர்களின் செயற்பாடுகள் போன்றவற்றுடன் கால அவகாசங்களையும் அதில் தெரிவித்துள்ளது. ஆனால் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறுவது தொடர்பாக செயற்திட்டம் போதுமானஅளவு கரிசனை காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. நல்லிணக்கத்துக்கு முக்கியமாகத் தேவைப்படும் சீர்திருத்தங்களை அது பிற்போட்டுள்ளது. இன்னமும் செயற்படத் தொடங்காத நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அவைகளைப் பாரப்படுத்தியுள்ளது.

பொறுப்புக்கூறும் செயற்பாடுகள் திட்டத்தில் அழுத்தமற்ற முறையில் குறிப்பிடப்பட்டுள்ளன. சுயாதீனமான புலனாய்வுகள், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக எல்.எல்.ஆர்.சி. குறிப்பாக தெரிவித்துள்ள பரிந்துரைகளுடன் இவை இணங்கிப் போவதாக தெரியவில்லை. உத்தேச நடவடிக்கைகள் பொதுவில் தற்பொழுது நடைமுறையிலுள்ள பொறிமுறைகள் [illegible] செயல்முறைகள் பற்றியே [illegible]கின்றது. இவைகள் செயற்பட முடியாதவை என்று சர்வதேச மன்னிப்புச்சபை ஏற்கனவே ஆவணப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் மிகப் பெரிய பலவீனம் என்னவென்றால் அது உரிமை மீறல்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் பொலிஸார் மீதே பெரிதும் தங்கியிருப்பதாகும். ராணுவச் சிப்பாய்கள், கட்டளை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் போர்க் குற்றங்கள் புரிந்துள்ளார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் நிலையில் எல்.எல்.ஆர்.சி பரிந்துரைகளை செயற்படுத்தும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிடமே வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தவறாகக் கொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்கு ஏற்பாடு செய்வது மற்றும் ஆள்கடத்தல்கள் பலவந்தமாக அல்லது தன்முனைப்பாக காணாமல் போனவர்கள் மற்றும் பாரபட்சமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதும் அவர்களிடமே வழங்கப்படுவதாக உள்ளது. திட்டமானது புதிதாக அல்லது சுதந்திரமான புலனாய்வுகளை குறிப்பிடுவதாக இல்லை. அதற்குப் பதிலாக உள்ளக ஒழுக்கம் தொடர்பான நடைமுறைகளை குறிப்பிடுகின்றது. தற்போது செயற்பாட்டிலுள்ள இலங்கை ஆயுதப் படைகளின் சட்ட விதிகளை குறிப்பிடுவதாக அது இருக்கலாம். பலவந்தமாக காணாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ள
# ...றலுக்கு
# ...ரசுக்கு

**...துக்காட்டுவதாக**
**...ஐ.நாவுக்கு அறிக்கை**

...பாரதூரமான குற்றச்சாட்டுக்களை போதுமான அளவு அரசின் செயற்றிட்டம் கவனிக்கவில்லை.

...போர்க் குற்றம் சாட்டப்பட்ட நிறுவனங்களிடமே ஆணைக் குழு ...ரிந்துரைகளை செயற்படுத்...ம் பொறுப்பு.

...ற்றங்களில் இருந்து விலக்...ளிப்பதை இலங்கை நிறுத்தி...ட்டால் சர்வதேச புலனாய்...க்கு ஐ.நா. ஏற்பாடு செய்ய...ண்டும்.

போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக புலனாய்வுகளை மேற்கொள்ள சிறப்பு ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற எல்.எல்.ஆர்.சி பரிந்துரையை அது நிராகரிக்கின்றது.

**சனல்-4 தொலைக்காட்சி**

சனல்-4 தொலைக்காட்சியின் உண்மைத்தன்மையை அல்லது அதற்கு மாறான நிலைமையை நிலைநாட்டுவதற்கு ஒரு சுயேச்சையான புலன் விசாரணையை நடத்தும்படி எல்.எல்.ஆர்.சி பரிந்துரைகளில் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. (குறிப்பாக இலங்கை ராணுவத்தினர் சட்ட விரோத கொலைகளை செய்திருக்கலாம், மோதல்களின் கடைநிலையில் பிடிபட்ட எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்திருக்கலாம் என்பவை) ராணுவம் நடத்தி வரும் குற்றச்சாட்டுக்களின் உண்மைத்தன்மை பற்றிய விசாரணைகளை பாதுகாப்பு அமைச்சு தான் பகுப்பாய்வு செய்யும். அவ்வாறு கிடைக்கும் முடிவுகளை வைத்து பொருத்தமான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திட்ட அறிக்கை கூறுகிறது. சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் செயற்படுவதை ஒழிக்கும்படியும் அதே பாதுகாப்பு அமைச்சை செயற்திட்டம் கேட்டுக்கொள்கின்றது. அவைகளில் பலவும் பாதுகாப்புப் படைகளுக்காக அல்லது அவர்களுடன் சேர்ந்து செயற்பட்டுள்ளன என்பது குற்றச்சாட்டுகளாகும். ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள் என்று பொலிஸார் மீது குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலையில் ஊடகப் பிரமுகர்கள் மீதான தாக்குதல்களை அவர்கள் முடிவுக்கு கொண்டு வந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

பொருத்தமான சந்தர்ப்பங்களில் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை திட்டம் வலியுறுத்தினாலும் சுயேச்சையான புலனாய்வுகளுக்கு இடமில்லை என்பதால் சிரேஷ்ட கட்டளையிடும் நிலையிலுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதென்பது சாத்தியமற்றதாகும்.

இலங்கை அரசுடன் ஆலோசனைகள் நடத்தியும் அதன் சம்மதத்தோடும் குறிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கும்படியாகவும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கும்படியாகவும் மன்னிப்புச் சபையின் 19/2 தீர்மானத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும் மற்றும் சம்பந்தப்பட்ட ஆணை பெற்றவர்களையும் மன்னிப்புச்சபையின் 19/2 தீர்மானம் வற்புறுத்துகின்றது. அத்துடன் மன்னிப்புசபை வழங்கிய உதவிகள் தொடர்பாக அதன் இருபத்திரண்டாவது மாநாட்டில் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் கேட்டுள்ளது.

19/2 தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பாக தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்காக மனித உரிமைகள் சபையின் நிபுணர்கள் வருவதை வரவேற்பதாக இலங்கை அரசு கடந்த ஓகஸ்ட் மாதம் அறிவித்தது.

இந்தக் குழுவினர் உத்தேச செயல்முறை அமைப்புகளின் சுயேச்சைத் தன்மை தொடர்பாக குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வற்புறுத்துகின்றது. நம்பகமான சுயேச்சையான செயற்பாடுகளின் அவசியத்தை தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சு, ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸார் சட்டமீறல்கள் தொடர்பான விசாரணைகளில் ஈடுபடலாகாது. தங்கள் சொந்த உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பெரும்பாலும் சிரேஷ்ட அதிகாரிகளின் மற்றும் அமைச்சர்களின் பணிப்புரைகளின்படி அவர்கள் செயற்பட்டிருக்கலாம் என்பதால் ஆயுத மோதலின் இறுதிக்கட்டங்களில் தனது ஆயுதப் படைகளினால் அல்லது எல்.ரி.ரி.ஈயினரால் மேற்கொள்ளப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பொறுப்பு கூறுவதற்கு அல்லது புலனாய்வுகள் செய்வதற்கு மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதிவிசாரணைகளை நடத்துவதற்கு இலங்கையின் செயல்திட்டமானது அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்துவதாக காணப்படவில்லை. மனித உரிமைகள் சபையின் 19/2 தீர்மானத்திற்கான இலங்கையின் பொறுப்புகூறுதல் தொடர்பான பிரதிபலிப்பு பொருள் அற்றதொரு நடைமுறையை உருவாக்குவதாகவே இருக்கின்றது.

**ஐ.நா. ஆக்கபூர்வமான அழுத்தம் கொடுக்க வேண்டும்**

ஐ.நாவும் உறுப்பு நாடுகளும் அக்கபூர்வமான் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க வேண்டும். வெறும் திட்டங்களும் வாக்குறுதிகளுமல்ல குற்றசாட்டுக்கு உள்ளாகியுள்ள எல்லாக்குற்றங்கள் தொடர்பிலான புலனாய்வுகளிலும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பாகுபாட்டுக்கு இடமிருக்கலாகாதென அவர்கள் வலியுறுத்த வேண்டும்.

சர்வதேச அழுத்தங்கள் இல்லாமல் இலங்கை அரசாங்கம் அப்படியான குற்றங்கள் தொடர்பாக ஆழமான புலனாய்வு செய்யவோ நீதி விசாரணைகள் செய்யவோ முன்வரமாட்டாது என்பது பெரும்பாலும் உறுதியானதாகும். சர்வதேச மன்னிப்புச் சபை முன்னரும் மனித உரிமை சபைக்கு சுட்டிக்காட்டி இருப்பது போல் உயிர் தப்பியிருப்பவர்களுக்கு நீதி வழங்க தவறுவதானது பேரழிவைக்கொண்டுவரும். மனித உரிமைகளை இலங்கையிலும் சர்வதேசத்திலும் நிலைநாட்ட வேண்டும் என்று குரல் எழுப்பும் எதிர்கால சந்ததியினரை இது அச்சுறுத்துவதாகவே இருக்கும்.

இந்தநிலையில் மனித உரிமைகள் சபையும் உறுப்பு நாடுகளும் இலங்கை பின்வருவனவற்றைச் செயல்படுத்துமாறு கோரிக்கை விடுக்க வேண்டும்

**கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு**

சகலவித உரிமைகள் அல்லது மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டிருப்பது தொடர்பாக எல்.எல்.ஆர்.சியால் அல்லது வேறு வகையில் இனங்காணப்பட்டவை தொடர்பாக உடனடியாக முனைப்புள்ள சுயாதீனப் புலனாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அப்படியான மீறல்களை புரிந்தவர்களுக்கு அவர்களின் அந்தஸ்து அல்லது அரசில் வகிக்கும் பங்கு போன்றவற்றை கருத்தில் கொள்ளாமல் மன்னிப்பு வழங்குவது பற்றி சிந்திக்கவோ மன்னிப்பு வழங்கவோ கூடாது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உரிமை மீறல்களில் தொடர்புடையவையான நிறுவங்களுக்கு தங்கள் சொந்த உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் பொறுப்பு வழங்கப்படலாகாது.

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்**

பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும். இலங்கையின் நிர்வாக ரீதியிலான தடுப்புக் காவல்முறையை ஒழித்துவிட வேண்டும்.


அவசரகாலம் அல்லது பயங்கரவாதத்தடை சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்கள் உட்பட கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்க. அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் சுயேச்சையான முறையில் நிறுவப்பட்ட நீதிமன்றம் ஒன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் தவிர்க்கப்படலாம். எந்த ஒரு நீதி விசாரணையும் உடனடியாக செய்யப்பட வேண்டும் முறையாக நிறுவப்பட்ட சிவில் நீதிமன்றங்களாக இருக்க வேண்டும். சர்வதேச மட்டத்தில் அங்கீகரிப்பட்ட பாதுகாப்புகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். தடுப்புக் காவலில் உள்ளவர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை உடன் நிறைவேற்ற வேண்டும்.

**பலவந்தமாக அல்லது தன்முனைப்பு அற்ற முறையில் காணாமல் போனவர்கள் தொடர்பான செயல்குழு**

மனித உரிமைகள் சபையின் 19/2 தீர்மானத்துக்கு மேலதிகமாக பலவந்தமாக அல்லது தன்முனைப்பு அற்ற முறையில் காணாமல் போனவர்கள் தொடர்பான செயற்குழு வருவதற்காக விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைவாக அக்குழு இங்கு வருவதற்குத் தாமதமின்றி ஏற்பாடுகளை செய்து உதவவேண்டும்.

இலங்கையில் குற்றங்களில் இருந்து விலக்கு அளிக்கும் நடைமுறைக்கு இலங்கை அரசாங்கம் முடிவுகட்டாமல் போகுமானால் இலங்கை அரசினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு சுயாதீனமான சர்வதேச புலனாய்வு பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு ஐ.நா. தயாராகவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## இன்னும் காயாத இரத்தம்



கிழக்கு மண்ணில் செப்ரெம்பர் மாதம் என்றால் அந்த மக்களின் சிந்தனைகள் எல்லாம் பின்னோக்கியதாக இருக்கும். ஏனெனில் அந்த நாள்கள் முழுவதும் மக்கள் சந்தித்த துன்பங்கள் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை. அவை என்றும் மறக்கமுடியாத சோக வடுக்களாகவே அனைவரின் இதயங்களிலும் தழும்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாம் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை, சித்தாண்டி முருகன்கோவில் அகதி முகாம் படுகொலை, வீரமுனை பிள்ளையார் கோவில் படுகொலை, சம்மாந்துறை படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை என்பன கிழக்கு மண்ணில் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலைப் பட்டியல்களாகும்.

இவற்றில் 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவம் மறக்க முடியாத துயர நாள்களாகப் பதியப்பட்டுள்ளன. இன்று அந்தப் படுகொலை நடைபெற்று 22 வருடங்கள் கழிந்துவிட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட சத்துருக்கொண்டான், கொக்குவில், பிள்ளையாரடி, பனிச்சையடி மற்றும் வந்தாறுமூலை ஆகிய பிரதேசங்களில் படுகொலை தாண்டவமாடிய அந்த நாள்கள் ஒவ்வொரு தமிழனில் காலச்சுவட்டில் பதியப்பட்ட தடயங்களாகும்.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5ஆம் திகதி மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த 158 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, செப்ரெம்பர் 9ஆம் திகதி சத்துருக்கொண்டானில் 5 கைக்குழந்தைகள், 42 பத்துவயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 186 தமிழர் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

சத்துருக்கொண்டானில் இடம்பெற்ற கொலைக்களத்தில் இருந்து தப்பிய பிள்ளையாரடிக் கிராமத்தைச் சேர்ந்த ஒருத்தர் பின்னாளில் அளித்த வாக்கு மூலத்திலிருந்தே இந்த உண்மைகள் வெளியாகின. இருப்பினும் அந்த உண்மைகள் என்றும் போலவே அரசால் மூடிமறைக்கப்பட்டுவிட்டன.

வந்தாறுமூலையில் ஒரு இரவு நுழைந்துகொண்ட படையினர் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களை வரிசையில் நிற்குமாறு கூறி, முகமூடி அணிந்தவர்களின் இனங்காட்டலின் அடிப்படையில் 158 இளைஞர்கள் இராணுவத்தினரின் பஸ்ஸில் ஏற்றப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் போன தடயமே இல்லாமல் போனது.

**9ஆம் நாள் சத்துருக்கொண்டான்**

சத்துருக்கொண்டான், போய்ஸ்டவுன் இராணுவ முகாம் ஆகியவற்றில் இருந்து இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து சத்துருக்கொண்டான் கிராமத்தை 9ஆம் திகதி மாலை சுற்றிவளைத்ததுடன் கிராமத்தில் இருந்த சிறுவர்கள், குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் என பாரபட்சமின்றி அழைத்துச் செல்லப்பட்டனர்.

சத்துருக்கொண்டானில் ஆரம்பித்து பனிச்சையடி, கொக்குவில் மற்றும் பிள்ளையாரடி கிராமத்திலும் ஊடுருவி அங்கிருந்தவர்களையும் அழைத்துச் சென்றனர். அவர்களின் நிலையும் என்னவானது என்றே தெரியாது போயிற்று.

இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் அனைவரும் போய்ஸ் டவுன் முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக கிராமத்தில் இராணுவத்தினர் வருவதை அறிந்து அச்சந்தர்ப்பங்களில் ஒளித்து உயிர் தப்பிக் கொண்ட வர்கள் தெரிவித்த கருத்து மட்டுமே பின்னர் உண்மையை உணர்த்தியது.

இந்தப் படுகொலைச் சம்பவங்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதால் தான் அன்றைய காலகட்டத்தில் முஸ்லிம்கள் என்றதும் ஒரு வெறுப்புணர்ச்சியும் பயமும் கிழக்கு தமிழர்களிடத்தில் காணப்பட்டுள்ளது.

இன்று சத்துருக்கொண்டான் படுகொலைச் சம்பவத்தின் நினைவாக, பனிச்சையடிக் கிராமத்தில் நினைவுத் தூபியை மட்டுமே காண முடிகிறது.

புதுக்குடியிருப்பிலும் காணாமற்போயினர்.

இதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு தமிழர்கள் செப்ரெம்பர் 21ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர். பின்னர் மீண்டும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 23ஆம் திகதி 16 இளைஞர்களை விசாரணைக்காக இராணுவத்தினர் அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர் அவர்கள் பற்றிய எவ்வித தகவல்களும் இல்லாமல் போய்விட்டது. அனைவரும் காணாமல் போனோர் பட்டியலிலேயே.

இவ்வாறு கிழக்கு மண்ணில் இராணுவத்தினராலும் ஒட்டுக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவங்கள் அண்மைக்கால அரசியல் மாற்றங்களால் மறக்கடிக்கப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நினைவுச் சுவடுகள் மறையாமல் ஆறாத வடுக்களாக இன்னும் வலித்துக்கொண்டேதான் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநானக் புகட்டிய படிப்பினை

ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். பணத்திற்கு அவரிடம் பஞ்சமே இல்லை. எனவே அவர், இந்த உலகில் தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்தார். இவை போன்ற எண்ணங்கள் பொதுவாக பணம் அதிகம் வைத்திருக்கும் பலருக்கும் தானாகவே வந்துவிடுகின்றன.

ஒரு சமயம், அந்த ஊருக்கு குருநானக் வந்திருந்தார். அவருக்கு இந்தப் பணக்காரர் ஊர் எல்லையிலேயே மிகவும் பெரிய வரவேற்புக் கொடுத்து ஊருக்குள் அழைத்து வந்தார்.

குருநானக்கிடம், ''தாங்கள் என் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிடவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். குருநானக்கும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்.

உடனே தமது மாளிகையில் ஒரு பெரிய விருந்துக்குப் பணக்காரர் ஏற்பாடு செய்து குருநானக்கை அழைத்துச் சென்று அமருமாறு செய்தார். ''ஐயா! நான் தான் இந்த ஊரிலேயே மிகவும் பெரிய பணக்காரன். என்னால் எதுவும் செய்யமுடியும். உங்களுக்காக நான் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள்'' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

இதைக்கேட்ட குருநானக் சிறிது நேரம் சிந்தித்தார். பின் தமது சட்டைப் பைக்குள் கைவிட்டு ஒரு பழைய ஊசியை எடுத்து, அந்தச் செல்வந்தரிடம் கொடுத்தார். ''இதோ பாருங்கள், இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி இதுதான் '' என்றார்.

ஊசியைக்கையில்வாங்கிக் கொண்டு, ''இதைஎன்ன செய்யவேண்டும் '' என்று பணக்காரர் கேட்டார்.

அதற்கு குருநானக், ''இந்த ஊசியை நீங்கள் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். நாம் இருவரும் இறந்து போன பிறகு, மற்றோர் உலகில் நாம் சந்திக்கும் வாய்ப்பு இருக்கிறது. அப்போது இந்த ஊசியைக் கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள். இது தான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி'' என்றார்.

இதைக்கேட்ட பணக்காரர் திருதிருவென விழித்து ''நான் எப்படிச் சாகும் போது இந்த ஊசியை எடுத்துக்கொண்டு இன்னோர் உலகுக்கு வரமுடியும் '' என்று கேட்டார். அதற்கு குருநானக், ''ஊசி போன்ற ஒரு சிறிய பொருளைக் கூட நாம் இவ்வுலகை விட்டுப் போகும்போது எடுத்துக் கொண்டு போகமுடியாது என்னும் போது உங்களது செல்வங்களை எல்லாம் எப்படி அங்கே எடுத்துவரப் போகிறீர்கள்?''என்று கேட்டார்.

இதைக் கேட்ட அந்த பணக்காரர் யோசிக்க ஆரம்பித்தார்.


அப்போது குருநானக், ''இதோ பாருங்கள். ... நாம் செய்யும் நல்லது கெட்டது தான் கடைசி வரையில் நம்முடன் இருக்கும். மற்றவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக நம்மிடம் உள்ள பொருளைச் செலவழிக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லையெனில், நாம் மனிதப்பிறவி எடுத்தும் பயனில்லை. நம்மிடம் பணமிருந்தும் பயனில்லை.''

உடனே அவர் குருநானக்கை வணங்கி, ஐயா, என்னிடமிருந்த ஆணவம் இப்போது அகன்றுவிட்டது. இனிமேல் என்னிடம் இருக்கும் செல்வத்தை நல்லவழியிலேயே செலவழிப்பேன்'' என்றார்.

நம்மிடம் இருக்கும் பணம் எப்போதும் நம்மிடம் கூடவே வந்து கொண்டிருக்காது. இப்படிச் சொல்வதால், 'நாம் பணம் சம்பாதிக்க முயற்சி செய்யக்கூடாது ' என்று யாரும் தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது


முறையான வழியில் பணம் சம்பாதிக்கத்தான் வேண்டும். அதை முறையான வழிகளில் செலவு செய்யவும் வேண்டும். அதனால் ஒரு பெரிய மனநிறைவு கிடைக்கும். அந்த மனநிறைவை அனுபவித்தவர்களுக்கே அதன் பெருமை தெரியும்.

சொர்க்கத்திற்குப் போகிறவர்களுக்கு அதன் பெருமை தெரியும். அங்கு பணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் நம்மிடமுள்ள செல்வத்தை இங்கு மற்றவர்களுக்குப் பயன்படும்படி செய்து, அதனால் கிடைக்கக்கூடிய புண்ணியத்தை அங்கு எடுத்துக்கொண்டு போக முடியும்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தீவகத்தை ஆட்சி செய்த அல்லைப்பிட்டி அல்லிராணி



லக்ஸ்மன்

தீவுப்பகுதிகள் ஒருகால கட்டத்தில் மன்னர் ஆட்சியின் கீழ் இருந்துள்ளதற்கான வரலாறுகள் பேசப்படுகின்றன. தீவுப் பகுதியைச் சேர்ந்த அல்லைப்பிட்டியும், அதற்குள் அடங்குவதாகவும் அல்லிராணி ஆட்சி செய்த பகுதி அது என்றும் அல்லைப்பிட்டி மக்கள் உறுதியாக நம்புகின்றனர். எனினும் அல்லிராணியின் காலம் எது என்பது குறித்து அவர்களால் தெளிவாகக் கூற முடியாமல் உள்ளது.

1565 இல் போர்த்துக்கேயர் தீவகத்தின் அல்லைப்பிட்டி கிழக்குக் கடற்கரையோரத்தில் வந்திறங்கினர். அப்போது குறுநில அரசாக விளங்கிய தீவகத்தை அல்லி என்பவள் ஆட்சி செய்து வந்தாள். அவளது இயற்பெயர் தீவகசீலி என்று தனது தந்தையார் எழுதியிருந்த குறிப்பில் உள்ளதாக கவிஞர் பாலசிங்கம் தெரிவித்தார். தேவதத்தன் திரிசூளாயினி ஆகியோரின் மகள் அல்லிராணி எனவும் இவளது படைத்தளபதியாக பரசித்தனும் ஆஸ்தான ஆலோசகராக பிரம்ம கோட்டனும் இருந்தனர் என்றும் சொல்லப்பட்டது.

அல்லைப்பிட்டியில் அல்லிராணி ஆட்சியின் ஆதாரங்களாக கிழக்குக் கடற்கரையை அண்டிய பகுதியில் மிகவும் சிதைந்த நிலையில் உள்ள கட்டடங்கள் உள்ளன. இது அல்லிராணியின் கோட்டை என்று சொல்லப்பட்டு வந்தது. எனினும் சிலர் இந்தக் கோட்டையை இடிந்த மாதா கோயில் எனக் கூறுகின்றனர். தற்போது ஐயனார் கோயில் என அழைக்கப்படுவது அல்லிராணியின் குல தெய்வமாக விளங்கிய முனுக்காளி என முன்னர் அழைக்கப்பட்டதாகும். அவரது காலத்தில் வணிகக் கப்பல்களின் வரத்து இருந்ததாகவும் கிழக்குக் கடல் பகுதியில் இதற்கென வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

> போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் மீது போர் தொடுத்த சமயம் மண்டைதீவைச் சுற்றி வந்த சங்கிலியன் அல்லைப்பிட்டியில் ஒரு துறை அமைத்து போர் நடவடிக்கைகளைக் கவனித்த இடம் சங்கிலித்துறை இன்று சம்பில் துறை என்று மாறியுள்ளது.

அரசியாருடன் வர்த்தகத் தொடர்புகளை பேணிய யாழ். நகரைச் சேர்ந்த பண்டமாற்று வணிகர், அவரது நல்லாட்சியைக் கண்ணுற்று அல்லைப்பிட்டியிலேயே தங்கிக் கொண்டதாகவும் அவனை மக்கள் ஆதவ கோலன் என்று அழைத்ததாகவும் தெரிகின்றது. அரசியிடம் கால்நடைகள், குதிரைகளைப் பராமரிக்கும் ஊழியனாகப் பணியாற்றியவன் மண்டல கேசன் என்பவராகும்.

அல்லிராணி இருந்த பகுதி இன்றும் மாளிகைக்காடு என்றே அழைக்கப்படுகின்றது. இங்கே மலைப்பிரதேசம் போன்று நிறைந்த மணல் குவியல்கள் இருந்ததாலும் அல்லிராணியின் ஆதிக்கம் இருந்ததாலும் அல்லிப்பிட்டி என்ற பெயர் ஊருக்கு இருந்ததாகவும் பின்னாளில் அல்லிப்பிட்டி அல்லைப்பிட்டியாக மருவிக் கொண்டதாகவும் சொல்லப்படுகின்றது.

ஊரின் வடபகுதியில் நன்நீரூற்றுக்கள் கூடுதலாகக் காணப்பட்டதால் தனது மகனான மங்கிளியையும் மற்றொரு மகனான தரதனையும் அனுப்பி மிருகங்களை வேட்டையாடவும் நீராடவும் வேட மரங்கள் நிறைந்த இடத்தில் வந்தமரும் பறவைகளை வேட்டையாடவும் வசதியாக பறவைகள் சரணாலயமாகத் திகழ்ந்த பகுதியில் வேடன் குளத்தை அமைத்தாள்.

எனினும் ஊரின் வடமேற்கு மூலையில் இருந்ததாகச் சொல்லப்படும் இந்தக் குளத்தின் சுவடே இன்று இல்லாமல் போய்விட்டது. இது தவிர குருந்துக் குளமும் அல்லிராணியால் வெட்டப்பட்டது. வயல்கள் உருவாக்கம் பெற்றதில் குளம் தூர்ந்து விட்டது. எனினும் 1968 இல் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகம் இந்தப் பகுதியிலேயே கட்டப்பட்டது. போர் காரணமாக நீச்சல் தடாகமும் இப்போது இல்லை.

அல்லிராணி தனது காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக குளங்களை அமைத்திருந்தாள். கொக்குபதிகுளம், சின்ன கொக்களச்சி குளம் இரண்டையும் இணைப்பதற்கு வாய்க்கால் ஒன்றும் அமைத்திருந்தாள். இந்த வாய்க்கால் குதிரை முறிந்த வாய்க்கால் எனப்படுகின்றது. குதிரை ஒன்று இந்த வாய்க்காலில் இடறி விழுந்து கால் முறிந்ததாக ஊரில் சொல்லப்படுகின்றது. அல்லிராணி குளித்து ஓய்வு கொள்ளும் கட்டடம் ஒன்று சிதைந்த நிலையில் வேலணையில் உள்ளதாகவும் சிலர் தெரிவித்தனர். நெடுந்தீவு பிலிப் நேரியர் தேவாலயத்திற்கு முன்பாக உள்ள தாமரைக்குளம் அல்லிராணி நீராடுவதற்காகக் கட்டப்பட்ட மருது குளம் எனவும் சொல்லப்படுகின்றது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் மீது போர் தொடுத்த சமயம் மண்டைதீவைச் சுற்றி வந்த சங்கிலியன் அல்லைப்பிட்டியில் ஒரு துறை அமைத்து போர் நடவடிக்கைகளைக் கவனித்த இடம் சங்கிலித்துறை இன்று சம்பில் துறை என்று மாறியுள்ளது.

அல்லைப்பிட்டியில் அல்லிராணி நல்லாட்சி செய்தாள் என்ற நம்பிக்கை பலரிடத்திலும் காணப்படுகின்றது. எனினும் அவரது ஆட்சியின் முடிவு எவ்வாறு அமைந்தது என்பதற்கான விவரங்கள் எதுவும் அங்குள்ளவர்களுக்கே சரியாகத் தெரிந்திருக்கவில்லை. எனினும் பிற்பட்ட ஆட்சியின் அழுத்தங்களால் அரசி இடம்மாறிச் சென்றிருக்கலாம். மன்னார் மாவட்டத்தின் முசரி, முத்தரிப்பு, கிளிநொச்சி மாவட்டத்தின் மண்டைக்கல்லாறு என்ற பகுதிகளில் அவர் மறைந்திருக்கலாம் மன்னாரிலும் அல்லிராணி கோட்டை அமைந்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. அரசியாரின் இறுதிக்காலம் குறித்த விவரங்களை மக்கள் அறிந்திருக்கவில்லை. எனினும் அல்லைப்பிட்டி அல்லிராணியின் முக்கிய அரச பீடமாக இருந்தது என்ற நம்பிக்கை அல்லைப்பிட்டி மக்களிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் போராட்டத்தில் மைல்கல் கிழக்குத் தேர்தல்

## நிரந்தர தீர்வுக்கு வழிவகுக்கும் என்கிறார் கூட்டமைப்பின் வேட்பாளர்

அம்பாறை, செப்.6

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் எமது உரிமைப் போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகும். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழ் மக்கள் இந்த நாட்டில் நிரந்தரத் தீர்வு ஒன்றை நோக்கி நகர்வதற்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வழிவகுக்கும்.

எனவே தமிழ் மக்களின ஒட்டுமொத்த வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் செலஸ்ரீன் ஹென்றி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். ஆனாலும் இன்று எத்தனை பேரழிவுகள், துன்பதுயரங்களுக்கு மத்தி யிலும் எம் இலக்கு நோக்கிய பயணம் சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரின்போது உயிரிழந்த நம் உறவுகளின் உயிர்த்தியாகங்கள், நம் மக்கள் அடைந்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அவலங்கள், துன்ப துயரங்கள் சர்வதேசத்தின் பார்வையை நம்பக்கம் திருப்பியுள்ளது.

### நல்ல சூழல்

இத்தகைய சர்வதேச சமூகத்தின் அக்கறை தமிழினத்தின் மீது மலர்ச்சி பெற்றுள்ள இந்த வேளையில் நம்முன் திணிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழ் மக்களுக்கு இங்கு எந்தப் பிரச்சினையுமில்லை, சிறுபான்மை சமூகங்கள் எம்முடனேயே உள்ளது எனக் காட்டி அரசு தனக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் குறைக்கவும், சர்வதேசத் தலையீட்டை மழுங்கடிக்கவும் நோக்காகக் கொண்டே இந்தத் தேர்தலை முன்கூட்டியே நடத்துகின்றது.

### சூழ்ச்சித் திட்டத்துக்கு துணைபோகும் தமிழர்

இந்தச் சூழ்ச்சிகரத் திட்டத்துக்கு துணை போகவும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து அரசுக்கு வாய்ப்பளிக்கவும் தமிழன் என்று சொல்லும் நம்மவர்களே களமிறங்கி செயற்படுவது வேதனைக்குரியாகும்.

இவர்களது நப்பாசை ஒரு போதும் நிறைவேறாது. தமிழ்த்தேசியத்தின் மீதான தமது அசைக்க முடியாத பற்றுறுதியை நடைபெற்று வந்த ஒவ்வொரு தேர்தலிலும் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது ஜனநாயக உரிமையான வாக்களிப்பு மூலம் நிரூபித்தே வந்துள்ளனர்.- என்றார். (ச-30)

## நேர்மையான அரசியல்வாதிகளை அடையாளம் கண்டு வாக்களியுங்கள்

### தே.கா. வேட்பாளர் கூறுகிறார்

அம்பாறை,செப்.6

மக்கள் தமது தேவைகளை, சேவைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நாணயமிக்கவர்களிடம் அரசியல் அதிகாரங்களை ஒப்படைக்க வேண்டும் என்று ஐ.ம.சு. முன்னணியில் போட்டியிடும் அம்பாறை மாவட்டத்தில் தேசிய காங்கிரஸின் வேட்பாளர் ஆரிப் சம்சுதீன் தெரிவித்துள்ளார்.

மருதமுனையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் கலாசாரம் இப்போது மாறிக்கொண்டு போகின்றது.

மோசடிக்காரர்களிடம் நாம் எமது அரசியல் அதிகாரங்களை ஒப்படைத்ததால் இன்று பல துன்பங்களை அனுபவித்து வருகிறோம். அபிவிருத்தியில் பின் நிற்கிறோம். உரிமைகளை இழந்து நிற்கின்றோம். இந்த நிலைமை மாற வேண்டும். நேர்மையான அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக வேண்டும்.

படித்தவர்கள் இந்த விடயத்தில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். தமது வாக்குகளை நேர்மையற்றவர்களுக்கு அளித்து தமது தலைகளில் தாமாகவே மண்ணை அள்ளிப் போடக் கூடாது.

எமது மக்கள் பலதரப்பட்ட தேவைகளை வேண்டி நிற்கின்றனர். நேர்மையான அரசியல்வாதிகளினால் மாத்திரமே எமது மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். (ச)

## இறுதித் தீர்மானத்தை நிரூபித்துக் காட்டுங்கள்

### சப்ரகமுவ தமிழரிடம் வேண்டுகோள்


இரத்தினபுரி, செப்.6

அனைத்து வாக்காளர்களும் எடுத்துள்ள இறுதித் தீர்மானம் என்ன என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுங்கள் என்று இ.தொ.கா. வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

சப்ரகமுவ மாகாண தேர்தல் குறித்து இ. தொ.கா. விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இ.தொ.கா. தலைமையில் மலையகத்தின் பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து சப்ரகமுவவில் களம் அமைத்து போட்டியிடும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். எனவே சப்ரகமுவ மாகாண மக்கள் இந்த இறுதி வரலாற்றுப் பயணத்தைப் பல சவால்களுக்கு மத்தியில் முகம்கொடுத்தும் கடந்தும் வந்திருக்கிறார்கள். இவையாவற்றையும், சிந்தித்து நாளை மறுதினம் 8 ஆம் திகதி உறுதியான பதிலைத் தாருங்கள்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)



கிழக்கு மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இளைஞர்களின் நாளைய அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரசார நடவடிக்கைகளுக்காக சென்றுள்ளார்.

## மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட ஏழு பேர் கைது

நோர்வூட்,செப்.6

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போட்றி தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கம் அகழும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் ஏழு பேரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றைத் தொடர்ந்து ஹற்றன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவவின் ஆலோசனைக்கேற்ப நேற்று புதன்கிழமை நோர்வூட் போட்றி தோட்டத்துக்குச் சென்ற பொலிஸ் குழுவினர் சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

இந்த நபர்கள் மாணிக்கம் அகழ்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கிழக்குத் தேர்தல் முடிந்த கையோடு முப்படைகளினதும் கூட்டுப் பயிற்சி

### தொப்பிகலவில் 2,200 அதிகாரிகள் ஈடுபடுவர்

வாகரை,செப்.6

கிழக்குத் தேர்தல்கள் முடிந்த கையோடு தொப்பிகலை பிரதேசத்தில் முப்படைகளின் கூட்டுப் பயிற்சி இடம்பெறுகிறது. எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையில் இந்தப் பயிற்சி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக இலங்கையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டுப் பயிற்சிகளில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளைச் சேர்ந்த 2200 முப்படை அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று இராணுவத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்தார்.

இலங்கையில் இந்த முறை நடைபெறவுள்ள முப்படைகளின் கூட்டுப் பயிற்சி தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் முப்படையினருக்கு மேலதிகமாக பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்த எட்டுப் பேர் கொண்ட இராணுவக் குழுக்களும் இந்த கூட்டுப் பயிற்சிகளில் கலந்துகொள்ளவுள்ளதுடன், இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, ஜப்பான், ஈரான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் தூதரகங்களின் இலங்கைக்கான பாதுகாப்பு இணைப்பு அதிகாரிகள் மேற்பார்வையாளர்களாகக் கலந்துகொள்வர் என்றும் அவர் கூறினார். (ச)

## மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமரக் காத்திருக்கிறோம்

### பிள்ளையானின் நம்பிக்கை



கிழக்கு மாகாண சபையை மீண்டும் ஆட்சி செய்யவும் அதன் ஊடாக மக்களுக்கு அபிவிருத்திகளை மேற்கொள்ளவுமே நான் தேர்தலில் போட்டியிடுகின்றேன்

மட்டக்களப்பு,செப்.6

மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். தமிழ் மக்களுக்கு இன்று பயன் தரக் கூடியதாக இருப்பது கிழக்கு மாகாண சபைதான் என்று கிழக்கு மாகாணசபை தேர்தலில் ஐ.ம.சு.முன்னணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

துறைநீலாவணையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு ஐ.ம.சு. முன்னணியில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உணர்ச்சிவசப்படுத்தும் பேச்சுகளால், மக்களை ஏமாற்றி வாக்குகளை கபளீகரம் செய்யும் கூட்டங்களை தேர்தலில் ஓரங்கட்ட வேண்டும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கடந்த காலங்களில் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்தோம். இதைச் செய்ய மற்றவர்களால் முடியாது. எங்களால் மாத்திரமே முடிந்தது. இதற்கான பலத்தை கடவுள் தந்திருக்கின்றார்.

கிழக்கு மாகாணசபை ஆட்சிப் பீடத்தில் மீண்டும் அமரவும், அதனூடாக அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம். - என்றார். (ச)

## வடக்கு, கிழக்கு தமிழரின் சொந்த மண் இணைந்த தாயகமே எங்களின் தாகம்

### வெருகலில் ரதன் முழக்கம்

திருகோணமலை,செப்.6

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே எமது பூர்வீக தேசம். இது எங்களின் சொந்த மண் என்ற நிலையில் நாம் மேற்கொண்ட போராட்டங்களின் விளைவாக சர்வதேசம் வரைக்கும் எமது போராட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே எங்களின் நீண்டகால தாகம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவரும், வவுனியா நகரசபை பதில் தலைவருமாகிய எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதரித்து வெருகல் பகுதியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் தாகம் வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே என்பதற்கிணங்க கடந்த 60 வருடங்களுக்கு மேலாகத் தமிழினம் ஒவ்வொரு போராட்ட வடிவங்களையும் தங்கள் லட்சியமாக, அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது.

தமிழர்களை அடக்கி, ஒடுக்கி முகவரியை இல்லாமல் செய்யலாம் என்று நினைத்த பேரினவாதிகளுக்கு எமது படையணிகள் சாத்வீக ரீதியிலும், ஆயுத ரீதியிலும், இராஜதந்திர ரீதியானநகர்விலும் எமது போராட்டத்தை நகர்த்தியுள்ளன.

எனவே, இவ்வாறான சூழ்நிலையில் கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காகத் தங்களின் பொன்னான வாக்குகளைத் தமிழர் உரிமையின் சின்னமான வீட்டுச் சின்னத்திற்கு அளித்து எமது வேட்பாளர்களை வெற்றியடையச் செய்ய உறுதி பூணவேண்டும் - என்றார். (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் சந்திக்க விரும்பியவர் உங்களைத் தேடி வருவார். தொழில் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். கூடுதல் சொத்து சேர்க்கை கிடைக்கும்.

**இடபம்:** பிறரது தவறான விமர்சனத்தால், கவலை கொள்வீர்கள். தவிர்க்க இயலாத பணச்செலவு ஏற்படலாம். உடல் நலம் சீர் பெற, மருத்துவ சிகிச்சை உதவும். உறவினரின் ஆலோசனை நல்வழி நடத்தும். நீதி, நேர்மை நிறைந்த காரியம் செய்து, நன்மை பெறுவீர்கள்.

**மிதுனம்:** மனச்சாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். புதிய செயல்கள் வெற்றிகரமாக நிறைவேறும். தொழில் வளர்ச்சி இலக்கு திருப்திகரமாகும். கூடுதல் பணவரவை முக்கிய தேவைக்காக சேமிப்பீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**கடகம்:** திறமையுடன் செயற்பட்டு பணியை எளிதாக்குவீர்கள். தொழிலில், வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் இருக்கும். உபரி பணவருமானம் கிடைக்கும். உறவினர்களால் உதவி, பதவி உயர்வு, சொத்து சேர்க்கை உண்டாகும். அரசு தொடர்பான அனுகூலம் பெறுவீர்கள்.

**சிங்கம்:** புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். முடியுமோ முடியாதோ என்று நினைத்த வேலை ஒன்று சுமுகமாக முடிவடைவதால், மகிழ்ச்சி அடைவீர்கள். சிலர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். உடன்பிறப்புகள் விவகாரங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

**கன்னி:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை கேட்டுச் செயற்படுவது நல்லது. தொழிலில் மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். செலவுகளுக்கான பணத் தேவை அதிகரிக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களில் பிரவேசிக்கக் கூடாது. உறவினரிடம், பேச நினைத்த விடயம் மறந்து போகலாம்.

**நாளை**

ஆவணி - 22 வெள்ளிக்கிழமை 07.09.2012
திதி:ஸப்தமி பி.இ. 04.38 வரை
நட்சத்திரம்: கார்த்திகை சித்தம் மா. 06.12 வரை
சுபநேரம்: 06.04- 07.34 வரை
ராகு காலம்: 10.34- 12.04 வரை

**துலாம்:** எதிர்பார்த்த காரியம் வெற்றிச் செய்தி தரும். அன்றாடப் பணியில் ஆர்வம் கொள்வீர்கள். உபரி பணவரவில் குடும்பத் தேவை நிறைவேறும். இயன்ற அளவில் தானதர்மம் செய்து மகிழ்வீர்கள். பணியாளர்களுக்கு, உயர் அதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** கடந்தகால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். உங்கள் திறமையைப் பிறர் பாராட்டுவர். அதிக பணவரவால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கூடுதல் சொத்து சேர்க்கை உண்டாகும். நிர்வாகப்பணியில் உள்ளவர்கள் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவர்.

**தனுசு:** கவனக் குறைவாக செயல்புரிந்து, மனம் வருந்தும் நிலை ஏற்படலாம். தொழில் நடைமுறையை பிறரிடம் சொல்லக்கூடாது. பணவரவு எதிர்ப்பார்த்ததைவிட குறைவாக கிடைக்கும். நண்பர் வாங்கும் பொருளுக்காக, நீங்கள் பேரம் பேசுவது அதிருப்தியை உருவாக்கலாம். அலைச்சல் பயணம் தவிர்ப்பதால், உடல் நலம் சீராகும்.

**மகரம்:** பிறரது நிர்ப்பந்தத்தால் சம்மந்தம் இல்லாத பணிகளைச் செய்ய நேரிடலாம். உடல் நலக் குறைவு மனதை சங்கடப்படுத்தும். தொழில் பணி நிறைவேற தாமதமாகும். வாகனப் பராமரிப்பு பயணமுறையை எளிதாக்கும்.

**கும்பம்:** தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். சுற்றுப்புற சூழ்நிலை உதவிகரமாக இருக்கும். தொழில் வளம் சிறக்க, கூடுதல் மூலதனம் செய்வீர்கள். சராசரி பண வரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். மனதில் மகிழ்ச்சியும், நிம்மதியான நித்திரையும் கிடைக்கும்.

**மீனம்:** தொழில் வளர்ச்சி பெற சுறுசுறுப்புடன் செயற்பட வேண்டும். பணவரவை விட செலவு கூடும். நீங்கள் பெற வேண்டிய கௌரவம் மற்றவருக்கு போவதால், மனம் வருந்த நேரிடலாம். தாய்வழி உறவினர், இயன்ற அளவில் உதவுவார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | | 2 | | | |
| 7 | 8 | | 5 | 4 | | | 2 | |
| 3 | | | 9 | 6 | 8 | | 1 | |
| | 4 | | 6 | 7 | | | 3 | |
| | 5 | 2 | | | | 1 | 6 | |
| | | | | 1 | 5 | | 4 | |
| | 1 | | 8 | 9 | 3 | | | 6 |
| | 9 | | | 2 | 7 | | 8 | 1 |
| | | | 1 | | | 9 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 7 | 5 | 2 | 1 | 4 | 3 | 6 |
| 3 | 2 | 4 | 7 | 8 | 6 | 5 | 9 | 1 |
| 6 | 5 | 1 | 4 | 3 | 9 | 2 | 8 | 7 |
| 9 | 3 | 6 | 8 | 4 | 7 | 1 | 2 | 5 |
| 7 | 1 | 5 | 3 | 9 | 2 | 6 | 4 | 8 |
| 4 | 8 | 2 | 6 | 1 | 5 | 3 | 7 | 9 |
| 5 | 4 | 3 | 9 | 6 | 8 | 7 | 1 | 2 |
| 1 | 7 | 9 | 2 | 5 | 4 | 8 | 6 | 3 |
| 2 | 6 | 8 | 1 | 7 | 3 | 9 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி சுந்தரலிங்கம் இராசலட்சுமி



தோற்றம்
16.08.1949

மறைவு
19.08.2011

திதி:- அபரபக்க ஷஷ்டி



எமது வாழ்விற்கும்
வளர்ச்சிக்கும்
வழிகாட்டிய
எங்கள் பாசமிகு
அம்மாவின்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்

இல.05, இந்துமகளிர் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

க.நாகமுத்து அன் சன்ஸ், 183, பசார் வீதி, வவுனியா.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னல் தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு,செப்.6

தங்காலை, மாவெல்ல வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டு சகோதரர்களை மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றையவர் அதிர்ச்சிக்குள்ளான நிலையில் தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களான இவர்களிருவரில் மூத்த சகோதரரான எல்.வை. மதுசங்க (15 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



146ஆவது பொலிஸ் தின தேசிய நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

## அனுமதிபெறாமல் 20 ஆடுகளை ஏற்றிச்சென்ற வாகனம் சிக்கியது

### சோதனையின்போது பத்தனைப் பொலிஸார் மடக்கினர்

கொழும்பு,செப்.6

கொட்டகலை பிரதேசத்திலிருந்து நாவலப்பிட்டிக்கு அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட 20 ஆடுகளைப்பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பத்தனைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்னைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு திம்புள்ள பாடசாலைக்கு அண்மையில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட பத்தனை பொலிஸார் வான் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 20 ஆடுகளையும் வானையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆடுகளை ஏற்றிச் சென்ற சந்தேகநபர்கள் இருவரையும் பத்தனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அனுமதி பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட ஆடுகளின் பெறுமதி 2 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட ஆடுகளையும் வானையும் தடுத்து வைத்துள்ள பத்தனை பொலிஸார் சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

### வடமேல் மாகாணத்தில் மதுபானம் தாராளம்

## 510 சுற்றி வளைப்புகள் ரூ. 60 லட்சம் வருமானம்

கொழும்பு,செப்.6

வடமேல் மாகாணத்தில் மதுபானக் கடைகள் சுற்றி வளைப்பின்போது, இந்த வருடத்தின் முதல் ஆறு மாதப் பகுதியில் 60 லட்சம் ரூபாஅபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் 510 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண கலால் திணைக்களப் பொது ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்தல், களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல், விற்பனை செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்காக அபராதம் அறவிடப்பட்டுள்ளது. அரச அனுமதிப்பத்திரமின்றி மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டின் கீழ் 47 பேரிடம் அபராதம் அறவிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தச் சுற்றிவளைப்புக்களின் போது 510 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 187 பேர் பெண்கள் என்று அவர் தெரிவித்தார். (ச)

## வைரத்தை விழுங்கிய சீன நபர் கைது



கொழும்பு, செப்.6

1.8 மில்லியன் ரூபா பெறுமதியான வைரத்தை விழுங்கிய சீன நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுவரும் சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த வைரத்தையே இவர் விழுங்கியுள்ளார்.

பார்வையாளர்களோடு சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்த இவர் திடீரென வைரத்தை எடுத்து விழுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கூடங்குளத்தால் ஆபத்தா? இந்தியாவுடன் பேச்சு நடக்கும்

### ஆலோசனை வழங்க ஜப்பான் நிபுணர் வருகை எச்சரிக்கைக் கோபுரத்தை நிர்மாணிக்கவும் முடிவு



கொழும்பு,செப்.6

கூடங்குளம் அணு உலை தொடர்பில் இலங்கை, இந்தியா அதிகாரிகளுக்கு இடையிலான உயர்மட்டப் பேச்சு அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகார சபை தலைவர் கலாநிதி ரஞ்சித் விஜேவர்தன தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த அணு உலையினால் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு உலையினால் நமது நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதனை தடுப்பது தொடர்பில் இரு தரப்பும் கூடி ஆராய உள்ளனர். இது தொடர்பில் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட உத்தேசித்துள்ளோம். அதன் பிரதிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இந்த அணு உலையினால் ஏதும் பாதிப்பு ஏற்படுமானால் அதற்கு இந்தியா வழங்க இருக்கும் ஒத்துழைப்பு தொடர்பாக இங்கு முக்கியமாக ஆராயப்படும்.

கூடங்குளம் அணு உலையினால் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுப்பதற்கான முன்னேற்பாடுகளை இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகிறோம். இது தொடர்பில் எமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜப்பான் புகுசிமா அணு உலை விடயத்தின் போது அதன் பாதிப்பை தடுக்க முக்கிய பங்காற்றிய நிபுணர் ஒருவர் இங்கு வந்துள்ளார். அவர் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

காலநிலைத் தன்மைக்கேற்பவே கூடங்குளம் அணு உலையினால் ஏற்படும் பாதிப்புக் குறித்து தெரிவிக்க முடியும். ஏற்கெனவே 5 முன்னெச்சரிக்கை கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு மேலும் 3 கோபுரங்கள் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கூடங்குளத்தினால் பாதிப்பு குறைவாக இருந்தாலும் சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார்.

கூடங்குளம் அணு உலை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் முழுமையான மின் உற்பத்தியை ஆரம்பிக்க உள்ளதாக இந்திய அணுசக்தி ஆணையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## இலங்கையர்கள் மீது தாக்குதல்; அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

### திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



தமிழகத்தின் தஞ்சாவூரில் இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்டமை கண்டிக்கத் தக்கது. இவ்வாறான தாக்குதல் சம்பவங்களுக்குத் தீர்வுகாண்பதற்கு மஹிந்த அரசு இராஜதந்திர ரீதியில் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறான நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதுதான் தற்போது பிரச்சினையாக இருக்கின்றது. மனக்கிலேசத்தை ஏற்படுத்தும் வகையில் அயல் நாடுகளுடன் இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது.

அயல் நாட்டுடன் முறையான இராஜதந்திர உறவை பேணுவதை தவிர்த்து ஏனைய பிரச்சினைகள் குறித்துதான் மஹிந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது.

முதலில் அரசின் கொள்கைகளை மாற்றிக் கொள்வதற்கும், சர்வதேசத்தினர் கருத்துக்குச் செவிமடுக்கும் குணத்தையும் அரசு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.- என்றார். (ச)

## இரத்தினபுரியில் இரு சிறுவர் கொலை

கொழும்பு,செப்.6

இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்கஸ்யாயா என்னும் பிரதேசத்தில் இரண்டு சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீட்டுக்குள் புகுந்த நபர்கள் தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

12 வயதுச் சிறுவன் ஒருவரும் 6 வயதுச் சிறுமியுமே இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். ஆறு வயது சிறுமி சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும், சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தான் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் காயமடைந்த பிள்ளைகளின் தாய் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ச)

## தமிழகத்தின் எதிர்ப்பு தராது விமோசனத்தை தமிழருக்கு

### மாறாக இந்திய வம்சாவளி தமிழர்களையே பாதிக்கும் என்கிறார் பிரபா கணேசன் எம்.பி.

கொழும்பு,செப்.6

தமிழ்நாட்டுக்குப் பயணம் செய்யும் இலங்கையருக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதலும் எதிர்ப்பும் ஒரு போதும் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு விமோசனத்தைப் பெற்றுத்தரப் போவதில்லை. மாறாக தென்னிலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு பாதகத்தையே ஏற்படுத்தும் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்கு இலங்கையிலுள்ள களநிலவரங்கள் சரியாகத் தெரிவதில்லை. தென்னிலங்கையில் சிங்களவர்களோடு இணைந்து வாழ்ந்து வரும் 16 லட்சம் இந்திய வம்சாவளி தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது கூட இவர்கள் தெரிந்திருக்கவில்லை.

இலங்கையிலுள்ள தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்குள்ள அக்கறையை நாம் பாராட்டுகின்றோம்; மதிக்கின்றோம். அதே சமயம் அவர்களது அதிகபட்சமான நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் வாழும் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

போர் காலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்த வடக்கு,கிழக்கு மக்களும் இன்று நிரந்தரமாக இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களின் இப்போக்கு காரணமாக பாதிக்கப்படுவது இலங்கை வாழ் அனைத்து தமிழ் மக்களேயாவார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்திய அரசின் அசமந்தப் போக்கு இலங்கை தமிழர்களுக்கு இந்தியா மீதுள்ள நம்பிக்கையை குறைவடைய வைத்துள்ளது - என்றார். (ச)

### அரசின் அழுத்தத்தையடுத்து

## வீரவன்ச கட்சியின் வேட்பாளர் ஒதுங்கினார்

கொழும்பு,செப்.6

ஆளும் ஐக்கிய முன்னணியின் அழுத்தங்களை அடுத்து திருகோணமலையில் தனித்து போட்டியிடும் அதன் பங்காளிக்கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர் ஒருவர் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

ஜெயந்த வீரசேகர என்பவரே போட்டியில் இருந்து விலகியுள்ளார். இவர், ஆளும் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக இருக்கும் விமல் வீரவன்சவின் கட்சியைச் சேர்ந்தவராவார்.

தேசிய சுதந்திர முன்னணி போட்டியிடுமானால் திருகோணமலையில் ஆளும் கட்சி தோல்வியைத் தழுவும் நிலை ஏற்பட்டுள்ளமையை அடுத்தே அவரை விலகுமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தாம் போட்டியில் இருந்து விலகவில்லை என்றும் தேர்தலுக்குப் பின்னர் அரசுக்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் ஜெயந்த வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12.02.1956



உதிர்வு
10.09.2009

சாவகச்சேரி கோயில் குடியிருப்பை பிறப்பிடமாகவும்,
சுதுமலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் பாலசுப்பிரமணியம் குகனேசன்

(பிரபல வர்த்தகர் - திருநெல்வேலி)


ஆண்டுகள் மூன்று மறைகின்றன நீங்கள் வானுறை தெய்வமாகி
ஆனாலும் உங்கள் அன்பு நினைவுகள் மட்டும்
எங்கள் மனதைவிட்டு அகலவில்லையே
அன்புடன் அறிவுரைகள் பல கூறி எமக்கெல்லாம்
வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நித்தமும்
உங்கள் நினைவுகள் நிழலென எங்களுடன் தொடர்ந்து வரும்
தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்

குடும்பத்தினர்,
ஜனா [பேரா மகன் - பிரான்ஸ்].

(ශ/3099) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன்கூடிய காலநிலை நிலவும்.

# இலங்கையர்கள் தாக்கப்பட்டது துரதிர்ஷ்டமானது

## கவலை தெரிவிக்கிறார் நாராயணசாமி

தமிழ்நாட்டில் இலங்கைப் பயணிகள் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் துரதிர்ஷ்ட வசமானது என்று இந்தியப் பிரதமர் அலுவலகத்துணை அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்துத் பி.பி.சிக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

சிலதமிழகக்கட்சிகள்இலங்கைப்பிரச்சினையை மையமாக வைத்தே அரசியல் நடத்துகின்றன. இது வருந்தத்தக்கது.

தமிழக அரசு, இலங்கையிலிருந்து சென்னைக்கு வந்த கால்பந்து அணியை வெளியேற்றி, அதன் தொடர்பாக ஓர் அதிகாரியை இடைநீக்கம் செய்ததும் வருந்தத்தக்க விடயம்தான்.

இலங்கையில் தமிழகத்தைச் சேர்ந்த பலர்தொழில் செய் கின்றார்கள், கொழும்பில் பல தமிழ்நாட்டுத் தமிழர்கள் வணிக நிறுவனங்களை நடத்து கின்றனர். இவர்களையெல்லாம், இலங்கை அரசு வெளியேற்ற முடிவு செய்தால் அதைத் தமிழக அரசு எப்படிப் பார்க்கும்.

அப்படியென்றால் தமிழக அரசை இந்திய அரசு ஏன் தட்டிக்கேட்கவில்லை என்று கேட்டதற்கு, 'இந்தப் பிரச்சினை ஏற்பட்டுஒரிரு நாள்கள்தான் ஆகின்றன. அரசின் மீது இருக்கின்ற பிரச்சினைகளுக்காக, சாதாரண பொதுமக்களைத் துன்புறுத்துவது சரியல்ல. இந்தப் பிரச்சினை தொடர்பாக, மத்திய அரசு பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்.



தமிழக அரசு இலங்கைப் பிரச்சினையில் நிறைவேற்றிய தீர்மானங்களை மத்திய அரசு கவனிக்காமல், கிடப்பில் போட்டதன் விளைவுதான் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதற்கு காரணமாக அமைகின்றது என்ற கருத்து குறித்து பதிலளித்த நாராயணசாமி, மத்திய அரசு இதுபோன்று குறுகிய கண்ணோட்டத்தோடு நடந்து கொள்ள முடியாது, இதே அ.தி.மு.க. அரசு, முன்பு, பிரபாகரன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டது. இப்போது தங்களது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருக்கின்றனர். தமிழகத்தில் நடக்கின்ற ஒரு சம்பவத்தால், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நட்பு பாதிக்கக்கூடாது என்றார்.

இலங்கையில் இருக்கும் தமிழர்களுக்கு உதவ பல நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது . இந்தியா போருக்குப் பின்னர், தமிழர்கள் மீண்டும் இயல்பு வாழ்க் கைக்குத் திரும்ப பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. சுமார் 2,500 கோடி ரூபா செலவில் வீடு கட்டும் திட்டத்தை இந்தியா நடைமுறைப் படுத்தி வருவதை அவர் சுட்டிக் காட்டினார். மேலும் இந்தியா தன்னுடனான இலங்கை அரசின் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகிறது - என்றார். (வ)

## ஜோர்தானில் இலங்கை பெண்மீது வன்புணர்வு இருவருக்குச் சிறை

ஜோர்தானில் இலங்கைப் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இரண்டு பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

இந்தப்பெண், 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார். இந்த நிலையில் குற்றம் சுமத்தப்பட்ட இருவருக்கும் 15- 20 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்றாமவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. (வ)

## மனது மாயத் தோற்றம்

ஒவ்வொருவரும் மனதை ஒரு மாயத்தோற்றம் என்று கருதவேண்டும். இது வெகு விரைவில் மாறிவிடும் தன்மை கொண்டது. காலத்துக்கேற்ப சூழ்நிலைக்கேற்ப பலவித மாற்றங்களைக் கொள்ளவல்லது. இது புலன்களை இச்சைப்படி செயற்படச்செய்யும் வல்லமை பெற்றது. இலாப நட்டங்களையும், சுகதுக்கங்களையும் இன்பதுன்பங்களையும் போற்றுதல்களையும் அனுபவிப்பது மனதேயன்றி ஆத்மாவல்ல. இவையெல்லாம் மனதின் கற்பனையே. இந்த மனதின் தத்துவத்தை நன்கு புரிந்து கொண்டுவிட்டால் 'ஆத்மா' வை உணர்வது எளிதாகும். எல்லாப் பொருள்களும் 'ஆத்மா எனும் அத்வைத' உணர்வு பெறவேண்டும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## வடமராட்சி கடற்பரப்பில் அதிகரிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள்

### உள்ளூர் மீனவர்களின் வலைகளும் நாசம்

வடமராட், செப். 6

வடமராட்சி கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாக வடமராட்சி கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்திருந்ததால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது.

எனினும் தற்போது மீண்டும் கடந்த ஆறு நாள்களாக வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இயந்திரப் படகுகள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதுடன், உள்ளூர் மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகளையும் இந்த இயந்திரப் படகுகள் அறுத்து நாசம் செய்துவிட்டுச் செல்வதாகவும் உள்ளூர் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது மீன்வளம் கடலில் அதிகரித்துள்ள நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழில் சமாசத் தலைவர் கே. அருள்தாஸ் தெரிவித்துள்ளார். (16-8)

## மரண அறிவித்தல்



### சின்னையா கந்தையா

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபரும்,கரைச்சி தெற்கு பலநோக்கு கூ.சங்க முன்னாள் வர்த்தக முகாமையாளரும் சமாதான நீதிவானும்)

பேராளை,பளையைப் பிறப்பிடமாகவும், திருநகர்,கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தையா நேற்று முன்தினம் (04.08.2012) கொழும்பில் காலமானார்.

அன்னார் திருமதி குலசேகரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சி.பொன்னையா, சி.வல்லிபுரம் மற்றும் திருமதி சி. சின்னம்மா, காலஞ்சென்ற சி.இராசம்மா மற்றும் திருமதி சி. தெய்வானை, திருமதி சி. அன்னலட்சுமி, திருமதி சபா.செல்லம்மா, திருமதி த.அன்னமுத்து, திருமதி க. பரமேஸ்வரி, காலஞ்சென்ற தி.செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. சிவகுமார் (பொறியியலாளர்-லண்டன்),க.கிரிதரன்(பொறியியலாளர்-சிங்கப்பூர்), திருமதி நி. கிரிஜா(சட்டத்தரணி-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சி.காஞ்சனா, திருமதி கி.ஜனப்பிரியா, நிமலதேவா ஆகியோரின் அன்பு மாமனாரும், சி.வருணன், சி.யுதிக்கா, கி.லக்ஸனா, தி.கரி, தி.யாதவ், ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2012) வியாழக்கிழமை அவரது இல.137, திருநகர், கிளிநொச்சி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை க்காக மு.ப. 10.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குலசேகரி கந்தையா(மனைவி),
க.சிவகுமார்(மகன்), க.கிரிதரன்(மகன்),
தி.கிரிஜா(மகள்).

இல.137,திருநகர்,
கிளிநொச்சி.

(19318)(5-6-7)

## அபராதம்

வடமராட்சி,செப்.6

பருத்தித்துறைப் பகுதியில் பொது இடத்தில் மது அருந்தி அட்டகாசம் விளைவித்தவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது.

மதுபோதையில் நின்ற ஒருவரை ரோந்து சென்ற பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். பொது இடத்தில் மது போதையில் நின்று பொதுமக்களுக்கு பங்கம் விளைவித்ததாக சிலர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. (வ-8)

## உரமானியப் பதிவு

மறவன்புலோ கமக்கார அமைப்பைச்சேர்ந்த நெற்செய்கையாளருக்கான உரமானியப் பதிவு நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மறவன்புலோ பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறுமென அமைப்பின் தலைவர் சி.இருளன் அறிவித்துள்ளார். (வ)

## மரண அறிவித்தல்



### திருமதி கிருஷ்ணராசா ரதிதேவி

இல.04, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணராசா ரதிதேவி 04.09.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மட்டக்களப்பு, பெரியகல்லாறைச் சேர்ந்த இளையதம்பி- கிருஷ்ணராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா-நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி- நாகரத்தினம் தம்பதியரின் அருமை மருமகளும், நிரு ஜன்(UK), சாருஜன்(2010 கலைப்பிரிவு, பழைய மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சஜிதன் (2014 கணிதப்பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி), ராஜா(மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், கிளிநொச்சி), ஸ்ரீதரன்(ஜேர்மனி), நகுலேசன்(நகுல்) ஆகி யோரின் அன்புச் சகோதரியும், தங்கேஸ்வரி, லிகிதராசா, சுந்தரலக்ஷ்மி, பொன்னுத் துரை, சுந்தரமூர்த்தி, பரமேஸ்வரி, சுசீலாதேவி(மலேசியா), கிருஸ்ணகுமாரி, ரத்தி னேஸ்வரி,சியாமளா, வினோதா ஆகியோரின் மைத்துனியும், அசோக்குமார், சர்மிளா, தர்சிகா, சரணியா, கோபிநாத், பாணுரேகா, அருண்ஜன், தரணியா, ஆதவன், அனுராகவன், பூங்குழலி, மலர்விழி, கெனுசன், அம்சா ஆகியோரின் மாமியாரும், ரூபன்,ரோகினி, சுஜனி, கபிலன் ஆகியோரின் சிறிய தாயாரும், அக்ஷயா, அபிநயா ஆகியோரின் பேர்த்தியும், கருணாகரன், ஆனந்தராசா, உதயகுமார் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், நடராசா-லீலாவதி தம்பதியரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.09.2012) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.04, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(22553)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஞ்ஞான ரீதியில் மனிதன் கூட ஒரு மிருகம் தான். மனிதனை வெட்டினால் கொலை. மிருகத்தை வெட்டினால் பலி. அரிவாளுக்கு ஒன்றும் தெரியாது. வைத்திருப்பவன் கை ஓங்கினால் வெட்டும். அதில் மனிதன் முந்துகின்றான். ஆறாம் அறிவால் அரையிதையமற்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றான். இது முற்றாக கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

# இந்து ஆலயங்களில் மிருகபலியிடல் வரமா? சாபமா?

கைகூப்பி வணங்க வேண்டிய வேளையில் சுவாமி வரும்போது கைப்பேசிப் பொத்தானில் தன் விரல் வைத்து ஏதோ வேடிக்கை போல் பார்த்துக் கொண்டிருக்கிறது இளைய சமுதாயம். நாகரிக மாற்றமென்ற இந்த வேடிக்கையான நாயுலக வாழ்க்கையிலும் கூட இன்றும் இந்த மிருகபலி என்கிற காட்டுமிராண்டித்தனமும், அதற்கு மூலமான மூட நம்பிக்கையும் உள்ள இடம் குறையவே இல்லை. மிருகபலியிடல், யாருக்காகப்பலி? ஏன் பலி? எதைப் பலி கொடுப்பது? போன்ற கேள்விகளுக்கு விடை கூற ஆயிரம் வாய் கொண்ட கூட்டத்தில், ஒரு வாய்கூட இல்லை, கேட்க நினைத்தலும் தைரியமில்லைஒரு வேளை கதைத்து விட்டாலும் சுவாமி குற்றமென்ற மற்றுமொரு மூட நம்பிக்கையில் மற்றைய வாய்களும் அவனை முடக்கி விடுகின்றன.





ஆனால் என்ன ஒரு கணம் அந்தப் பலியாகப் போகும் மிருகங்களுக்கு அந்த ஒருவன் தகப்பன் சாமியாகின்றான்.

சரியாக மழைக்காலம் பார்த்து ஆட்டை வெட்டுகின்றார்கள், வெட்டியதுடன் உதிரத்தோடு மழை வந்து விடுமா? காலநிலை மாற்றத்தால் மழை இனிதே பொழியும். ஆனால் அந்த ஆடு பிழைக்குமா? அதன் குட்டிகள் மழை நீரை குடிப்பது? தாயின் மடிக்கு மழைத்துளி சமமா? அப்போது கூட இவர்கள் திருந்தவில்லை "ஆத்தா திருப்தியடைந்துவிட்டாள்" சுருக்கமான பதில் ஆடு ஒரு குறி இப்படி எத்தனை மிருகங்கள்? அதைப் பலியிட்டு பின் தின்பதும் அதே மனிதன்தானே!

பலிகளை மேற்கொள்ளும் மூலம் அதனைப் பார்க்கும் சிறுகுழந்தை முதல் பெரியவர் வரைக்கும் கொடூரமான சிந்தனைகளும், இரக்கமற்ற எண்ணமும், இறைவன் மேல் வெறுப்பும் ஏற்படுவது இயல்பாகும். சிந்தனையற்ற செவிலித்தாய்க்கு இருக்கும் இந்தப் பாசம் கூட அந்த மிருகங்களை வளர்த்த எஜமானுக்கு இல்லை.

இதனால் விஞ்ஞான ரீதியில் கூட பல பிரச்சினைகள் ஏற்படும். இயற்கையான உணவுச் சங்கிலியை இவ்வாறுஇடையில் குழப்புவதன் மூலம் சூழல் சமனிலையை அறவே இழக்க நேரிடும். மூட நம்பிக்கைகள் இந்த தொழில் நுட்ப ஊடகங்களில் கூட இப்பொழுது புகுந்து விளையாடுகின்றன.

அடுத்த தலைமுறையை ஈன்றெடுக்கும் பெற்றோர்களாவது இவற்றைப் பற்றிய உண்மையான அறிவைப்பெறுவதுடன் மட்டும் நின்றுவிடாது, இந்து சமயத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும். விஞ்ஞான ரீதியில் அவன் கூட ஒரு மிருகம் தான் என்று மனிதனை வெட்டினால் கொலை. மிருகத்தை வெட்டினால் பலி. அரிவாளுக்கு ஒன்றும் தெரியாது வைத்திருப்பவன் கை ஓங்கினால் வெட்டும். அதில் மனிதன் முந்துகின்றான். ஆறாம் அறிவால் அரையிதையமற்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றான். இது முற்றாக கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். தமிழைக் காப்பாற்ற மட்டுமல்லாது இந்த இந்து சமயத்தையும் காப்பாற்ற போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியும் வரலாம்.

க.தமிழ்த்தாசன், 11 A, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

# பெண்ணுக்கேது ஆனந்தம்.....



காதலைக் கொடுத்து
களிப்படைய வைத்து
கருவைக் கொடுத்து
சுகம் சுமக்க வைத்து பின்
பெண்மை
கஷ்டத்தை கொடுக்கும்
கஷ்டத்தை சுமந்தால்
பிரிவை மட்டும்
ஏன் கொடுக்கின்றனர் ஆண்கள்
சுமக்க முடியாமல்
தவிக்கும்
பெண்ணுக்கேது ஆனந்தம்.......

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# தோழியே உனக்காக..

- நான் சொன்னதே சரி. செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்பொழுதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் இலகுவாகக் கையாளுங்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் தேவைப்பட்டால் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களையும் சகித்துத்தான் ஆக வேண்டும் என உணருங்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் புன்முறுவல் காட்டவும். அன்புச் சொற்களை சொல்லவும் தவறாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும். இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.

க. லக்ஸ்சனா, தெற்போலி. மத்தி, மிருசுவில்.

# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

இந்து ஆலயங்களில் மிருகபலியிடல் தொடர்பான உங்களது விமர்சனங்களை முன்வைக்கவும்



உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

# ஆண்டவா!



பொறுத்தார் பூமி ஆழ்வார்
பொங்கினார் காடாழ்வார் - நாம்
பொறுத்திருந்து பொறுத்திருந்து
கண்டதுதான் என்ன மிச்சம்
காணாமல் போனோர் பட்டியல்தான்
காலவரையறையின்றி
நீண்டு செல்கின்றது
கட்டிய கணவனைக் காணோம்
பெற்றவனைக் காணோம்
உற்றவனை மற்றவனைக் காணோம் - என
கண்ணீருடன் அங்கலாய்க்கும்
வேளையிலே - அவன்
மறியலில் இருக்கின்றான் என்ற செய்தி கேட்டு
சற்றே மனம் ஆறினாலும் -
சட்டென வரும் செய்திகள்
சவக்குழிக்குள் எமை உயிருடன்
புதைக்கின்றனவே!
காரணமின்றியே கைதாகிய எம்மவர்கள்
சிறைமுகாம் சித்திரவதைகளால்
சின்னாபின்னமாகிச் சீரழிவதை
யாம் யாரிடம் சொல்லி நோவோம்
ஐயகோ மானிடப்பிறப்பிது பாவமா? அன்றேல்
தமிழனாய்ப் பிறந்தது தான் பாவமா? இம்
மண்ணில் வாழ்ந்து அனுபவித்தவை போதும்
அணு அணுவாய் அனுபவிப்பதை விட - ஆண்டவா
அழித்துவிடு எம்மை அடியோடு! - அதையாவது
சரித்திரம் பெருமையுடன் பறைசாற்றட்டும்.

ஆன் அன்ரனிக்கேனோஸ்,
நாடக்கந்துறை, யாழ் தேசிய கல்வியற் கல்லூரி.

# வாழ்வுக்கு உகந்த வரிகள்...

★ மனம் விட்டுப் பேசுவது நன்று; மனதில் பட்டதெல்லாம் பேசுவது தவறு

★ காதலியைமனைவியாக்க துணிவு தேவை. மனைவியைக் காதலியாக்க கனிவு தேவை

★ கட்டுப்பாடில்லாமல் வாழ்கிறவன் கௌரவம் இல்லாமல் இறப்பான்

★ ஒரு நொடியில் செய்த தவறு வாழ்நாள் முழுவதும் கவலை தரும்.

சிவராசா விஜிதா
கைதடி தெற்கு.

# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிறிழுத்தல் இன்று

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்படும் கயிறு இழுத்தல் போட்டி இன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறும்.

சமாசத்தின் தலைவர் என். கணேஷ் தலைமையில் இந்தப் போட்டி யாழ். றக்கா வீதியில் உள்ள இளம்சிங்கம் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும். (த-17)


**சேவை நலன் பாராட்டும்**
**60 ஆவது அகவை வாழ்த்தும்**



*திரு பாலகிருஸ்ணர் இராஜசேகரன் SLTS - I*
**(ஆசிரிய ஆலோசகர் - கணிதம் - யாழ்.வலயம்)**

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் 12 வருடங்கள் ஆசிரியராகவும், 22 வருடங்கள் பண்டத்தரிப்பு கோட்டம், யாழ். வலயங்களில் ஆசிரிய ஆலோசகராகவும் கணித பாடத்துறைக்குச் சிறப்பாகப் பணியாற்றி, இன்று ஓய்வுபெறும் திரு.B. இராஜசேகரன் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சிறப்பாகவும், மகிழ்வாகவும் வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி, வாழ்த்துகின்றோம்.

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். (22565)(3.14)
ஆசிரிய ஆலோசக நண்பர்கள் ஆசிரிய ஆலோசகர் கழகம்.


# ஆஸி. நிதியில் ஐஸ்கட்டித் தொழிற்சாலை வடமராட்சி கிழக்கில் அமைகிறது

யாழ்ப்பாணம், செப். 6

ஆஸ்திரேலியா அரசின் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மீனவர் சங்கங்களின் சமாசத்திற்கென ஐஸ்கட்டி தொழிற்சாலை வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஆஸ்திரேலியா அரசின் 25 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் ஐ.ஓ.எம். நிறுவனம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மீனவ சங்கங்களின் நீண்டகால கோரிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த ஐஸ் கட்டி தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது.

மருதங்கேணி மீனவர் சங்கங்களின் கடற்பரப்பு எல்லையாக மணற்காடு முதல் சுண்டிக்குளம் வரையாக 54 கிலோ மீற்றர் தூரம் காணப்படுகிறது.

இதுவரைகாலமும் மீன்களைப் பாதுகாப்பதற்காக தென்னிலங்கையிலிருந்தே ஐஸ் கட்டிகள் கொண்டுவரப்பட்டன.

இதனால் பெருமளவான மீனவர்கள் சிரமத்தினை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

தற்போது ஆஸ்திரேலியா அரசின் நிதியுதவியுடன் ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஐஸ்கட்டி தொழிற்சாலையானது அந்தப் பகுதி மீனவர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடம் எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவடைந்து மீனவர்களின் பாவனைக்கு விடப்படும் எனத் தெரியவருகிறது. (16-13)

## மரண அறிவித்தல்



### *நல்லதம்பி மகாராசா*

ஏழாலை மேற்கு ஏழாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மகாராசா நேற்று (05.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-ஞானாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா- தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இலங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், மதனசூரியா (லண்டன்) எழில்மதனி (கொழும்பு) இமையகாந்தன் (கனடா) எழிலரசி (லண்டன்) காலஞ்சென்ற ஜீவகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலேந்திரன், ஜெயரூபன் ஆகியோரின் மாமனும் கரிகாலன், விகாஸ், பவர்னா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை. (22571)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்


யாழ்ப்பாணம்,செப்.6

வலி. கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சகல நிறுவனங்களையும் தவறாது சமூகமளிக்குமாறு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர். கிருஷ்ணராசன் கேட்டுள்ளார். (16)

## மரண அறிவித்தல்

### *சிதம்பரப்பிள்ளை நல்லதம்பி*



உசனைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நல்லதம்பி நேற்று 05.09.2012 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், விசாலட்சியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, சிவகுரு, கனகம்மா சின்னம்மா, திருப்பதி, சின்னதுரை ஆகியோரின் சகோதரனும், சுமதி, சுதன், சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாபரன், மேனகா, இராசேந்திரம் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2012) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்

தகவல்:
க.தயாபரன்
(மருமகன்) 4/3114(3.14)


**இன்னும் ஒரு விசேட கொடுப்பனவு!**

**நீங்கள் முற்பதிவு செய்து கொள்வனவு செய்யும் ஒவ்வொரு**

**பஜாஜ்**

**முச்சக்கர வண்டிக்கும்**



RE 205
விலை ரூ. 450,100/-
மேற்குறிப்பிடப்பட்ட விலை VAT உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.

**ரூ.15,000/- ம் பெறுமதியுள்ள**

**முழுமையான காப்புறுதி ஒப்பந்தம் இலவசம்!**

**முந்துங்கள்!**
**இக் கொடுப்பனவு 2012 செப்டம்பர் 01 முதல் 30 வரை முற்பதிவு செய்து கொள்வனவு செய்யும் முச்சக்கர வண்டிகளுக்கு மட்டுமே.**

மேலதிக பயன்கள் பலவற்றுடன் முழுமையான காப்புறுதி ஒப்பந்தம்

1. ரூ.250,000/- ம் படி சாரதி மற்றும் பயணிக்கும் மூவருக்கான அவசர விபத்து காப்பீடு
2. அவசர விபத்தினால் வைத்தியசாலைக்கு பிரவேசிப்பின் ஒருவருக்கு நாளுக்கு ரூ.2000/- ம் படி 07 நாட்களுக்கான காப்பீடு
3. மூன்றாம் தரப்பினரின் சொத்துக்களுக்கான சேதத்திற்கு ரூ.500,000/- ம் வரையிலான காப்பீடு

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

tradlanka

(c/2700) நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களஞ்சியக் காப்பாளர் தேவை

சுஜித் என்டபிறைசஸ் சாவகச்சேரி காரியாலயம் ஆண்கள் மட்டும். தமிழ், சிங்களம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- 021 227 0586

(சி/9363) (2-6-7)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அனுமதிகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com

(கச்சேரி வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)
(22546) (45-6) மேலதிக விவரங்களை நேரில் தொலைபேசியினூடாக பெறலாம்.

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

SEPT.'2012 TO FEB.'2013

*தமிழ் மொழி மூலம்*

- Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
- Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
- Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அநுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
(சி/2658) (2-6)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

## மரண அறிவித்தல்

### பாலசுப்ரமணியம் நாகராசா



காரைநகர், மாப்பான பூரியைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்ரமணியம் நாகராசா நேற்று முன்தினம் (04.09.2012) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்ரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வனும், கௌரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பரதாசன் - பத்மினி தம்பதி யரின் மருமகனும், கஸ்தூரி, கஜரூபன், கஜலக்ஷ்மி, கஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரதாசன் (இத்தாலி), ரவீந்திரதாசன் (தீயணைப்பு படை - யாழ். மாநகர சபை), மகேஸ்வரதாசன், ஈஸ்வரதாசன் (தீயணைப்பு படை - யாழ். மாநகர சபை), நடேஸ்வரதாசன் (கனடா), விஸ்னு தாசன் (கனடா), காலஞ்சென்ற கணேஸ்வரதாசன் மற்றும் சர்வேஸ்வரதாசன் (கொழும்பு), உதய குமாரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2012) வியாழன் முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

30, அரசடி வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
(22551)(45-6-7)

## கிருஷ்ண ஜெயந்தி

வடமராட்சி, செப்.6

அல்வாய் வடக்கு வியாபாரி மூலை அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலய கிருஷ்ண ஜெயந்திவிழா உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. நாளை மாலை 4 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே அடியார்கள் விழாவில் கலந்துகொண்டு அருள்பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (16-8)

## T V மலிவு விற்பனை

Sony (Japan) Flat 21"-13000/=, 29"-15000/=,
பைனியர் DTS அம்பிளிபயர் DVD (L.S)
National AFD (RX - 53) ரேடியோ - கசெற்,
Box வகைகள்
தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பளம்)
சோனி ரேற்ட்சென்றர் (கொமர்ஷல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.
(22543) (45-6-9)

## 6 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



மனம்மகிழ
12★09★2006

மனம் நெகிழ
05★12★2011

**செல்வி அக்ஷிகா சக்திதரன்**

ஆண்டு ஆயிரம் சென்றாலும் ஆறாது எம்துயர்
மீண்டு நீ இங்கு வந்து எமை மகிழ்விக்கும்வரை
கண்ணீர்த் துளிகளுடன்....

கி.வி.திட்டம்,
திருநெல்வேலி.

அம்மம்மா,தாத்தா.

(22547) (2-6-7)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01 * 05 * 1978

உதிர்வு
06 * 09 * 2006

அமரர்
**சிவராசா சிவசேகர்**

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ ஆறாகின
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்

(22544)(5-6-7)

66/8, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
சங்கர் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின்
பிரதமகுருக்கள் பூரண
சுதாகரக்குருக்களின்
அன்பு மைத்துனர்

**சண்முகபாலச்சந்திரசர்மா**

அவர்களின் மறைவை ஒட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

கோயிற்கடவை சித்திவிநாயகர்
ஆலய பரிபாலன சபையினரும்,
அடியார்களும்.

கோயிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

(சி/3103) (2-6-7)

## தேவை/ வேலை வாய்ப்பு

கல்வித்துறை சம்பந்தமான விற்பனையில் ஈடுபட்டு மாதம் ரூ.12000/= இற்கு மேல் உழைக்கக்கூடியதும் பல சலுகைகள் உள்ளடங்கியதுமான தொழிலில் ஈடுபட விரும்புவோர் இன்று (06.09.2012) காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நேரில் வரவும். வேலையற்ற இருபாலாருக்குமானது. பெண்கள் பெற்றோருடன் வரவும். தொடர்பு: 0770739904,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (22555) (2-6-7)
(ஜனசக்தி காப்புறுதிக்கு அருகில்)

## IELTS

A1 B1 B2

October/27th Exam in Jaffna Call: 0777302882

**Visit: http://edu.kugroup.info/ielts**

தனிப்பட்ட முறையில்.உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய.அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## நான்காம் ஆண்டு நினைவுகள்



தோற்றம்
15.02.1939

மறைவு
22.08.2008

**திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி**

திதி: ஸஷ்டி 06.09.2012

ஆண்டுகள் நான்கு ஆயினும், அம்மா
நினை நினைக்காத நாளில்லை
மீண்டுமொருமுறை பிறப்பினும்
நின்றன் பிள்ளைகளாய் வாழ
வேண்டுதல் பல செய்கின்றோம்
விழிநீர் சொரிந்துருகிப்
பேணுமுயர் ஆலடி ஐங்கரன் பதம்
பணிகின்றோம் நின் நற்கதிக்கே!

*"கௌரி கோட்டம்",*
*அல்வாய்.*

– குடும்பத்தினர்.

(22541)(2-6-7)

## 16 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
24.10.1972

உதிர்வு
06.09.1996

**செல்வன் இரத்தினம் ஜெயன்**

(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)

ஆசை முகம் காட்டி அன்பு மொழி பேசி
அனைவரையும் கவர்ந்தவனே
திட்டங்கள் தீட்டியே கல்வியில் கனவு
கண்டபோது பல்கலையில் கால் பதித்தாய்
சுடர்விட்டதே நோய் ஒன்று
சிட்டுக் குருவி சீக்கிரம் வருமென்று
சிந்தித்துப் பார்த்தோம்
உனைக் காண கொட்டமடித்த
எம் மனங்கள் குதூகலத்தை இழந்தது
கருணையுள்ள மிலாக் காலன் சதியென்று
நாம் நினைத்து விருப்பமில்லா
விடை பகர்கின்றோம் இது விதியென்று
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*"திரிபுர வாசா",*
*கைதடி மேற்கு, கைதடி.*

– குடும்பத்தினர்.

(22552) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் வாய்ப்பை தவறவிடின் பேரினவாதம் நம்மை விழுங்கிவிடும்

## வடக்கு,கிழக்கை ஆளும் தகுதி தமிழருக்கே என்கிறார் மாவை

வடக்கு, கிழக்கு என்பது தமிழ், முஸ்லிம் மக்களுடையதாயகம். இம்மண்ணிலே பெரும்பான்மையினங்களாக வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் என்ற இரு இனங்களுமே இதனை ஆள்வதற்கு உரித்துடையவர்கள். இந்த உரிமையைப் பேரினவாத மதவாதிகளுக்கு விட்டுக்கொடுக்க முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா.

கல்முனை நகரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இறுதித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு -

வடக்கு, கிழக்கை ஆள்வதற்கும் அதற்கு முதலமைச்சரை நியமிப்பதற்கும் உரித்துடையவர்கள் - தகுதியானவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களே ஆவர்.

இன்று தமிழ், முஸ்லிம் மக்களுடைய தாயக பூமியை பௌத்த தேசமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கிலே பௌத்த தலங்களையும், புத்தர் சிலைகளையும் விதைக்கிறார்கள். இந்தநிலை தொடர்வதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

எமது போராட்டம், எண்ணிக்கை குறைந்த தேசிய இனங்களின் ஒன்றுபட்ட போராட்டமாக மாறவேண்டும். தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றாக இணைவதற்கு இந்தத் தேர்தலில் நாம் வெற்றிபெறவேண்டும்.

எம்மைப் பிரித்தாள நினைக்கின்ற சிங்களப் பேரினவாதிகளுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் தங்கள் வாக்குப்பலத்தால் சாட்டையடி கொடுக்கவேண்டும். இச் சந்தர்ப்பத்தை நாம் தவற விடுவோமாக இருந்தால் பேரினவாதம் எம்மை இலகுவாக அழித்துவிடும்.

எமது தாயக மண்ணிலே இன்று இராணுவத்தினரதும், பௌத்த பிக்குகளினதும் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களையும், புத்தர் சிலைகளையும் நிறுவுகின்றனர்.

அரசின் அடாவடித்தனங்களுக்கு எதிராக ஒன்றுபட்ட இனமாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் கிளர்ந்தெழவேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தை நாம் தவற விடக்கூடாது.

வடக்கு, கிழக்கில் எவர் முதலமைச்சராக வரவேண்டுமென்பதை தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களுமே தீர்மானிக்கவேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அல்லர் என்பதை நிரூபிக்கின்ற தேர்தலாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலை தமிழ், முஸ்லிம் மக்கள் பயன்படுத்த வேண்டும் - என்றார் மாவை. (10 - 224 - 239)

# தமிழ்க் கைதிகள் உயிரிழப்பு குறித்து விசாரணைகளைத் துரிதப்படுத்துக

## அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்பு

கொழும்பு,செப் 6

சிறைச்சாலைகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து உயிரிழந்த தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காலி சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து உயிரிழந்த மரியதாஸ் டெல்ருக்ஷன் தொடர்பிலும் போகம் பரை சிறைச்சாலையில் உயிரிழந்த கைதி நிமல ரூபன் தொடர்பிலும் முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மரியதாஸ் டெல்ருக்ஷன், வவுனியா சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் கோமா நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பின்னர் உயிரிழந்தார். வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து அனுராதபுரம் சிறைச்சாலைக்குக் மாற்றப்பட்டதன் பின்னர் நிமலரூபன் உயிரிழந்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளைத் துரிதமாக்கி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் அதிகாரிகளைக் கோரியுள்ளார். (த)

# முல்லைத்தீவு ஆனந்தபுரத்தில் நாளை மறுதினம் மீள்குடியமர்வு

## மிதிவெடிகள் அகற்றப்பட்டதை அடுத்து

யாழ்ப்பாணம்,செப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆனந்தபுரம் பகுதியில் நாளை மறுதினம் சனிக்கிழமை மக்கள் மீளக்குடியமரவுள்ளனர் என்று முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் ஆனந்தபுரம் பகுதியில் மிதிவெடி அகற்றியமைக்கான சான்றிதழ் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அந்தப் பகுதியில் நாளை மறுதினம் சனிக்கிழமை மக்களை மீளக் குடியமர்த்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அரச அதிபர் நா.வேதநாயகன் கூறினார்.

போரின் பின்னர் இந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டமை காரணமாக மீளக் குடியமர்வு நடவடிக்கைகள் இழுபறி நிலையில் இருந்து வந்தது.

ஆனந்தபுரம் பகுதியில் வெடிக்காத நிலையில் ஆட்டிலறி ஷெல்கள் உட்படப் பல ஆயுதங்கள் காணப்பட்டன. எனவே அந்தப் பகுதியைத் துப்புரவு செய்வதற்கு நீண்ட காலம் எடுக்குமெனவும் இவற்றை அகற்றாமல் மக்களை மீளக்குடியமர்த்தினால் உயிரிழப்புகள் ஏற்படும் எனவும் அந்தப் பகுதியை முற்றாகத் துப்புரவு செய்த பின்னரே மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்படுமெனவும் வவுனியா மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் முன்னர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் ஆனந்தபுரத்தின் குறித்த ஆபத்தான பகுதியைச் சுற்றி மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகை நடப்பட்டு அந்தப் பகுதியைக் கம்பி வேலி மூலமாக அடைத்த பின்னர் எஞ்சிய பகுதிகளை விடுவிக்கத் தற்போது இணங்காணப்பட்டது.

இதனடிப்படையிலேயே மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் முல்லைத்தீவு அரச அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 104 குடும்பங்களைச் சேர்ந்த 394 பேர் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆனந்தபுரத்தில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (க-5)

# ஸ்கந்தபுரம் கிராமத்துக்கு ஏற்று நீர்ப்பாசனம்

அக்கராயன், செப்.6

ஸ்கந்தபுரம் கிராமத்துக்கு அக்கராயன் குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனம் மூலமாக நீர் வழங்கப்படுவதால் அந்தக் கிராமம் மிகுந்த செழிப்புடன் காணப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டுடன் செயலிழந்த ஏற்று நீர்ப்பாசனம் மீளக்குடியமர்வின் பின்னர் வாய்க்கால் புதிதாக அமைக்கப்பட்டு அக்கராயன் குளத்தின் இடது கரை வாய்க்கால் வழியாக ஸ்கந்தபுரம் கிராமத்துக்கு இடம்பெற்று வருகின்றது.

இதேபோன்று அக்கராயன் மத்திய பகுதிக்கும் ஏற்று நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனால் கிணறுகளின் நீர்மட்டம் உயர்வடைவதால் கெங்காதரன் குடியிருப்பு, இம்மாஸ் நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தமது நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

மேலும் அக்கராயன் மத்திய பகுதியிலுள்ள அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகிய இருபாடசாலைகளும் தமது குடிதண்ணீர்த் தேவையைத் தடையின்றிப் பூர்த்தி செய்ய முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுவதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். (சு-18)

# முக்கிய பாடங்களுக்கான செயலமர்வும் மும்மொழி நடைமுறை ஆரம்பிப்பு

வவுனியா, செப்.6

யுனிசெவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கில பாடங்களுக்கான தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஏ.எல்.பி. செயலமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று விஞ்ஞானபாடச் செயலமர்வும், நாளைய தினம் கணித பாடச் செயலமர்வும் 13 ஆம் திகதி தமிழ்ப் பாடச் செயலமர்வும், 14 ஆம் திகதி ஆங்கில பாடச் செயலமர்வும் வவுனியா தெற்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜ் அறிவித்துள்ளார்.

இதேவேளை-

ஜனாதிபதியின் துரித வேலைத்திட்டத்தின் கீழ் மும்மொழித் திட்ட நடைமுறை ஆரம்ப வைபவம் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இன்றும், நாளையும் இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (க-402)





கிளிநொச்சி நீதிமன்றத்திலிருந்து யாழ்ப்பாண நீதிமன்றுக்கு இடமாற்றலாகி வந்த நீதிவான் பொ.சிவகுமாருக்கு கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற பிரியாவிடை வைபவத்தின் போது நீதிமன்ற ஊழியர்களும், சட்டத்தரணிகளும் நினைவுப் பரிசில்கள் வழங்குகின்றனர். (க-6)

# அக்கராயன் – திருமுறிகண்டி வீதியில் மேம்பாலம் விரைவாக அமைக்கப்படுமா?

## உறுதிமொழி காற்றில் பறந்து விட்டதா என்கின்றனர் மக்கள்

அக்கராயன், செப்.6

அக்கராயன் - திருமுறிகண்டி வீதியில் மேம்பாலம் அமைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்ட உறுதிமொழிகள் காற்றில் பறந்து விட்டதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அக்கராயன் - திருமுறிகண்டி வீதியில் மேம்பாலமொன்று அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரை மேம்பாலம் அமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

இந்த மேம்பாலம் அமைக்கப்படும் போதுதான் அக்கராயன் குளத்திலிருந்து பாயும் வெள்ள நீர் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்து சேதங்கள் ஏற்படுத்தப்படுவது நிறுத்தப்படும். இதன் மூலமாக அக்கராயன் பிரதேசத்தின் கிழக்குப் பகுதிக்கும் மத்திய பகுதிக்குமான போக்குவரத்துக்கள் சீரான வகையில் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மழைகாலம் நெருங்கி வரும் நிலையில் [illegible] மக்கள் கவலையும் விசனமும் அடைந்துள்ளனர். (க-18)

# மன்னார் நகரப் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம்

மன்னார்,செப்.6

மன்னார் நகரப் பகுதியில் இரவு நேரங்களில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் வாராந்தச் சந்தைக் கட்டடத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மது விற்பனை நிலையத்தில் மதுவகைகளைக் கொள்வனவு செய்யும் மதுப்பிரியர்கள் அவற்றைச் சற்றுத் தொலைவிலுள்ள பாடசாலைக்கு முன்பாக உள்ள ஒழுங்கைகளில் வைத்து அருந்துகின்றனர்.

பின்னர் மதுபோதை தலைக்கேறிய நிலையில் தமது அட்டகாசத்தை ஆரம்பிக்கின்றனர்.

இவர்கள் இந்தப் பகுதியிலுள்ள தெரு விளக்குகளிலுள்ள மின் குமிழ்களையும் சேதப்படுத்தியுள்ளனர். வெளிச்சமில்லாத இருள் சூழ்ந்த பகுதியில் இந்த மதுப்பிரியர்கள் அட்டகாசத்தில் ஈடுபடுவதனால் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் இவர்கள் போதை தலைக்கேறிய நிலையில் தீயவார்த்தைகளை உரத்த குரலில் பிரயோகிப்பதுடன் தமக்குள் தாமே சண்டையிட்டுக் கொள்கின்றனர். மேலும் இந்த மது வெறியர்கள் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனஸ்ரீ வெற்றிக்கிண்ணம்

# இறுதியில் ஈகிள்ஸுக்கு இரையாகியது அம்மன்



வவுனியா, செப் 6

அமரர் தனஸ்ரீ ஞாபகார்த்தமாக வவுனியா கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கற்குளி ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் வவுனியா கோவிற்குளம் அம்மன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கற்குளி ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் 7:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

ஆட்டம் ஆரம்பமாகி 7ஆவது நிமிடத்தில் அம்மன் விளையாட்டுக்கழக வீரன் தனுஷாந் மத்தியபகுதியில் இருந்து தனக்குக் கிடைத்த பந்தை மிகவும் லாவகமாக கோல் கம்பத்தினுள் செலுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்றுக்கொடுத்தார். இதனால் ஆட்டத்தின் போக்கு சூடுபிடிக்கத் தொடங்கியது. தொடர்ந்தும்இரு அணியினரும் கோல்களைப் பெறுவதற்காக கடுமையாக மோதிக் கொண்டனர்.

அம்மன் அணியின் ஆட்டத்துக்கு பதிலடி கொடுப்பது போல, போட்டியின் 15 ஆவது நிமிடத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக வீரர் ரஞ்சித் குருஸ் மிகவும் அருமையாக கோல் ஒன்றை அடித்து ஆட்டத்தை சமப்படுத்தினார். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்படுவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் ஈகிள்ஸ் அணியின் தேவசங்கர், யுகரூபன் ஆகியோர் அடுத்தடுத்து கோல்களைப் பெற்றனர். இதனால் ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்படும்போது ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியபோது இரு அணி வீரர்களினதும் ஆட்டத்திலும் அனல் பறந்தது. இரு அணியினரும் கடுமையாக மோதிக்கொண்டபோதும் அம்மன் விளையாட்டுக் கழக வீரர் தனுஷாந்தும், சுயனும் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பெற்று ஆட்டத்தை சமநிலைப்படுத்தினர். எனினும் பிற்பாதி ஆட்டத்தில் அம்மன் விளையாட்டுக்கழகத்தின் போக்கில் தளர்வு காணப்பட்டது. இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களான றொபேட், யுகறூபன் ஆகியோர் தலா இரண்டு கோல்களைப் போட்டு தமது அணிக்கான வெற்றியை உறுதி செய்தனர். இறுதியில் 7:3 என்ற கோல் கணக்கில் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி தனஸ்ரீ ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

போட்டியில் வாகை சூடிய அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் எஸ். ஸ்கந்தன், வவுனியா பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ரி.கமலன், எஸ். குணா ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ங- 400)

# தேசிய மட்ட உதைபந்து களுத்துறையில்

வலி. வடக்கு, செப் 06

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 ,17, 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான தேசிய ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம், 16ஆம் ,17ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் களுத்துறை வித்தியாலய மைதானம் மற்றும் நகர சபை மைதானம் என்பவற்றில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வட மாகாணத்தின் சார்பில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, மன்னார் முருங்கன் மகாவித்தியாலயம் என்பன கலந்து கொள்ளவுள்ளன.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் களுத்துறை திசா வித்தியாலய மைதானம், களுத்துறை ஸ்ரீ குரச வித்தியாலய மைதானம் என்பவற்றில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வட மாகாணத்தின் சார்பில் யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் களுத்துறை நகரசபை மைதானம், பாண்டுநுவர கல்வியற்கல்லூரி மைதானம் என்பவற்றில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வட மாகாணத்தின் சார்பில் யாழ்ப்பாணம் சென் .பற்றிக்ஸ் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் களுத்துறை வேனன் பெர்ணான்டோ மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் வட மாகாண பாடசாலை அணிகள் சார்பில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம் என்பன பங்குபற்றவுள்ளன. (ங-86)



தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொ[illegible] பெற்றுக்கொண்ட நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர்கள். (ங-23)

# இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

நெடியகாடு விளையாட்டுக் கழகம் எதிர் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்

பி.ப. 4.30 மணிக்கு

கருணாகரன் விளையாட்டுக் கழகம் எதிர் குடத்தனை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று , இன்று வியாழக்கிழமை கற் கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ங-23-8)

# மைக்கல், சேவியர் அணிகள் வீழ்த்தின எதிரணிகளை

யாழ்ப்பாணம், செப்.6

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களின் சென். மைக்கல் அணியும், சக்கோட்டை சென். சேவியர் அணியும் வெற்றியீட்டியுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற போட்டியில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இரு அணிகளும் சமபலத்தோடு மோதிக் கொண்டன. மாறி மாறி இரு அணி வீரர்களும் கோல்களை அடித்து அசத்த, பார்வையாளர்கள் தரப்பில் உற்சாகம் பீறிட்டது. ஆயினும் அண்ணா சிலையடி அணியினரின் பலவீனமான பகுதிகளுக்கூடாக ஊடறுத்த சென். மைக்கல் அணி மேலும் இரு கோல்களை அடித்து முன்னிலை பெற்றது. இதனால்ஆட்ட நிறைவில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் அண்ணாசிலையடி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றியைத் தனதாக்கியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆரம்பத்தில் இருந்தே சக்கோட்டை சென். சேவியர் விளையாடடுக்கழக அணி வீரர்களின் ஆதிக்கமே மைதானத்தில் மேலோங்கியிருந்தது. இமையாணன் மத்திய அணியின் வீரர்கள் முன்னேறி தாக்குவதை தடுத்து, எதிர் அணியினர் கோல்களை அடிக்க முடியாதபடி தடுப்பாட்டத்திலேயே ஈடுபட்டனர். ஆயினும் இமையாணன் மத்திய அணியின் வியூகங்களை உடைத்தெறிந்து கொண்டு உள்நுழைந்த சென். சேவியர் வீரர்கள் இடையிடையே கோல்களை அடித்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினர். இறுதியில் 4:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை சக்கோட்டை சென். சேவியர் அணி வீழ்த்தி வெற்றியீட்டியது. (ங-23)

# மயிலங்காடு ஞானமுருகனுக்கு வெற்றி




யாழ்ப்பாணம், செப்.6

யாழ். உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் நேற்று புதன்கிழமை இடம்பெற்றஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாடடுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் தரவரிசை வெளியீடு சங்கா தொடர்ந்தும் முதலிடம்



சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நிறைவடைந்துள்ளதை அடுத்தே புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலில் இலங்கையின் குமார் சங்ககார துடுப்பாட்டத்திலும், தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன் பந்துவீச்சிலும் தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்தத் தொடரில் இந்திய அணி சார்பாகச் சிறப்பாகச் செயற்பட்ட ரவிச்சந்திரன் அஷ்வின் 18 ஆவது இடத்திலும், பிரக்ஜான் ஓஜா 14 ஆவது இடத்திலும், மகேந்திரசிங் டோனி 36 ஆவது இடத்திலும், விராத் ஹோக்லி 35 ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெங்களூர் டெஸ்ட்டில் சிறப்பாகச் செயற்படாத சச்சின் டெண்டுல்கர் 5 இடங்கள் பின்னேறி 16 ஆவது இடத்திலும், விரேந்தர் சேவாக் 23 ஆவது இடத்திலும், கௌதம் கம்பீர் 38 ஆவது இடத்திலும் உமேஷ் யாதவ் 48 ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

நியூசிலாந்து அணி சார்பாக ரோஸ் ரெய்லர் 6 இடங்கள் முன்னேறி 12 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

## வெளியிடப்பட்டுள்ள புதிய தரப்படுத்தல்கள்:

துடுப்பாட்டம்:

1. **குமார் சங்ககார**
2. **ஹசிம் அம்லா**
3. **ஷிவ்நரின் சந்தர்போல்**
4. **ஜக்ஸ் கலிஸ்**
5. **ஏ.பி.டி.வில்லியர்ஸ்**
6. **மைக்கல் கிளார்க்**
7. **கிரேம் ஸ்மித்**
8. **யுனிஸ் கான்**
9. **அஷார் அலி**
10. **கெவின் பீற்றர்சன்**

பந்துவீச்சு:

1. **டேல் ஸ்ரெய்ன்**
2. **வேர்ணன் பிலாந்தர்**
3. **சயிட் அஜ்மல்**
4. **ரங்கன ஹேரத்**
5. **ஜேம்ஸ் அன்டர்சன்**
6. **பென் ஹில்பன்ஹோஸ்**
7. **பீற்றர் சிடில்**
8. **ஸ்ருவேர்ட் ப்ரோட்**
9. **மோர்னி மோர்க்கல்**
10. **கேமர் ரோச்**

# பீற்றர்சன் மீண்டும் வரவேற்கப்படுவார்



இங்கிலாந்தின் சர்ச்சைக்குரிய அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் மீண்டும் இங்கிலாந்து அணிக்கு வரவேற்கப்படுவார் என்று இங்கிலாந்து அணியின் இயன் மோர்கன், ரவி போப்பாரா ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது இங்கிலாந்து அணியில் மீண்டும் இணைய விரும்பும் கெவின் பீற்றர்சனுக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளதாகக் கருதப்படுகிறது.

இங்கிலாந்தின் அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ரோரஸ் மற்றும் சக வீரர்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும், இங்கிலாந்து அணியின் தலைவருக்கு எதிராக தென்னாபிரிக்க வீரர்களுக்குக் குறுஞ்செய்திகளை அனுப்பியமை காரணமாகவும் கெவின் பீற்றர்சன் இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். உலக 'ரி-20' தொடருக்கான இங்கிலாந்து அணியிலும் கெவின் பீற்றர்சனுக்கு இடம் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த இயன் மோர்கன், அனைவரும் கெவின் பீற்றர்சன் மீண்டும் இங்கிலாந்து அணி சார்பாகப் போட்டியில் பங்குபற்றுவதை விரும்புகிறார்கள் எனத் தான் எண்ணுவதாகவும், பொதுமக்கள் கெவின் பீற்றர்சன் விளையாடுவதைப் பார்ப்பதை விரும்புவதாகவும், ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகமும் கெவின் பீற்றர்சனை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் இயன் மோர்கன் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ரவி போபாரா, இங்கிலாந்துச் சீருடையில் கெவின் பீற்றர்சனை மீண்டும் காண்பது சிறப்பாக இருக்கும் எனவும், அவர் அற்புதமான வீரர் எனவும், அவரது பிரச்சினைகள் தீர்ந்து அவர் மீண்டும் இங்கிலாந்து அணி சர்பாகப் போட்டியில் பங்குபற்றுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராகப் பதவி வகித்த அன்ட்ரூ ஸ்ரோஸிடமே கெவின் பீற்றர்சனுக்கு முரண்பாடுகள் காணப்பட்டதோடு, தற்போது [illegible] ஓய்வு பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5)



# ஓய்வைத் திணிக்க வேண்டாம் அவரே தீர்மானிக்கட்டும்

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரும் உலக சாதனையாளருமான சச்சின் டெண்டுல்கர் எப்போது ஓய்வுபெற வேண்டும் என்பதை சச்சின் டெண்டுல்கர் மாத்திரமே தீர்மானிக்க வேண்டும் எனவும், வேறு யாரும் அதைத் தீர்மானிக்க முடியாது எனவும் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளெய்ன் மக்ராத் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பெரியளவிலான ஓட்டங்களைக் குவிக்கத் தடுமாறி வரும் சச்சின் டெண்டுல்கர், அண்மையில் நடைபெற்று முடிந்த நியூசிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடரிலும் தடுமாறியிருந்தார். அந்தத் தொடரில் ஓர் அரைச்சதத்தினையும் அவர் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக சச்சின் டெண்டுல்கர் ஓய்வுபெற வேண்டும் என்ற கோரிக்கை பொதுவாக எழுப்பப்பட்டு வருகிறது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கிளெய்ன் மக்ராத், சச்சின் டெண்டுல்கர் இன்னமும் மிகச்சிறப்பான துடுப்பாட்ட வீரராக இருப்பதாகத் தான் கருதுவதாகவும், அவர் தொடர்ந்தும் சிறப்பாக விளையாடி வருவதாகவும் தெரிவித்தார்.

நியூசிலாந்திற்கெதிரான டெஸ்ட் ஆட்டத்தின் போது சச்சின் டெண்டுல்கர் துடுப்பெடுத்தாடியதைத் தான் பார்த்ததாகவும், அவர் சிறப்பாக ஆடுவதாக உணர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே சச்சின் டெண்டுல்கர் ஓய்வுபெற வேண்டுமா என்ற கேள்விக்கு அதை சச்சினிடமே விட்டுவிடுங்கள் என்பதையே பதிலாக வழங்க முடியும் எனத் தெரிவித்த கிளெய்ன் மக்ராத், எப்போது ஓய்வுபெற வேண்டும் என்பதை அவர் அறிவார் எனவும் தெரிவித்தார்.

ஒரு துடுப்பாட்ட வீரராக சச்சின் டெண்டுல்கர் அனைத்தையும் சந்தித்துள்ளதாகத் தெரிவித்த கிளெய்ன் மக்ராத், அவரது துடுப்பாட்டத்தில் ஏதும் மாற்றங்கள் தேவைப்படுவதாக சச்சின் உணர்ந்தால், தேவையான மாற்றங்களை அவர் ஏற்படுத்துவார் எனவும் கிளெய்ன் மக்ராத் மேலும் நம்பிக்கை தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தை வென்றெடுத்தது இந்தியா

நேரு கிண்ண உதை பந்துத் தொடரில், இந்திய அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதித்தது. நேற்று முன்தினம் நடந்த விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் கமரூனை 'பெனால்டி ஷொட் அவுட்' முறையில் 5-4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

டில்லியில், 15 ஆவது நேரு கிண்ண சர்வதேச உதைபந்து தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் 'பீபா' தரவரிசையில் 168 ஆவது இடத்தில் உள்ள இந்தியா, 59 ஆவது இடத்தில் உள்ள பலம் வாய்ந்த ஆபிரிக்க அணிகளில் ஒன்றான கமரூன் 'பி' அணியை சந்தித்தது.

**கமரூன் ஆதிக்கம்**

போட்டியின் தொடக்கத்தில் கமரூன் வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. இவர்கள் அதிக நேரம் பந்தை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். ஆட்டத்தின் 19 ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பிரி ஹிக்' வாய்ப்பில் இந்திய வீரர் கிலிபோர்டு மிராண்டா 'பாஸ்' செய்த பந்தை சக வீரர் கவுர்மாங்கி தலையால் முட்டி முதல் கோல் அடித்தார். இந்த மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. ஆட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில் கமரூன் வீரர் மகோன் தியரி கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதி 1-1 என்று சமநிலையில் முடிந்தது.

இரண்டாவது பாதியில் தொடர்ந்து அசத்திய கமரூன் அணிக்கு 54 ஆவது நிமிடத்தில் 'கோணர் ஹிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில் மகோன் தியரி அடித்த பந்தை கிங்யு மபோன்டோ தலையால் முட்டி கோலாக மாற்றினார். ஆட்டத்தின் 78 ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க, இந்திய தலைவர் சுனில் சேத்ரி மின்னல் வேகத்தில் பறந்தார். இவரை கமரூன் கோல் காப்பாளர் நிகசி ஹோசியா முரட்டுத்தனமாக மடக்கினார். இதையடுத்து 'பெனால்டி' வாய்ப்பு வழங்கப்பட்டது. இதனை சுனில் சேத்ரி கோலாக மாற்றி நம்பிக்கையளித்தார். நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 2-2 என்று சமநிலை வகித்ததால், கூடுதலாக அரை மணி நேரம் வழங்கப்பட்டது. இதில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. இதனால் போட்டியின் முடிவு 'பெனால்டி ஷொட் அவுட்' முறைக்கு சென்றது.

இதில் இரு அணியினருக்கும் தலா 5 வாய்ப்புகள் வழங்கப்படும். போதிய அனுபவமில்லாத கமரூன் கோல் காப்பாளர் நிகசி ஹோசியாவுக்கு எதிராக இந்தியா சார்பில் ரொபின் சிங், சுனில் சேத்ரி, டென்சில் பிரான்கோ, மேத்தா ஹுசைன், கிலிபோர்டு மிராண்டா ஆகியோர் தங்களது வாய்ப்பை கோலாக மாற்றினர். கமரூன் சார்பில் அஷு டாம்பே, அவுஸ்மிலா பாபா, பால் பெபே, கிங்யு மபோன்டோ ஆகியோர் தங்களது வாய்ப்பை கோலாக மாற்றினர். கடைசி வாய்ப்பில், கமரூன் வீரர் மகோன் தியரி தவறவிட, இந்திய அணி 5-4 என்ற கோல் கணக்கில் 'பெனால்டி ஷொட் அவுட்' முறையில் வெற்றி பெற்று, கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டது.

**இரண்டாவது இடம்**

நேரு கிண்ண உதைபந்து அரங்கில் இந்திய அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக (2007, 2009, 2012) சம்பியன் பட்டம் வென்றது. இதன்மூலம் அதிக முறை கிண்ணம் வென்ற அணிகள் வரிசையில் இரண்டாவது இடம் பிடித்தது. முதலிடத்தில் நான்கு முறை (1985-88) கிண்ணம் வென்ற சோவியத் யூனியன் அணி உள்ளது.

# போல்டாகும் சச்சின்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் தொடர்ந்து சொதப்பி வருகிறார். நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் சச்சின் மிக மோசமான துடுப்பாட்டத்தால் அவதிப்பட்டார். குறிப்பாக இளம் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் அவர் திணறினார்.

3 இன்னிங்சிலும் சேர்த்து அவர் 63 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். 3 முறையும் அவர் 'கிளீன்போல்டாகி' வெளியேறினார். வழக்கமாக ஆட்டமிழந்தால் அமைதியாகச் செல்லும் சச்சின் 'ஹற்றிக் போல்டால்' மட்டை உடைப்பது போல கோபப்பட்டார். அவர் டெஸ்ட் போட்டியில் 51 முறை 'கிளீன் போல்டாகி' உள்ளார். இந்த இடத்தில் டிராவிட் 55 முறை 'கிளீன்போல்டாகி' முதலிடத்தில் உள்ளார்.

அடுத்தபடியாக அவுஸ்திரேலியாவின் அலன் போர்டர் (53 முறை) 2 வது இடத்திலும், சச்சின் 3 வது இடத்திலும் உள்ளனர். தொடர்ச்சியாக சச்சின் தடுமாறி வருவது ரசிகர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி உள்ளது.

கவாஸ்கர் உட்பட பல முன்னணி வீரர்கள் 23 வருடங்கள் விளையாடி வரும் சச்சின் ஓய்வு பெறுவது சரியாக இருக்கும் என்று நேரடியாகவும், மறைமுகமாகவும் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# வெண்கலம் வென்றது இலங்கை



மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் (பரா ஒலிம்பிக்) போட்டியில் இலங்கையைச் சேர்ந்த பிரதீப் சஞ்சய வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

'ரீ46' பிரிவின் கீழ் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியிலேயே 3 ஆம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினை இலங்கைக்காக வென்று கொடுத்துள்ளார். 'ரீ46' பிரிவு என்பது ஒரு கையில் முழங்கைக்குக் கீழ் பாதிப்புள்ள மாற்றுத் திறனாளிகளைக் குறிக்கும். (5)


**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி மேற்கு, அம்மன் வீதி, பகுத்தறிவகம் ஒழுங்கையில் 2 பரப்புகாணி கிணற்றுப்பங்குடன் உடனடி விற்பனைக்குண்டு.

தொ.பே.: 021 222 5944 (சி/3102)(5-6-7)

**COLLEGE OF CHEMISTRY**

பழம்றோட் கந்தர்மடம்

**Physics**

**A/L 2013 Day Class**

ஆரம்பம்

**07.09.2012 4.00pm**

**N.Kapilan B.sc**

(22513)(3.6.14)

**ESOL Diploma in English** City & Guilds

**U K விஸாவுக்கான A1 B1 English Courses**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Course Schedule: Mon -Tue-Wed-Thu

Duration: 2 Months (100 hours)

Time: 8.30.10.30 a.m

10.09.2012

**CITY COLLEGE OF ENGLISH**

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

143, Adiyapatham Road, Thirunelvely.

T.P: 0212220384 - 0778803887

**A/L பொருளியல் நூல்**

**பணம்**

ஆசிரியர்

வே.கருணாகரன்

(22566)(3.14)

பூபாலசிங்கம் புத்தகசாலை

அன்னை புத்தகசாலை

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி**

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் 2-4 வயதிற்குள் தம் தாய் மொழியைப் பேசப் பழகுகின்றன. 2 வருடத்திற்குள் குழந்தைகள் ஒரு மொழியைப் பேசப் பழகுகையில், பெரியவர்களான உங்களால் இன்றுவரை ஏன் ஆங்கிலத்தைப் பேசப் பழக முடியவில்லை?

இலக்கண வழியில் ஆங்கிலத்தைப் படித்தமையே காரணமாகும்.

எமது பயிற்சி வகுப்புக்களில் தமிழ்தொடர்பற்ற ஒரு வழியில் (method) மனதை ஆங்கிலத்தில் மட்டும்சிந்திக்க வைத்து அதை மற்றைய மாணவர்களுடன் பேச விடுவதன் மூலம் மிக எளிதாகவே எல்லோராலும் ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆங்கிலம் மனதிற்கு இயல்பாக்கப்படுகிறது.

எமது இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும், இம்முறை A/L எடுத்த மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், தொழில் புரிவோர், O/L எடுக்கவுள்ளோர் மற்றும் 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் 09.09.2012 இற்கு முன் நேரடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்: பிரிவு I-08-10, பிரிவு II-10-12, பிரிவு III- 01-03, பிரிவு IV- 03-05

வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்): பிரிவு I- 09-11, பிரிவு II- 11-01, பிரிவு III- 03-05

பயிற்சி நெறி முடிவில் Diploma Certificate வழங்கப்படும்

SAAMSON ENGLISH (சி/3067)(9.14) 279, ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்ப்பாணம் TEL- 077 621 4567

advt@uthayan.com

0215671111

**செங்கல் விற்பனைக்கு**

தரமான செங்கற்கள் வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு:

பிரணவன் என்ரப் பிரைசஸ்

இல.365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(22518)(5-6-7) தொ.பே.: 077 381 8799

**சல்லிகள் விற்பனைக்கு**

தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 0775890730.

(சி/3034)(3.14.6)

**ஊழியர்கள் தேவை**

சைவ உணவகம் ஒன்றிற்கு ஊழியர்கள் தேவை. மூன்று நேர உணவு, மாதாந்தம் கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதி, நிரந்தர வேலைவாய்ப்பு இவை அனைத்தும் வழங்கப்படும்.

- ★ உணவு பரிமாறுபவர்கள்
- ★ சமையலறை உதவியாளர்
- ★ பாதுகாப்பு ஊழியர்
- ★ சுத்திகரிப்பாளர் (ஆண்,பெண் இருபாலாரும்)
- ★ உதவி முகாமையாளர்
- ★ அலுவலக உதவியாளர் (ஆண்,பெண் இருபாலாரும்)
- ★ காசாளர் (ஆண்,பெண் இருபாலாரும்)
- ★ ரீமேக்கர்
- ★ சுவீட் தயாரிப்பவர்
- ★ அரையல் பகுதி மற்றும் ஏனைய சமையலறை வேலையாளர்

தொடர்புகளுக்கு:

36,38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 0777917753

(22535)(3.6.7)


**மரண அறிவித்தல்**

**திருமதி இராசமணி சங்கரலிங்கம்**



மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி சங்கரலிங்கம் நேற்று (05.09.2012) புதன்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துறை சங்கரலிங்கம் (சுப்பையா, முன்னாள் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சந்திரசேகரம்- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், சிவபாக்கியம், சிவநான சுந்தரம், சிவரா மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோத ரியும், காலஞ்சென்ற சின்னத்துறை இராசசேகரம் ஆகி யோரின் மைத்துனியும், சதாசிவம் (லண்டன்), பத்மினி (சுவிஸ்), குமுதினி ஆகியோரின் பாசமிகு தாயும், தயாழினி (லண்டன்), ஜெயபாலன் (சுவிஸ்), நேசராசா ஆகியோரின் மாமியும், யாழினி (லண்டன்), லக்ஷன் (லண்டன்) சஞ்ஜீவ் (சுவீஸ்), கார்த்திகா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.09.2012) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனத்திற்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிவகிரி" மாதனை, பருத்தித்துறை

தகவல் ச.சதாசிவம் (மகன்)

(சி/3112)(3.5)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org